பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-119

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 18<br>Vol : 18 | இதழ் : 01<br>Issue : 01 | www.ncbhpublisher.in | ஏப்ரல் 2025<br>April 2025 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |




**பேசாப் பொருளை உரத்துப் பேசும் வரலாற்று ஆவணம்**
- கண. குறிஞ்சி

**நந்தலாலா எனும் தனிப்பேராளுமை**
- ஆதவன் தீட்சண்யா

**தூங்கஞ் செட்டியூருக்கு 'புலியூரால்' சூட்டப்பட்டிருக்கும் மகுடம்**
- சி.எம்.முத்து

18.03.25 அன்று தில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தில் சிறப்புநிலைத் தமிழ்த்துறையும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து ஒருங்கிணைத்த “சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியத்தின்” இரண்டாம் பதிப்பு வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. இதில் மக்களவை உறுப்பினர்கள் முனைவர் தொல். திருமாவளவன், முனைவர் துரை. ரவிக்குமார், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட், தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன், பேராசிரியர் அறவேந்தன் மற்றும் நூலாசிரியர்களும் கலந்து கொண்டனர்.





## நியூ செஞ்சுரியின் இம்மாத வெளியீடு

# இறையன்பு
## ஓராண்டு உரைகள்

கெட்டி அட்டை
1800 பக்கங்கள்
4 தொகுதிகள்
ரூ 1500/–






கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 18 இதழ் - 01 - ஏப்ரல் 2025*



ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

ஆசிரியர் குழு

*க.சந்தானம்*
*பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்*
*முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்*
*முனைவர் ந.முத்துமோகன்*
*முனைவர் மு.இராமசுவாமி*
*முனைவர் நா.இராமச்சந்திரன்*
*முனைவர் பா.ஆனந்தகுமார்*
*முனைவர் ஞா.ஸ்டீபன்*
*ப.கு.ராஜன்*
*முனைவர் இரா.அறவேந்தன்*
*முனைவர் இரா.காமராசு*
*முனைவர் உ.அலிபாவா*

இதழ் வடிவமைப்பு

***கா. குணசேகரன்***



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


உள்ளே...


1. புரட்சியாளரும் புத்தகமும் — ஆசிரியர் குழு ........ 04
2. படித்துப் பாருங்களேன் — ஆ.சிவசுப்பிரமணியன் ........ 06
3. அறிவியல் தமிழ் முன்னோடி பேனா (பெ.நா.) அப்புசுவாமி — டாக்டர் சு.நரேந்திரன் ........ 12
4. பேசாப் பொருளை உரத்துப் பேசும் வரலாற்று ஆவணம் — கண. குறிஞ்சி ........ 16
5. தமிழ் மக்கள் வரலாறு நூல்கள் 25 — கி. இளங்கோவன் ........ 22
6. புதிய எல்லையை நோக்கி — பாவண்ணன் ........ 27
7. உலகம் வியந்த, உள்ளூர் படிக்க மறந்த நூல் — க. பழனித்துரை ........ 30
8. அரிதாய்த் தோன்றிய அணிந்துரைச் செல்வர்! — மெய்ஞானி பிரபாகரபாபு ........ 34
9. அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் 100 தொகுதிகளில் — மா. சிவகுமார் ........ 38
10. நந்தலாலா எனும் தனிப்பேராளுமை — ஆதவன் தீட்சண்யா ........ 43
11. தூங்கஞ் செட்டியூருக்கு 'புலியூரால்' சூட்டப்பட்டிருக்கும் மகுடம் — சி.எம்.முத்து ........ 45
12. இயக்கமும் இயங்கியலும் — முனைவர் நா.சுலோசனா ........ 49
13. 'கல்' சிற்பி 'சொல்' சிற்பி ஆன கதை — இரா.காமராசு ........ 52
14. சென்னை மாகாணத்தின் கடைசி முதல்வர்.... — முனைவர் கோ. ஜெயக்குமார் ........ 55
15. தமிழ் யாப்பியல்: பாவாணர் பங்களிப்புகள் — சி. இளங்கோ ........ 58
16. ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வாதாரம் — ஆர்.பிரமிளா & முனைவர் கோ.சுரேஷ் ........ 62
17. எஸ். அர்ஷியாவின் படைப்புலகம் — ரா.ரமேஷ் & சே.பாலகிருஷ்ணன் ........ 66
18. Press Start: Gamified Solutions for Elevating Educator Professional Development — Akshaya M. ........ 71







# புரட்சியாளரும் புத்தகமும்

உலகெங்கும் புரட்சியாளர்களுக்கும் புத்தகங்களுக்கும் அணுக்கமான உறவு இருந்து வந்துள்ளது.

உண்மையான புரட்சியாளர்கள் எவரும் மேலோட்டமானவராக இருப்பதில்லை. ஆழ்ந்த அரசியல் ஞானமும், விசாலமான பொது அறிவும் மிக்கவர்களாக விளங்குகின்றனர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் விடிவெள்ளியாக விளங்கிய பகத்சிங் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை என்பதோடு சிறந்த முன்னுதாரணமாக விளங்கியுள்ளார்.

பகத்சிங் பள்ளி மாணவனாக இருந்தபோது தனது 14ஆவது வயதில் தனது தாத்தாவுக்கு எழுதிய 14-11-1921ஆம் தேதியிட்ட கடிதத்தில் ‘நான் ஒரு பழைய புத்தகம் ஒன்றைக் குறைந்த விலைக்கு வாங்கியுள்ளேன்’ என்ற ஒரு வரியும் இடம் பெற்றுள்ளது.

பகத்சிங் சிறுவயதுப் பாலகனாக இருந்த காலகட்டத்தில் அவனது தாத்தாவும், தந்தையும் சித்தப்பாக்கள் இரண்டு பேரும் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு சிறை சென்றவர்கள் என்பதோடு அவர்களின் இல்லமே இந்திய அளவில் செயல்பட்டுவந்த தீவிர விடுதலைப் போராட்டப் புரட்சியாளர்களின் வேடந்தாங்கலாக விளங்கியுள்ளது. அவர்களுள் பலர் தேசப்பற்றையும் சமூக உணர்வையும் தூண்டக்கூடிய நூல்களைப் பதிப்பித்த புரட்சிகரப் பதிப்பாளர்கள். அவர்களிடம் அக்காலத்தில் தடைசெய்யப்பட்ட நூல்கள் பல இருந்தன.

அத்தகைய தனித்துவம் மிக்க நூல்களைப் பார்க்கவும், அந்நூல்களின் உள்ளடக்கம் பற்றி அதனைப் பதிப்பித்த, பரப்பிய புரட்சியாளர்கள் தனது இல்லத்திலேயே தங்கியிருந்தபோது அவர்களிடமே நேரடியாகக் கதைகதையாகச் சொல்லக் கேட்கவும் வாய்ப்பைப் பெற்றவன் பகத்சிங். பகத்சிங்கின் சித்தப்பாக்களான அஜித்சிங்கும், ஸ்வரன்சிங்கும் அத்தகைய அறிவார்ந்த புரட்சியாளர்கள்.

அறிவை விரிவு செய்துகொள்ள வேண்டும் என்ற வேட்கையும், அரசியல் – பொருளாதாரம் – தத்துவம் – இலக்கியம் – வரலாறு – அறிவியல் நூல்களை வாசிக்க வேண்டுமென்ற உணர்வும் இயற்கையாகவும் இயல்பாகவும் பகத்சிங்கிடம் தொடக்க காலத்திலிருந்தே காணப்பட்டது. குடும்பச் சூழலும் பின்புலமும் பகத்சிங்கின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் விதத்தில் அமையப்பெற்றது.

தூக்கிலிடப்படுவதற்கு எட்டு மாதங்களுக்கு முன்பு லாகூர் சிறையில் அடைப்பட்டிருந்த நிலையில் 24-07-1930ஆம் தேதியிட்ட கடிதம் ஒன்றினை தனது நண்பன் ஜெயதேவ் குப்தாவுக்கு எழுதியுள்ளான் பகத்சிங்.

அக்கடிதத்தில் லாகூரிலுள்ள துவாரகதாஸ் நூலகத்திலிருந்து 'இராணுவக்கொள்கை', 'மனிதன் ஏன் சண்டையிடுகிறான்', 'பணியில் சோவியத்', 'இரண்டாம் அகிலத்தின் வீழ்ச்சி', 'லெஃப்ட்விங் கம்யூனிஸம்', 'பரஸ்பர உதவி', 'ஃபிரான்சில் உள்நாட்டு யுத்தம்', 'நிலங்கள் தொழிற்சாலைகள் மற்றும் பட்டறைகள்', 'ரஷ்யாவில் நிலப்புரட்சி', 'ஒற்றன்' ஆகிய 10 நூல்களை தன்னைப் பார்க்க சிறைக்கு வரவுள்ள தனது தம்பி குல்பீர் மூலம் கொடுத்தனுப்பக் கேட்டுக் கொண்டுள்ளான்.

இந்த நூல்களுடன் பஞ்சாப் பொது நூலகத்திலிருந்து புக்காரின் எழுதிய 'வரலாற்றியல் பொருள்முதல்வாதம்' என்ற நூலையும் கொடுத்தனுப்பக் கோரியுள்ளான்.

போர்ஸ்டல் சிறையிலுள்ள தோழர்கள் கடும் புத்தகப்பஞ்சத்தை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கும் சுகதேவின் சகோதரன் மூலம் புத்தகங்களைக் கொடுத்தனுப்பவும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளான்.

ஒருவர் என்னென்ன நூல்களை வாசிக்கிறார், எத்தகைய புத்தகங்களைப் படிக்கிறார் என்பதை வைத்தே அவர்களின் சிந்தனைப் போக்கையும் அறிவாற்றலையும் ஓரளவு அறிந்து கொள்ள முடியும்.

லாகூரிலிருந்த 'துவாரகதாஸ் நூலகம்' லாலாலஜபதிராய் அவர்களால் தொடங்கப்பட்டது. கல்லூரிகள் சூழ்ந்த பகுதியில் அந்நூலகம் உள்ளது. அந்நூலகத்தின் அருகிலிருந்த தேசியக் கல்லூரியில்தான் பகத்சிங்கும் அவரது சில தோழர்களும் படித்தனர்.

அந்நூலகத்தின் நூலகராக விளங்கிய ராஜாராம் சாஸ்திரி சிறந்த உணர்வாளர். பகத்சிங்கின் நெருங்கிய நண்பர். ஒரு நூலகருக்கான இலக்கணமாக விளங்கினார். பிற்காலத்தில் அவரும் விடுதலைப் போராட்டத்தில் பல்லாண்டுகள் சிறையில் இருந்தவர்.

'இந்திய இளைஞர்களின் எழுச்சி நாயகன்' என்கிற அளவுக்கு உயர்ந்ததற்கு விடுதலைப் போராட்டவீரர், புரட்சியாளர், புரட்சிகர அமைப்புகளைத் தோற்றுவித்து வழிநடத்தியவர் என்ற பல காரணங்கள் இருப்பினும் அவர் ஒரு மிகத் தேர்ந்த வாசகர், புத்தகங்களால் புத்தெழுச்சி பெற்றவர், நூலகங்களை முறையாகவும் முழுமையாகவும் பயன்படுத்தியவர் என்பவையே அடிப்படைக் காரணங்களாக இருந்துள்ளன.

புத்தகங்கள், நூலகங்கள் அரசியல் துறையில் மட்டுமல்ல – விடுதலைப் போராட்டக்காலத்தில் மட்டுமல்ல அனைத்துத் துறைகளிலும் அனைத்துக் காலகட்டங்களிலும் முத்திரை பதிக்கத்தக்க முக்கியத்துவம் பெற்றிருந்ததோடு சமூக – பொருளாதார – பண்பாட்டு மாற்றங்களுக்கும் ஏற்றங்களுக்கும் மிகச்சிறந்த பங்களிப்பைச் செலுத்தியுள்ளன. செலுத்தி வருகின்றன.

இதற்கு பகத்சிங் உதாரணம் பல்லாயிரங்களில் ஒன்று. துறைதோறும் பல்லாயிரவர் இவ்வாறு புத்தகங்களால் புத்துணர்வு பெற்றுள்ளனர். பெற்றும் வருகின்றனர்.

தனியார் அமைப்புகளும் ஆர்வம்மிக்க தனிநபர்களும் பல இடங்களில் நூலகங்களை உருவாக்கி சிறப்புற நடத்தி வருகின்றனர்.

மத்திய – மாநில அரசுகள் நாடு முழுவதிலுமுள்ள நூலகங்கள் உயிர்த்துடிப்போடு இயங்கும் வகையில் ஆவன செய்ய வேண்டும். நூலகங்கள் இல்லாத ஊரே இல்லை என்ற நிலை உருவாக வேண்டும். உருவாக்கப்படும் நூலகங்கள் அனைத்தும் அதற்குரிய இலக்கணத்தோடு இயங்கும் வகையில் தனிக்கவனம் செலுத்தப்படவேண்டும்.


பல பள்ளி–கல்லூரி நூலகங்கள் உயிரோட்டத்தோடு இயங்குவதில்லை. கல்வித்துறை, கல்வி நிலைய நிர்வாகம், ஆசிரியர்கள் அனைவருமே சேர்ந்து மாணவர்களிடையே வாசிப்பை வசப்படுத்துவது குறித்து சிந்திப்பதும் செயல்படுவதும் இன்றைய காலத்தின் தேவையாகும்.

●

**ஆசிரியர் குழு**

# படித்துப் பாருங்களேன்...

## ஆ.சிவசுப்பிரமணியன்




“ மணிகண்டன் புலிப்பால் கொண்டுவர காட்டிற்குப் பயணமானான். செல்லும் வழியில் வாவர் என்ற கொள்ளைக்காரனைச் சந்தித்தான். ஐயப்பனுடன் போரிட்டுத் தோற்ற அவன் அவரது நண்பனாகவும், நம்பிக்கைக்குரிய படை அதிகாரியாகவும் மாறினான். ”

சபரிமலை (கேரளக் கோவில் ஒன்றின் சமூக வரலாறு)
Jitheesh P.M (2022) Sabarimala : Social History Of a Temple in Kerala.
left Word Books. New Delhi 110008.

**மார்ச் 2025 இதழின் தொடர்சி:**

மலைநாடு என்று அழைக்கப்பட்ட கேரளம் அதற்கேற்றாற் போன்று காடுகள், சோலைகள் என்பனவற்றை மிகுதியாகக் கொண்டிருந்தது. இவற்றைக் காவு என்ற பெயரில் அழைத்துள்ளனர். தாம் வழிபடும் கடவுளர்க்கு இக் காவுகளை இருப்பிடமாக்கியதுடன் அக்கடவுளர்களின் பெயராலேயே சர்ப்பக்காவு, அய்யப்பன்காவு, பகவதிகாவு, முண்டையன்காவு என்றழைத்துள்ளார்கள். காவுகளைச் சுற்றி வாழும் மக்களாலேயே காவுகள் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இதற்கேற்ப அய்யப்பன் பெயரால் அமைந்த காவும் அப்பகுதி மக்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.1950ஆவது ஆண்டுவரை இம்முறையே இருந்துள்ளது. இருப்பினும் அப்பகுதியை ஆள்வோர் அதன் புரவலர்களாகவும் பாதுகாவலர்களாகவும் விளங்கியுள்ளனர். கேரளம் முழுமைக்குமான கடவுளாக அப்போது அவர் இல்லாமையால் கேரளத்தின் பண்டைய இடைக்காலச் சான்றுகள் எவையும் அவரைக் குறித்து இல்லை.

சமஸ்கிருத நூல்களில் ஐயப்பன் குறித்த பதிவு 19 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த பூதநாத உபாக்கியானம்(Bhutanathaupakhyanam) என்ற நூலில்தான் முதல் முறையாகக் காணப்படுவதாக ராதிகா சேகர் என்ற சமய ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்து புராண மரபுகள் போன்று ஐயப்ப வழிபாட்டு மரபு வட இந்தியாவில் காணப்படவில்லை என்பது அவரது கருத்தாக உள்ளது. கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு என்ற மூன்று மாநிலங்களுக்குள்ளேயே ஐயப்ப வழிபாடு நிலைபெற்றுள்ளது. எம். என். சீனிவாஸ் என்ற சமூகவியலாளர் ஐயப்பன் தென் இந்தியத் தெய்வம் என்கிறார். மேலும் ஐயப்ப வழிபாடானது கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களில் காணப்படவில்லை என்கிறார். அத்துடன் குடகுப் பகுதி, மங்களூருக்குத் தெற்கிலுள்ள மேற்குக் கடற்கரைப் பகுதி ஆகியவற்றுடன் ஐயப்ப வழிபாடு நின்றுவிடுவதையும் சுட்டிக்காட்டுகிறார்.

ஐயப்பன் குறித்த தொன்மையான பதிவாக பத்து அல்லது பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவல்லா செப்பேடுகள் அமைகின்றன. ஐயப்பன் குறித்து பரவலாக அறிமுகமான பழமரபுக்கதை கந்தபுராணத்தில் இடம்பெறும் தர்மசாஸ்தாதான் ஐயப்பன் என்பதாகும். ஆனால் தொல்லியல் அறிஞர் கோபிநாத் ராவ் இக்கருத்தை ஏற்க மறுக்கிறார். சாஸ்தா (சாத்தன்)என்ற பெயர் தமிழ்நாட்டில் பரவலாக அறிமுகமான ஆட்பெயராக இருந்துள்ளது. பழைய இலக்கண நூல்களில் இப்பெயர் எடுத்துக்காட்டாகப் பயன்பட்டுள்ளது.

**ஹரிகரபுத்திரன்**

சாஸ்தாவைக் குறிக்கும் பெயர்களில் ஒன்று ஹரிகரபுத்திரன் என்பதாகும். விஷ்ணுபுராணம் என்ற சமஸ்கிருத புராண நூலில் சாஸ்தாவின் பிறப்பு குறித்த கதை இடம் பெற்றுள்ளது. இக்கதையின் சுருக்கம் வருமாறு:

தேவர்களும் அசுரர்களும் இணைந்து செயல்பட்டு பாற்கடலைக் கடைந்து அமிழ்தம்(அமுதம்) எடுத்தார்கள். பின்னர் அதைப் பகிர்ந்து கொள்வதில் இவர்களுக்கிடையில் பிணக்கு ஏற்பட்டது. இதைப் போக்கும் வழிமுறையாக விஷ்ணு அழகான பெண்ணாக உருமாறி அமிர்தத்தைப் பறிமாறினார். இதுவே அவரது மோகினி அவதாரமாகும். மோகினியின் அழகில் மயங்கிய ஹரன்(சிவன்) மோகினியுடன் (ஹரியுடன்) உறவாடினார். இந்த உறவில் பிறந்த குழந்தை இருவரின் பெயரையும் இணைத்துக் கொண்டு ஹரிஹர புத்திரன் என்ற பெயரைப் பெற்றது. ஸ்ரீ பாகவதம், அமுசுமதாகமா(Amsumadagama) சுப்ரபகத்தாகமா (Suprabhedagama) என்ற சமஸ்கிருத நூல்களில் இச்செய்தி இடம் பெற்றுள்ளது. கோபிநாத் ராவ் இதை ஏற்க மறுக்கிறார். தமிழ்நாட்டில் நிலவிய புத்தவழிபாட்டை உள்வாங்கிய ஒன்றாக ஹரிஹர புத்திரன் உருவைக் குறிப்பிடுகிறார்.

வி.நாராயண பிள்ளை என்பவர் கோபிநாத்ராவின் இக்கருத்தை ஏற்க மறுக்கிறார். ஆரியர், ஆரியர் அல்லாத பண்பாடுகளின் இணைப்பே சாஸ்தா வழிபாடு என்கிறார். திராவிடக்கூறுகளைக் கொண்ட ஒரு வழிபாடானது நம் நாட்டில் நிகழ்ந்த இன - பண்பாட்டுக் கலப்பில் சாஸ்தா வழிபாடாக உருவாகியுள்ளது என்பது இவரது கருத்தாக உள்ளது.

**மணிகண்டன்**

யட்ச வழிபாட்டில் இருந்து உருவானதாக சாஸ்தா வழிபாட்டைக் கூறுவதுண்டு. ஐயப்பன் படிமத்தின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணியின் அடிப்படையில் மணிகண்டன் என்றழைப்பர்.

சிலர் காண்டீக யட்சா என்பதுண்டு. காண்டீக யட்சா காளைத் தலையுடன் காட்சியளிப்பார். ஆனால், ஐயப்பனுக்குக் காளைத் தலை கிடையாது. மேலும் இக் கடவுளை நிறுவும்போது இவருடன் ஸ்ரீபிரபா என்ற இவரது மனைவி சத்யாகா என்ற மகன் ஆகிய இருவரது படிமங்களுடனாவது அல்லது ஸ்ரீபூரணி, ஸ்ரீபுஷ்கலா என்ற இருமனைவியரின் படிமங்களுடனாவது நிறுவுவர். ஆனால், பிரம்மச்சாரி அல்லது பாலயோகியான ஐயப்பசாமிக்கு மனைவியர் கிடையாது.

**ஆதிவாசிகளும் அய்யப்பனும்:**

அய்யப்ப வழிபாட்டில் முக்கிய இடம்பெறும் சபரிமலையும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளும் காடுகள் என்பது பரவலாக அறியப்பட்ட உண்மைதான். இக்காட்டுப்பகுதியில் வாழும் இனக்குழுக்களில் (Tribe: ஆதிவாசி) ஒன்று மலைஅரையர். இவர்களின் குலதெய்வமாக அய்யப்பன் விளங்கியமைக்கான சில வழக்காறுகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் தமிழ்நாட்டின் நாட்டார் கடவுளர்களான அய்யனார், கருப்பசாமி என்ற இருகடவுளர்களுக்கும் அய்யப்பனுக்கும் இடையிலான உறவு குறித்தும் இந் நூல் குறிப்பிடுகிறது. அவற்றின் சுருக்கம் வருமாறு:

தமிழ்நாட்டுக் கிராமங்களின் காவல் தெய்வமாக விளங்கிவருபவர் அய்யனார். இவரும் அய்யப்பனும் ஒரே கடவுளர் என்பது ராதிகா சேகர் என்ற ஆய்வாளரின் கருத்தாகும். அய்யனாரின் உதவியாளராகவும் படைத்தளபதியாகவும் விளங்கும் தெய்வம் கருப்பசாமி. இவர் வெள்ளம், தீய சக்திகள் என்பனவற்றில் இருந்து மக்களைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. அய்யனாரும் கருப்பசாமியும் குதிரை மீது அமர்ந்த நிலையிலே உருவாக்கப்பட்டிருப்பார்கள்.

சபரிமலைப் பகுதியில் அச்சன் கோவில் செல்லும் வழியில் கருப்பசாமி கோயில் உள்ளது. சபரிமலையின் சிறப்புக்கூறான பதினெட்டாம் படி அருகிலும் கருப்பசாமி கோயில் அமைந்துள்ளது.

சபரிமலையைச் சுற்றிலும் வாழும் மலையரையர்கள் என்ற ஆதிவாசிகள் அய்யப்பன் மீது உரிமை பாராட்டுபவர்கள். அய்யப்பன் கோயில் பூசாரிகளாக அவர்களது முன்னோர்கள் (மலையரையர்கள்) இருந்துள்ளனர். தம் பாதுகாவலராக இவர்கள் அய்யப்பனைக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கும் அய்யப்பனுக்குமான நெருங்கிய உறவு குறித்து போதகர் ரிச்சர்ட்ஸ் (Rev, W.j. Richards) என்ற மேற்கத்தியர் ஒரு பதிவை எழுதியுள்ளார்.

அப்பதிவை சாமுவேல் மேட்டியர் என்ற பிரிட்டிஷ் போதகர் (Rev.Samuel Mateer) 1883இல் தாம் எழுதி வெளியிட்ட ஆங்கில நூலில் (Native Life in Travancore) அப்படியே மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். (1883: 75-77) அதன் சுருக்கம் வருமாறு:

தலானனி என்பவர் ஒரு மலையரையர். இவரது ஊர் எருமைப் பறா என்ற மலையரையர் கிராமமாகும். வேட்டை தெய்வமான அய்யப்பனின் பூசாரியாகவும் வாக்குச் சொல்பவராகவும் இருந்தார். அய்யப்பனின் தலைமைப் பீடக் கோயில் திருவிதாங்கூர் மலைப்பகுதியில் சபரிமலையில் இருந்தது. அய்யப்பனின் துணையால் அவர் பெற்றிருந்த ஆற்றல்களால் அவர் புகழ் பெற்றவராக விளங்கினார். மலையரையர்களின் அண்டைப் பகுதியில் வாழ்ந்த சோகன்கள் என்போர் அவர்மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியால் அவரைக் கொலை செய்தனர். கொலையை மறைக்க குழிதோண்டி அவரது உடலைக் காட்டில் புதைத்தனர்.

அய்யப்பனது வேட்டை நாய்களான புலிகள் தம் தலைவரின் நண்பரது உடலை. புதைத்த குழியைத் தோண்டி அவரது உடலை வெளியிலெடுத்துப் போட்டன. இதன் பின்னர் கொலை வெளிப்பட்டது. சோகன்களின் குடியிருப்பில் அம்மை நோயும் பிளேக்கும் பரவின.

இப்பதிவில் இடம் பெற்றுள்ள மீவியற்கைச் செய்திகள் ஒருபுறமிருக்க மலையரையர் என்ற இனக்குழுவிற்கும் ஐயப்பன் வழிபாட்டிற்கும் இடையிலான உறவு வெளிப்படுகிறது. வழக்காறுகள் ஏன் மாறின? என்ன நோக்கத்திற்காக மாற்றம் நிகழந்தது என்ற வினாவின் தேவை உணரப்படுகிறது.

## பௌத்தமும் ஐயப்பனும்

சாத்தன் என்பது பௌத்தத்துடன் தொடர்புடையது. அமரசிம்ஹா என்பவர் எழுதிய அமரகோஷா என்ற நான்காம் நூற்றாண்டு நூலில் 'முனீந்திர ஸ்ரீகானா' என்ற தலைப்பில் பின் வருமாறு புத்தரைத் துதித்துள்ளார்.

**சாஸ்தாமுனி;**

**சாக்கிய முனிஸ்துயா;**

**சாக்கிய சிம்ஹா;**

**சர்வர்த்த சித்ஹா;**

**சவுதோதனி சாஸ்தா**

பழமையான பௌத்த நூல்களில் சாஸ்தா என்ற சொல் ஆச்சாரியாரைக் (அறிவுரை கூறுவோர்) குறிக்கும் சொல்லாகயிருந்துள்ளது. தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் அய்யனார் என்ற சொல் அய்யப்பன் என்ற சொல்லுடன் ஒத்துள்ளது.

## பிராமணர் குடியேற்றம்

இதிகாச-புராணமரபு சார்ந்த கேரள இந்துக் கோயில்கள் பிராமணர்களின் இடப்பெயர்ச்சி கேரளத்தில் நடைபெற்ற பின்னரே கட்டப்பட்டன. கி.பி எட்டாம் நூற்றாண்டையொட்டியே இது நிகழ்ந்துள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் பிராமணக் குடியிருப்புகள் இத்துடன் உருவாயின. மலைப்பகுதிகளைவிட வளமான நன்செய் நிலங்களைக் கொண்ட சமவெளிப் பகுதிகளிலேயே பெருமளவில் பிராமணக் குடியிருப்புகள் நிகழ்ந்ததாக வரலாற்றியலர்கள் கூறுகிறார்கள். இக்குடியிருப்புகளுடன் வைதிக வழிமுறை சார்ந்த கோயில்களும் உருவாயின. இரண்டுக்கும் ஊடாக இருந்த இணக்கம் யாவரும் அறிந்ததுதான்.

## சபரிமலைக்கோவில்

நன்செய் விளைநிலங்களுக்குப் புறத்தே காட்டுப்பகுதியில்தான் சபரிமலை ஐயப்பன் கோவில் வளாகம் இடம் பெற்றுள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இது மட்டுமின்றி பல்வேறு ஐயப்பன் கோவில்கள் காவு என்றழைக்கப்பட்ட மரங்கள் அடர்ந்த சோலைகளிலேயே இடம் பெற்றிருந்தன. இதனால் இக்காவுகள் இங்கு நிறுவப்பட்ட ஐயப்பனுடன் இணைக்கப்பட்டும் ஐயப்பன் தான் எழுந்தருளியுள்ள காவுகளுடன் இணைக்கப்பட்டும் ஐயப்பன் காவுகள் என்ற அடையாளத்தைப் பெற்றிருந்தன என்று வரலாற்றியலர் கணேசன் குறிப்பிட்டுள்ளார். நல்ல கட்டிட அமைப்புடன் கூடிய பெரிய கோயில்கள் கேரளக் கிராமங்களில் அரிதாகவே காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தை "சாஸ்தா வழிபாடு புத்த சமயத்தின் எச்சம்" என்ற கட்டுரையின் ஆசிரியர் நாராயண பிள்ளையும் வெளிப்படுத்தியுள்ளார். சுற்றுச் சுவர்கள் மட்டுமே கட்டப்பட்ட திறந்தவெளியில் கூரை கூட இல்லாது மரங்களும் கொடிகளும் வளர்ந்து காவுகள் காட்சியளிக்கும் என்று எழுதியுள்ளார். (சங்க இலக்கியம் குறிப்பிடும் மன்றம் என்ற அமைப்பை இவை நினைவூட்டுகின்றன) புராணமரபில் இருந்து மாறுபட்ட வட்டார மரபைச் சார்ந்த ஒன்றாக அய்யப்பன் வழிபாட்டை இச் செய்திகள் அடையாளப்படுத்துகின்றன.

## பௌத்தமும் ஐயப்பன் வழிபாடும்

குதிரை மேல் அமர்ந்து காட்சிதரும் தமிழக நாட்டார் கடவுள் அய்யனாருக்கும், ஐயப்பனுக்கும் இடையிலான தொடர்பு குறித்து

ஆராய்வதன் அவசியம் குறித்தும் இந்நூலாசிரியர் விவாதித்துள்ளார்.

"சாத்தன் அல்லது சாத்தனார் என்னும் பெயர் 'சாஸ்தா' என்னும் வடமொழிப் பெயரின் திரிபு. சாஸ்தா என்பது புத்தருக்குரிய பெயர்களுள் ஒன்று என்பது அமரகோசம், நாமலிங்கானு சாசனம் முதலிய வடமொழி நிகண்டுகளால் அறியப்படும். எனவே, சாஸ்தா என்னும் சொல்லின் திரிபாகிய சாத்தன் என்னும் பெயர் புத்தரைக் குறிக்கும் பெயராக பண்டைக்காலத்தில் வழங்கப்பட்டு வந்தது."

"பிற்காலத்தில் 'சாத்தனார்' 'ஐயனார்' 'அரிஹர புத்திரர்' என்னும் இத்தெய்வத்தைக் கிராம தெய்வமாகச் செய்து, பண்டையப் பெருமையைக் குலைத்துவிட்டனர்" என்று மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதியுள்ளது இங்கு நினைவு கூரத்தக்கது. தமது 'பௌத்தமும் தமிழும்' என்ற நூலில் 'சாத்தனார் - ஐயனார்' என்ற தலைப்பில் விரிவான முறையில் அவர் எழுதியுள்ள ஆய்வுத் தன்மையுடன் கூடிய பின்இணைப்பில் இச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாகத் தென்இந்தியாவானது வேத மறுப்புச் சமயங்களான சமணம், பௌத்தம் ஆகியவற்றின் செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தது என்ற வரலாற்றுண்மையைக் கூறும் இந்நூலாசிரியர் கேரளத்தின் மாவேலிக்கரை, குன்னத்தூர், அம்பலப்புழை வட்டங்களில் ஏராளமான புத்தர் உருவங்கள் கிடைத்துள்ளதைச் சுட்டிக்காட்டி ஏராளமான புத்தவிஹாரங்கள் இருந்திருக்கும் என்கிறார். திருவிதாங்கூர் மாநிலத்தின் தொல்லியலாளராகப் பணியாற்றிய கோபிநாத்ராவ் குறிப்பிடத்தக்கக் கல்வெட்டுகளை வெளிக் கொணர்ந்தவர். அவரது கருத்துப்படி குறைந்தது 13ஆவது நூற்றாண்டு வரை தென் இந்தியாவில் பௌத்தம் தழைத்து வளர்ச்சியுற்றிருந்தது.

யுவான் சுவாங் (கி.பி. 602-664)என்ற சீன நாட்டுப் பயணி கேரளத்தின் மலக்குட்டம் பகுதியில் பயணித்துள்ளார். அவர் எழுதியுள்ள பயணக்குறிப்பில் பராமரிப்பின்றி சிதிலமடைந்துள்ள மலக்குட்டம் பகுதியின் பௌத்த விஹார்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர் இந்தியா வந்த காலம் கி.பி.630ஆகும். இதனால் அவர் இங்கு பயணிக்கும் முன்னரே பௌத்தம் பரவலாக இப்பகுதியில் அறிமுகமாகியிருந்தமை தெரியவருகிறது.

சபரிமலையில் ஐயப்பன் ஆலயத்தைச் சுற்றியுள்ள காட்டுப்பகுதி பூங்காவனம் என்றழைக்கப்படுகிறது. பௌத்தர்களும் சமணர்களும் தம் வழிபாட்டுத் தலத்தைப் பூக்களுடன் தொடர்புபடுத்தி அழைப்பார்கள். பௌத்த சமய மடங்களில், அறிவின் குறியீடாக வேப்பமரத்தை வளர்ப்பார்கள். ஐயப்பன் கோவில்களின் முன்பாக வேப்பமரம் வளர்க்கப்படுகிறது.

இச் செய்திகள் தவிர கே.ஸ்ரீதரமேனன் என்பவர் எழுதிய வரலாற்று நூலில் இருந்து புத்த சமயத்திற்கும் ஐயப்பன் வழிபாட்டிற்கும் இடையே காணப்படும் சில ஒற்றுமைக் கூறுகளை எடுத்துக் காட்டுகிறார். அவை வருமாறு:

- சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள், யாத்திரை மேற்கொள்ளும் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே வன்முறை மேற்கொள்ளாமை, புலால் உண்ணாமை ஆகிய விரதங்களை மேற்கொள்வதுடன் உலக இன்பங்களைத் துய்ப்பதில் இருந்து விலகி இருப்பார்கள். இவை புத்தரின் அகிம்சைக் கோட்பாடு, பற்றுகளைத் துறந்து வாழ்தல் என்பனவற்றை நினைவுபடுத்துகின்றன.
- இவ்விரத காலத்தில் சாதி வேறுபாடு பார்க்கமாட்டார்கள். இதுவும் புத்தரின் அறிவுரைக்கு உட்பட்டதுதான்.
- புத்தமதத்தின், 'புத்தம் சரணம் கச்சாமி', 'தர்மம் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி,' என்ற மூன்று சரண மந்திரங்களை நினைவூட்டுவதாக ஐயப்பன் கோவிலுக்குப் பயணிக்கும் பக்தர்கள் கூறும் சரண மந்திரங்கள் உள்ளன.
- பிரபலமான ஐயப்ப சாஸ்தா கோயில்கள் உள்ள சபரிமலை, அச்சன் கோயில், ஆரியங்காவு எனபன காட்டுப் பகுதிகளில்தான் உள்ளன. இது தனித்திருத்தலை விரும்பும் புத்த துறவிகளை நினைவுபடுத்துகின்றன.
- கூட்டு யாத்திரையானது ஐயப்பனை வழிபடுவோரை ஒன்றிணைத்து புத்தசங்கம் போன்று அமைகிறது.
- சபரிமலையில் மண்டல காலத்தில் நிகழும் மண்டல பூஜையானது அக்கோவிலில் நிகழும் முக்கிய பூசையாகும். மண்டலம் என்பது பௌத்தத்தின் தாந்திரீகத்தில் வேர் ஊன்றியுள்ள மண்டலம் என்ற கருத்தாக்கத்துடன் நெருக்கமானதாகும். தனுமகரம் என்ற மலையாளமாதம் பௌஷா என்ற வட இந்திய மாதத்திற்கு இணையானதாகும். அசோகன் பௌத்த மதத்தைத் தழுவியபின்னர், முடிதரிக்கும் விழாவைக் கொண்டாடி, பௌத்தர்கள் புனிதமாகக் கருதும் தேவனாம் பிரியா என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டான். இது நிகழ்ந்த மாதத்தில்தான் மகரவிளக்கு யாத்திரை நிகழ்கிறது.

- *பிராமணிய வழிபாட்டு நெறியைப் பின்பற்றும் சமவெளிப் பகுதியில் உள்ள கோயில்களைப் போலின்றி அனைவரையும் சபரிமலைக் கோயிலில் அனுமதிக்கும் மரபு இருந்துள்ளது. பின்னால் சாதிப் பாகுபாடின்றி பெண்களையும் வேற்று மதத்தினரையும் அனுமதிக்காத போக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது.*

**ஐயப்பனும் வாவரும்**

- *ஐயப்பன் கோவிலை வழிபடச் செல்பவர்கள் முதலில் எருமேலி என்ற ஊரில் உள்ள பள்ளிவாசலில் இடம் பெற்றுள்ள வாவர் என்ற இஸ்லாமியரின் கல்லறையை வழிபட்ட பின்னரே சபரிமலைக்குச் செல்வர். இது மிகவும் பழைமையான மரபாகும். இங்குக் குறிப்பிடப்படும் வாவர் ஐயப்பனின் நெருக்கமான நண்பராக மக்களால் கருதப்படுகிறார். இது குறித்து மக்களிடையே பல்வேறு கதைவடிவங்கள் வழக்கிலுள்ளன. அவை வருமாறு:*

*(1) பந்தாளம் பகுதியை ஆண்டுவந்த மன்னன் ஒரு நாள் வேட்டையாடச் சென்றபோது பம்பை ஆற்றின் கரையில் ஒரு கைக்குழந்தை கிடப்பதைக் கண்டான். குழந்தைப் பேறின்றி இருந்த அவன் அக்குழந்தையை எடுத்துச் சென்று மணிகண்டன் என்று பெயரிட்டு வளர்த்தான். பின்னர் மன்னனுக்கு ஒருமகன் பிறந்தான். இருப்பினும் மணிகண்டனைத் தன் மூத்தமகனாகக் கருதி வளர்த்து அவனைத் தன் வாரிசாக்கினான்.*

*இது இராணிக்குப் பிடிக்கவில்லை. நோயுற்றவள் போல் நடித்து, அரண்மனை வைத்தியரை வயப்படுத்தி புலிப்பால் மூலமாகவே இதைப் போக்கமுடியும் என்று கூறும்படிச் செய்தாள். மணிகண்டன் புலிப்பால் கொண்டுவர காட்டிற்குப் பயணமானான். செல்லும் வழியில் வாவர் என்ற கொள்ளைக்காரனைச் சந்தித்தான். ஐயப்பனுடன் போரிட்டுத் தோற்ற அவன் அவரது நண்பனாகவும், நம்பிக்கைக்குரிய படை அதிகாரியாகவும் மாறினான்.*



*(2) வாவரும் அவனது ஆட்களும் படகுகளில் வசித்தார்கள். அவ்வழியாக வரும் வணிகர்களிடமும் காயங்குளம் ஆட்சிக்குட்பட்டிருந்த கடற்கரைப் பகுதியில் வாழ்வோரிடமும் கொள்ளையடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவனது செயல்பாடுகள் காயங்குளம், கருநாகப் பள்ளி ஆகிய துறைமுகப் பகுதிகளை மையமாகக் கொண்டிருந்தன. இவ்வாறு கொள்ளையடித்ததில் பெரும்பகுதியை அவனது கூட்டாளிகளுக்கும் வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தமையால் அவனை ஆதரிப்பவர்கள் பெருவாரியாக இருந்தனர்.*

*(3) தனது பதின்ம வயதுப் பருவத்தில் சபரிக் குன்றுப் பகுதியில் உதயணன் என்ற கொள்ளையனை அழிக்கும் பணி ஐயப்பனுக்கு வழங்கப்பட்டது. இதை நிறைவேற்றும் வகையில் தனக்கு ஆதரவாளர்களைத் திரட்டி சூபி மார்க்கவாதியாகவும், மருத்துவராகவும் வாழ்ந்து கொண்டிருந்த வாவரிடம் ஒப்படைத்ததுடன் அவரைப் படை அதிகாரியாகவும் ஆக்கினார் ஐயப்பன். அத்துடன் வாவருக்காகவும் அவரது படைவீரர்களுக்காகவும் எருமேலியில் பள்ளிவாசல் ஒன்றைக் கட்ட ஏற்பாடு செய்தார்.*

*வாவரின் பரம்பரையினர் மத்திய திருவாங்கூர் மாவட்டங்களில் வாழ்கின்றனர். இவர்களுள் ஒருவரான மல்லப்பள்ளி வட்டம் பதனம்திட்டா என்ற ஊரில் வாழும் ஹாஜி ஏ.ஆர்.வாவறு முசாலியார், என்பவர் நேர்காணல் ஒன்றில் கூறிய செய்திகளின் சுருக்கம் வருமாறு:*

*நான் வாவரின் பதிமூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவன். சிலர் அவரைக் கொடுமையான போர்வீரராகவும் இதைவிட மோசமாக ஒரு கடற்கொள்ளைக்காரராகவும் சித்தரிப்பர். ஐயப்பனால் தோற்கடிக்கப்பட்ட பிறகு தமது கடந்த காலப் பாவச் செயல்களுக்கு வருந்தி ஐயப்பனின் தோழராகவும் பாதுகாவலராகவும் தம்மை மாற்றிக் கொண்டார். இது என்னுடைய முன்னோர்கள் கூறிய செய்தியாகும். ஆனால் நான் இதை நம்பவில்லை. இந்துக்கள் வாவரை சாமி என்று அழைக்கிறார்கள். அவர் ஒரு புனிதர், கேரளத்தில் அழைப்பது போல சையித் அல்லது தங்கல். வாவரும் ஐயப்பனும் நெருங்கிய நண்பர்கள். ஒரே கருத்துக்களைப் பின்பற்றியவர்கள். இருவரும் யோகம், தியானம் என்ற இரண்டையும் மேற்கொண்டவர்கள். இருவரும் உயரிய யோகிகள். யோகத்தின் வாயிலாக இருவரும் அளப்பரிய ஆற்றல்களைக் கொண்டிருந்தனர். இதைப்*

பொதுமக்கள் அற்புதச் செயல்கள் என்றார்கள். அமைதி குலைந்த பகுதிகளில் அமைதியை நிலை நாட்டுவதே ஐயப்பன், வாவர் என்ற இருவரின் குறிக்கோளாக இருந்தது. அவர்கள் மேற்கொண்ட போர் என்பது பெரும்பாலும் ஆன்மீகப் போராகவேயிருந்தது.

எருமலையைச் சேர்ந்த அப்துல்கரிம் என்பவரும் வாவரின் மரபைச் சேர்ந்தவராக உரிமை கொண்டாடுபவர். இவர் வாவரைக் குறித்து சில கருத்துக்களைக் கூறியுள்ளார். கடவுளின் நண்பன் என்ற பொருள்தரும் வாலி என்று இவர் வாவரைக் குறிப்பிடுகிறார். ஒரு வகையில் சூபி மரபைச் சார்ந்த புனிதர். அவர் வழிபாடு நடத்திக் கொண்டிருந்த போது இராணிக்காகப் புலிப்பால் தேடிவந்த ஐயப்பனைச் சந்தித்தார். இதன் பின்னர் இருவரும் நெருங்கிய நண்பர்களானார்கள். இச்செய்தியை அடுத்து ஐயப்பனுக்கும் வாவருக்கும் இடையிலான உறவுகுறித்த ஐயப்பனும் வாவரும் ஒரு பழைய பாட்டு என்ற நூலில் இடம் பெற்றுள்ள நாட்டார் பாடலின் சில பகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார். பூதம் ஒன்றிடம் இருந்து ஐயப்பனை வாவர் காப்பாற்றியதாகவும் தன்னைப் போன்றே வாவரைக் கருதும்படி ஐயப்பன் தன் தந்தையிடம் கூறியதாகவும் ஒரு வாய்மொழிச் செய்தி உள்ளதாம்.

மற்றொரு பழமரபுக் கதைப்படி வாவர் இஸ்லாமிய சமயத்தின் புனிதர். அவரது பெயர் ஹசரத் வாவர் பாபா என்பதாகும். இஸ்லாமிய சமயத்தைப் போதிக்க அவர் அரேபியாவிலிருந்து வந்துள்ளார். இன்னொரு பழமரபுக்கதையின்படி அவர் படாளம் மீது படையெடுத்து வந்தவர். அவரை எதிர்கொள்ள ஐயப்பன் அனுப்பப்பட்டார். அவர் அரேபியாவில் இருந்து வந்தவர் அல்லர். தமிழ்நாட்டில் இருந்து வந்தவர். இவ்வாறு வாவர் குறித்து ஐயப்பன் வரலாற்றிலும் நாட்டார் வழக்காறுகளிலும் பல்வேறு வடிவங்களில் இடம் பெற்றுள்ள இச்செய்திகள் வெகுமக்கள் கற்பனையையும் ஐயப்பன் வழிபாட்டின் பன்முகத் தன்மையையும் வெளிப்படுத்துவதாக உள்ளன.

வாய்மொழி வழக்காறுகள் மட்டுமின்றி ஆவணச் சான்றும் வாவரைக் குறித்து உள்ளது. சபரிமலை ஐயப்பன் கோயிலில் வாவருடைய குடும்பத்தினருக்கென்று சில உரிமைகள் உண்டு. இவை பந்தாளம் மன்னரால் வழங்கப்பட்டவை. இது குறித்து கேரள உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் மலையாளம் ஆண்டு 884 (தோராயமாக கி.பி.1708) காலத்திய ஆவணங்களை நீதிமன்றத்தில் வாவர் பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் முன்வைத்தார். நீதிமன்றம் வாவர் குடும்பத்தின் உரிமையை ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்தது. இப்போதும் சபரிமலை யாத்திரிகர்கள் எருமேலி வாவர் பள்ளிவாசலில் தேங்காய் காணிக்கையைச் செலுத்திவிட்டே சபரிமலைக்குச் செல்கின்றனர்

**கிறித்தவ உறவு**

அருத்தங்கல் தேவாலயம் என்ற கத்தோலிக்கத் தேவாலயம் கரிஞ்சாப்பள்ளி என்ற ஊருக்கு அருகில் உள்ளது. இதை வாவரின் ஊராகக் கூறுவதுண்டு. பல்வேறு சமயங்களைச் சார்ந்த சபரிமலை யாத்திரிகர்கள் தம் பயணத்தின் முடிவாக இத் தேவாலயத்தை வணங்குவதுடன் தம் மாலைகளை இத் தேவாலயத்திற்கு வழங்குவார்கள். இத் தேவாலயத்தின் குளத்தில் அல்லது அருகிலுள்ள குளத்தில் நீராடுவர். அங்கு பணியாற்றிய வெள்ளை நிற ஐரோப்பியக் குருவை நினைவுகூரும் வகையில்'வெளுத்தன் சுவாமியே சரணம் ஐயப்பா') 'அருத்தங்கல் பள்ளியே சரணம் ஐயப்பா'என்று முழக்கமிடுவர்( பள்ளி: மலையாள மொழியில் கிறித்தவத் தேவாலயத்தைக் குறிக்கும் சொல்).

இக்கத்தோலிக்கத் தேவாலயம் போர்ச்சுக்கீசிய மறைப்பணியாளர்களால் 1581இல் கட்டப்பட்டதாகும். பெரையர் பெனிகோ என்ற ஐரோப்பியர் இங்கு அருட்தந்தையாக(குரு) பணியாற்றி உள்ளார். இவரது வெள்ளை நிறம் காரணமாக 'அருத்தங்கல் வெளுத்தச்சன்' (அச்சன்: தந்தை என்ற பொருள்தரும் மலையாள மொழிச் சொல்) என்று அழைத்துள்ளனர்.

1902 இல் நெருப்பினால் சபரிமலை ஐயப்பன் கோயில் சேதமுற்றது. திருவிதாங்கூர் மன்னர் இதன் மறுசீரமைப்பிற்கு ஆணையிட்டார். மாவேலிக்கரை ஊரைச் சேர்ந்த கொச்சு தோமான் என்ற கிறித்தவர் இதற்கான ஒப்பந்தத்தைச் செய்ததுடன் நிதிநல்கையும் செய்தார்.

★ ★ ★

இதுவரை கூறிய செய்திகள் ஐயப்பவழிபாட்டில் பௌத்த மற்றும் பழங்குடிச் சமயங்களின் எச்சங்கள் உள்ளதை உணர்த்துகின்றன. அத்துடன் பரந்துபட்ட சமயத்தளத்தில் இயங்கியதையும் உணர்த்துகின்றன. ஆனால், இன்று இந்நிலையில் மாறுதல்கள் நிகழ்ந்து வைதீக சமயநெறியின் தாக்கத்திற்கு ஆட்பட்டுள்ளது. இது குறித்து அடுத்த இதழில் காண்போம்.

(தொடரும்).

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்.**



“அப்போது அப்புசுவாமியின் படம் அவர் மருமகனால் திறந்து வைக்கப்பட்டபோது, திடீரென்று மயங்கிவீழ்ந்து உயிர் துறந்தார்.”

# அறிவியல் தமிழ் முன்னோடி
# பேனா (பெ.நா.) அப்புசுவாமி



டாக்டர் சு.நரேந்திரன்

“நான் தமிழைப் பள்ளியில் முறையாகப் பயிலவில்லை; என் மனைவிக்கு ஒரு காதல் கடிதம் கூட எழுதியதில்லை. நான் எப்படித் தமிழில் எழுதுவேன்”

என்று தன் அறிவு ஏக்கத்தை வெளிப்படுத்திய பெ.நா.அப்புசுவாமி அவர்கள், தன் எழுத்து வாழ்க்கையில் எழுதிக் குவித்தவை ஏராளம். தான் எழுதிய கட்டுரைகள் ஐயாயிரம் இருக்கும் என்று பெ.நா.அப்புசுவாமியே கணக்கிட்டுக் கூறியுள்ளார். இது விந்தையிலும் விந்தை. இதை எப்படி அவரால் சாதிக்க முடிந்தது?

எழுத வேண்டுமென்ற உந்துதலும், தன் எழுத்துகளால் மக்களுக்கு அறிவியல் விழிப்புணர்வை ஊட்ட வேண்டும் என்ற வேகமும், அறிவியலைச் சாதாரண மனிதனுக்கும் கொண்டுசேர்க்க வேண்டுமென்ற அசையா முயற்சியுமே இச்சாதனைக்குக் காரணங்கள்.

ஓர் ஆத்திகக் குடும்பத்தில் பிறந்து ஆன்மீகத்தை விடவும் அறிவியலையே கூடுதலாக நம்பிய ஓர் அற்புத மனிதர் அவர். “தமிழ் மக்களிடையே தமிழ் மொழியின் மூலமாக மேற்கே மெத்த வளர்ந்து வரும் நவீன விஞ்ஞான அறிவைப் பரப்பிவந்தால் தமிழ் மக்கள் முன்னேறுவார்கள்; தமிழ்நாடும் சிறப்படையும்” என்ற எண்ணத்திற்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டார்.

### வாழ்வுயர வளர்தமிழில் அறிவியல்

அறிவியல் ஒன்றுதான் மனித வாழ்வை உயர்த்தும்; மேம்படச் செய்யும். இவ் அறிவியல் அறிவைப் பெற வேண்டுமென்றால் மூட நம்பிக்கையை முற்றிலும் நீக்கியாக வேண்டும் என்பதில் தளராத நம்பிக்கை அவருக்கு இருந்தது. அந்த நம்பிக்கையிலேயே அவர் வாழ்ந்தார். தன் வாழ்க்கை நடைமுறையையும் அவ்வாறே அமைத்துக்கொண்டார். ஆர்ப்பாட்டமில்லாத ஆரவாரமில்லாத, அறிவியல்பூர்வமான சிந்தனை அவருக்கு இருந்ததால்தான் உண்மையாகவும், நிலையாகவும், முழுமையாகவும் இத்தமிழ் இனத்தைப் பற்றி அவரால் சிந்திக்க முடிந்தது. மக்கள் தம் வாழ்வில் முன்னேற வேண்டுமென்றால், மேலை நாட்டு அறிவியல் கருத்தாக்கங்களையும், கருவிகளையும் பயன்கொண்டால் மட்டும் போதாது; உண்மையான அறிவியல் மனநிலையை, அறிவியல் விழிப்புணர்வைப் பெற்றாக வேண்டும். அவ்வாறு பெறும்போது தான் வாழ்வு செம்மை பெறும்; நாடு செழிக்கும். இதனை அவரே,

> "மக்கள் அறிவியலைக் கற்று, அறிவியல் மனநிலையைப் பெற்று, அதற்கிணங்க நடந்துவந்தால் அவர்கள் செம்மைப்பண்பு உடையவர்கள் ஆவார்கள்; நாடு செழித்து மேன்மை பெறும்"

என்று கூறுவதையும் நாம் சிந்தித்துப் பார்க்கலாம்.

### அறிவியல் கட்டுரை எழுத ஆர்வம் எப்படி ஏற்பட்டது ?

இவர் நவீன அறிவியலைத் தமிழில் எழுத ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன என்பதை அவர் மகள் திருமதி அம்மணி சுப்பிரமணியம் விளக்குகிறார். "அந்நாட்களில், சனிக்கிழமை பிற்பகல்தோறும் எங்கள் மயிலைச் சித்திரக்குள இல்லத்தில் திருவாளர்கள் டி.கே.சி., ராஜாஜி, கல்கி, பி.ஸ்ரீ., எஸ்.வையாபுரிப் பிள்ளை, டி.எல்.வெங்கட்ராமய்யர், வாஸன், ஏ.என். சிவராமன், கி.வா.ஜ., ஆர்.நாராயணஸ்வாமி ஐயர், கி.சந்திரசேகரன், கி.பாலசுப்பிரமணிய அய்யர், மு.ராகவஅய்யங்கார், அ.ராகவய்யங்கார், சீனிவாசய்யங்கார், அ.சீனிவாசராகவன், ரா.பி. சேதுப்பிள்ளை, ஆர்.வி.சாஸ்திரி, கி.ப.ராஜன் மற்றும் பல அறிஞர்கள், தமிழார்வம் கொண்ட நண்பர்கள் தமிழ் இலக்கியங்கள், தமிழ் மொழி வளர்ச்சி இவற்றைப் பற்றிய கருத்துகளைப் பரிமாறிக்கொள்வது வழக்கம். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில்தான் 'கலைமகள்' பத்திரிகை திரு. ஆர்.நாராயண ஸ்வாமி ஐயரால் தொடங்கப்பெற்று அதற்கு என் தந்தை முதற் பதிப்பாசிரியராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். அதில் என் தந்தையின் அறிவியல் கட்டுரைகளும் வெளிவந்தன. அவ்வமயம் அநேகர் இவரைப்பற்றி 'அறிவியலிலும் தமிழிலும் இவ்வளவு ஆர்வமுள்ளவர், எவ்விதம் வக்கீல் தொழிலை மேற்கொண்டார் என்று வியந்ததுண்டு.

அவர் கல்லூரியில் சமஸ்கிருத மொழியைப் பயின்றாலும், தமிழ் மொழிப் பற்றால் பின்னர்த் தமிழ்மொழியை நன்கு கற்றறிந்தார். எங்களின் குடும்ப நண்பர் திரு.வையாபுரிப்பிள்ளையும் என் தந்தையும் தினசரி இரவில் தமிழ் இலக்கியங் களையும், ஏடுகளையும் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த ஏற்பாட்டிற்காகவே அவர்கள் சொந்தவீடு கட்டும் போது சென்னை அடையாற்றில் அருகருகே நிலம் வாங்கி வீடு கட்டினர். அவருடைய ஆங்கில அறிவும், தமிழ் மொழிப் பற்றுமே பல மொழிபெயர்ப்புகளைச் செய்யத் தூண்டின. சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் மூன்றிலும் நன்கு புலமை வாய்ந்த அவர் அந்தந்த மொழியில் உள்ள சில சிறப்பான கவிதைகள், நூல்களை மொழிபெயர்த்து அவற்றின் தனிப் பட்ட சிறப்பை மற்றவர்களும் அறிந்து பாராட்ட வாய்ப்பளிக்க வேண்டும் என விரும்புவார்" என்று கூறுகிறார்.

அப்புசுவாமி தம் தாய்மொழியாகிய தமிழை முறையாகப் பயிலாவிட்டாலும், காலப்போக்கில் அதில் பயிற்சி பெற்று, அறிவியல் செய்திகளை அனைவரும் புரிந்துகொள்ளும் நடையில் தெளிவாக எழுதினார். அவரது நூற்றுக்கணக்கான அறிவியல் கட்டுரைகளும், நூல்களும், அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளன. 1917இல் தொடங்கிய தமிழ் நேசன், 1932இல் தொடங்கிய கலைமகள், 1965 முதல் வெளிவரத் தொடங்கிய இளம் விஞ்ஞானி முதலிய இதழ்கள் இவரது பல துறைசார் அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டன. குழந்தைகளும் அறிவியல் அறிவு பெற்றுத் திகழ வேண்டும் என்ற நோக்கில் அவர்கள் மனத்தில் பதியும் வண்ணம் அறிவியல் கண்டுபிடிப்புகள், அவற்றின் பயன்கள், அறிவியல் அறிஞர்கள், அறிவியல் கருவிகள், அறிவியல் வளர்ச்சி எனப் பல பொருள் பற்றிப் பல கட்டுரைகளையும், சில நூல்களையும் வெளியிட்டார். இவர் தன்னுடைய பெயரைத் தவிர பேனா, பேராசிரியர், முத்தண்ணா என்ற புனைப் பெயர்களிலும் கட்டுரைகள் எழுதுவதுண்டு.

அறிவியலைத் தமிழ் வழிப் பரப்புதல், அறிவியல் துறையில் தமிழை வளர்த்தல் என்ற இரண்டையும் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டார். தமிழில் அறிவியல் கருத்துகளை வெளியிட்டு மொழியையும், அறிவியல் அறிவையும் வளர்க்க வேண்டும் என்றார்.

"விஞ்ஞானம் என்பது புதிதாகத் தமிழ்நாட்டில் மலர்ந்த துறையாதலால் விஞ்ஞானக் கருத்துகளை வெளியிடவும், விஞ்ஞான அறிவைப் புகட்டவும் போதிய சொற்கள் தமிழில் முன்னால் இல்லை. அண்மையில் பல சொற்கள் படைக்கப்பட்டுள்ளன" என்று எழுதினார். இக்கட்டுரை 1976இல் வெளிவந்தது.

"விஞ்ஞானம் என்றால் சிறந்த அறிவு என்று பொருள். அவ்வாறு வழங்கி வந்த சொல்லுக்கு ஈடாக இந்நாளில் 'அறிவியல்' என்னும் சொல் வழங்கப்பட்டு வருகிறது'' என்று குறிப்பார். விஞ்ஞானத்துக்கு நிகரான அறிவியல் என்ற சொல் 1920களில் வந்ததாகத் தெரிகிறது. என்றாலும் இச்சொல் தமிழியக்கம் முனைப்புடன் செயல்பட்ட காலத்தில் (1930-40) பெரு வழக்கில் இடம்பெற்றது எனலாம். விஞ்ஞானம் புதியது என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. தமிழர் பண்டு தொட்டுத் தமது மண் சார்ந்த வாழ்க்கை சார்ந்த அறிவியல் தொழில்நுட்பத்தை வளர்த்து வந்தனர். கணிதம், வேளாண்மை, கட்டடக்கலை, மருத்துவம், படகுத் தொழில் எனப் பல துறைகளில் அவர்களது செயல்பாடு இருந்து வந்தது. இதை எடுத்துக்காட்டும் வகையில் எண்ணற்ற கலைச்சொற்களையும் உருவாக்கி யுள்ளனர். ஆனால் அப்புசுவாமி கருதுவதும், எழுதுவதும் மேலைத்தேய தொடர்பால் ஏற்பட்ட நவீன விஞ்ஞான அறிமுகமும் வளர்ச்சியுமாகும். அந்த விஞ்ஞானத்தைத் தமிழில், தமிழ் மக்கள் பயனுறும் வண்ணம் தர வேண்டும் என்கிற தளராத வேட்கையால் அவர்தம் வாழ்நாள் முழுதும் பாடுபட்டார். நவீன விஞ்ஞானத்தைச் சொல்லும்போது, அதற்கான கலைச்சொற்கள் தேவை என்பதை உணர்ந்தார். அவ்வகைக் கலைச்சொற்களை உருவாக்குவதோடு பிறமொழிக் கலைச்சொற்களையும் எடுத்தாளத் தயங்கக்கூடாது என்பார்.

> "நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இலக்கணப் பற்று போன்ற மனநிலைகளால் அறிவியல் சொல்லாக்கம் நேர் வழியில் செல்லவில்லை என்பது என் கருத்து"

என்றும்,

> "பிறமொழிச் சொற்களை ஏற்பதால் தமிழின் சீர்மை குன்றிவிடாது"

என்றும்,

> "உலக மொழிகள் பலவும் தத்தம் மொழி மரபுக்கேற்ப சிற்சில மாறுதல்களோடு பிறமொழிச் சொற்களை ஏற்று வழங்கி வருகின்றன"

என்றும் தெளிவுபடுத்துவார். கலைச்சொற்கள் மட்டுமின்றிப் பல பண்பாட்டுச் சொற்களும் பண்டு முதல் தமிழில் கடன் பெறப்பட்டு வந்துள்ளதை, 'மொழித்துறை பண்டமாற்று' என்ற சொல்லால் குறிப்பிடுவார்.

இன்றும்கூட தமிழில் தக்க கலைச்சொல் உருவாகவில்லை எனில் பிறமொழிக் கலைச் சொற்களைக் கடன் பெற்றுப் பயன்படுத்துவதில் தவறில்லை என்கிற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொண்டால் அப்புசுவாமியின் கருத்து அறிவியல் தன்மையானதே என்பதை உணர முடியும்.

பிறமொழிகளிலிருந்து பெறப்படும் சொற்கள் மக்கள் வழக்கில் ஒன்றிக் கலந்தாலன்றி, அவற்றுக்கு வாழ்வில்லை என்பதை, "எவ்வகைச் சொற்களும் மக்களிடையே பயின்று வந்தாலன்றி அவை மொழியில் நிலைநிற்க மாட்டா... ஆகவே, அவைகளை எல்லாம் நிரம்ப வழங்கி, நூல்களை எழுதி, மக்களுக்குத் தாம் தாமாக அளித்து வரவேண்டும். மக்களும் ஆவலோடு அவற்றை விரும்பிப் படிக்குமாறு தூண்டப்பட வேண்டும். ஆதாரமே இல்லாத மூடநம்பிக்கைகள் அழிந்தாலன்றி, புதிய நல்லறிவுக்கு இடமே இல்லை. அறிவு வளர்ந்தால் மடமை நீங்கிவிடும். அறிவு மணம் எங்கும் பரவும்" என்று கூறுவார். தமிழில் சொல்லில்லையே என்பதைக் காரணம் காட்டி அறிவியல் அறிவு பரப்புதலை நிறுத்திவிடக்கூடாது என்கிற ஆவல் இவ்வரிகளில் இழையோடக் காணலாம். ஒரு கருத்தமைவை (Concept) மக்கள் மனத்தில் பதியும்படி கூறினால் அக்கருத்தமைவும் அதற்கான கலைச்சொல்லும் பதியும். இன்று பல கலைச் சொற்களும் அவற்றுக்கான கருத்தமைவும் பரவலாக வழக்கில் இருக்கக் காரணம் அவற்றின் பயிற்சியும் பழக்கமும்தான்.

அறிவியல் விழிப்புணர்வு பெற்று அறிவியல் மனநிலை பெறுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் அப்புசுவாமி இந்த நிலை எய்தத் தமிழ் வழி அறிவியலைக் கற்க வேண்டும் என்பதை வற்புறுத்துவார். மாணவர்கள் மட்டு

மின்றி அவர்தம் பெற்றோரும் எளிய விஞ்ஞான நூற்களை – நமது தாய் மொழியில் எழுதப்பட்ட நூல்களை விரும்பிக் கற்க வேண்டும் என்பார். படிப்பது ஒரு பக்கம் என்றால், பேருரைகள் மூலம் கேட்டுப் பலன் பெறுவது மறுபக்கம் என்பார். நூல்கள் மட்டுமன்றி, இதழ்களும் இதில் நல்லதொரு பங்காற்ற வேண்டும் என்னும் அப்புசுவாமி அதைச் செயல்படுத்தியும் காட்டினார்.

### பகுத்தறிவாளர் அப்புசுவாமி

தனது முதல் கட்டுரையில் “செவ்வாயில் உயிர் இருப்பதாகக் கருதுகின்றனர். நம்மைப் போன்ற உயர்ந்த உயிர் இருக்கிறதென்பதும், நம்முன் யாரேனும் ஒரு மதத்தைச் சார்ந்தவர் தம் மதத்தினரே கடவுளின் கருணைக்குரியவரென்பதும் எவ்வளவு மதியீனம்! செவ்வாயிலுள்ளோர் எம்மதத்தினர்? அவர் கடவுளை அறிந்துளரோ? அவர் உண்டானது எப்பொழுது? பூமியிலிருக்கும் நாம் ஒரே சிருஷ்டிக்குட்பட்டும், ஜாதி மத வர்ணங்களால் பேதமடைந்தும் நாம் அனைவரும் பூமியோரே என்பதை மறந்து, சிறிய நாடுகளுக்கே உரிமை பாராட்டி, தன்னலங்கருதி ஒருவரோடொருவர் சச்சரவு செய்து வருவது அவருக்குத் தெரியுமோ?” எனப் பகுத்தறிவுச் சிந்தனைகளை அடுக்கிச் செல்கிறார்.

### அப்புசுவாமி குறித்த தொ.மு.சி.ரகுநாதன் பார்வை

புகழ்பெற்ற எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளரும், பெ.நா.அப்புசுவாமியின் நண்பருமான தொ.மு.சி.ரகுநாதன், அப்புசுவாமி அவர்களுக்கு எப்படி அறிவியலைத் தமிழில் எழுத நாட்டம் ஏற்பட்டது என்பதைக் கூறும்போது,

“அப்புஸ்வாமி அவர்களுக்கு இந்த விஞ்ஞானத் தேட்டமும் நாட்டமும் அவரது இறுதிக்காலம் வரையில் இருந்தன என்பதற்குப் பின்னரும் கூட அவர் நான் பணியாற்றி வந்த சென்னை சோவியத் செய்தித்துறை அலுவலகத்துக்கு அடிக்கடி வருவதை வழக்க மாக்கிக் கொண்டிருந்தார். அங்கு வந்து சோவியத் செய்தித்துறை மற்றும் கண்டுபிடிப்புகளைப் பற்றிய வெளியீடுகளையும், பிற விஞ்ஞான நூல்களையும் பெற்றுச் செல்வார். அப்போது விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட கலைச்சொற்களின் தமிழாக்கம் குறித்தும் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த நாங்கள் அவரோடு விவாதித்ததுண்டு. அந்த வயதிலும் கூட அவர் டீக்காக சூட்டும், கோட்டும், டையும் அணிந்துதான் வருவார். அவரை முதியவர் என்றே கருதத் தோன்றாது. ஏனெனில் அந்த வயதிலும் அவர் திடகாத்திரத்தோடும், நல்ல ஆரோக்கியத்தோடும் அத்துடன் மிகுந்த சுறுசுறுப்பும் அபாரமான நினைவாற்றலும் கொண்டவராகவே விளங்கினார். இதனால் வயதில் அவரைவிட இளையவர்களாகவிருந்த எங்களுக்கெல்லாம் அவர் மீது பொறாமையுணர்ச்சிதான் ஏற்படும். அந்த அளவுக்கு அவருக்கு விஞ்ஞானத் தேட்டத்தின், நாட்டத்தின் காரணமாகத்தான் அவர் தமது இறுதிக்காலம் வரையில் நாத்திகராக இருந்தார் என்றும், நாத்திகராக இருந்த காரணமாகத்தான் இந்த விஞ்ஞானத் தேட்டமும், நாட்டமும் அவருக்கு இருந்தன என்றும் எனக்குத் தோன்றிற்று” என்று தொ.மு.சி.ரகுநாதன், பெ.நா.அப்புசுவாமியைப் பற்றி நினைவுகூர்ந்துள்ளார்.

### இறுதி மூச்சு வரை எழுத்துப்பணி

அறிவியல் தொடர்பான புத்தகங்களைத் தனித்தும், ஜெ.பி.மாணிக்கம் போன்றோருடன் இணைந்தும் எழுதினாலும் கூட, இதழ்களில் கட்டுரைகளாக எழுதுவதன் மூலம் பரவலான வாசகர் கூட்டத்தைச் சென்றடைய முடியும் என்று நம்பியதால் அவர் தொடர்ந்து 70 ஆண்டுகள் எழுதிக்கொண்டே இருந்தார். 1986ஆம் ஆண்டு மே மாதம் கோடை வெயிலில் ‘தி இந்து’ நாளிதழுக்கு ஒரு கட்டுரையை அனுப்புவதற்குத் தபால் நிலையம் சென்றுவிட்டுத் திரும்பும்போது தனது 95ஆவது வயதில் மயங்கி விழுந்து காலமானார். இறுதி, மூச்சு வரை இதழ்கள் அவரது உயிர்மூச்சாக இருந்ததை இதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.


### நூற்றாண்டு விழா சோகம்

அப்புசுவாமியின் மருமகன் நெல்லை வழக்குரைஞர் எஸ்.ஜி.சுப்பிரமணியம், பெயர்த்தி சு.ஆனந்தி, பெயரன் சு.குமார், மருமகள் திருமதி ஜானகி நாராயணன் ஆகியோர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து அப்புசுவாமி நூற்றாண்டைக் கொண்டாடும் விதமாக ஒரு கருத்தரங்கை நடத்தினர். அப்போது பெ.நா. அப்புசுவாமி பெயரில் ரூ.50,000/- முக மதிப்பில் ஓர் அறக்கட்டளையையும் நிறுவி, அவருடைய அறிவுக் கருவூலங்களாகிய அரிய நூல்களையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு 2003ஆம் ஆண்டு திசம்பர் 31ஆம் நாள் வழங்கினர். அப்போது அப்புசுவாமியின் படம் அவர் மருமகனால் திறந்து வைக்கப்பட்டபோது, திடீரென்று மயங்கிவீழ்ந்து உயிர் துறந்தார். இதனை நான் அக்கருத்தரங்கில் கட்டுரை வழங்கியவன் என்ற முறையில் பார்த்து, கலக்கமடைந்து கண்ணீர் சிந்தியது இன்றும் என் நினைவில் நிழலாடுகிறது.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்,**
**சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்**

இந்திய விடுதலைப் போராட்டமும் கிறித்தவர்களும்
முனைவர் எம். ஏ. சேவியர் | விலை. ரூ.170/-
வெளியீடு: வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்




> பிரமலைக் கள்ளர் சட்டம் பின்னர் திருத்தப்பட்டது. ஆகவே அம்மக்கள் ஜார்ஜ் ஜோசப்பிற்கு 'ரோசாப்பூ ராசா' என்ற பட்டம் கொடுத்து அவரை அழைத்தனர்.

# பேசாப் பொருளை உரத்துப் பேசும் வரலாற்று ஆவணம்



**கண. குறிஞ்சி**

இந்தியத் துணைக்கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 12% கிறித்தவ மக்கள் உள்ளனர் எனவும், அம்மக்களின் மொத்த எண்ணிக்கை 90 இலட்சத்திற்கும் அதிகம் எனவும் 2020 மக்கள் தொகை மதிப்பீடு தெரிவிக்கிறது. இம்மக்கள் அந்நிய நாட்டைச் சார்ந்தவர்கள் அல்லர். ஆனால் இவர்களை வந்தேறிகள் எனவும், இவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் எவ்விதப் பங்கும் வகிக்கவில்லை எனவும் அண்மையில் பாஜக பொறுப்பாளர் ஒருவர் வெளிப்படையாகக் குற்றம் சாட்டியிருந்தார். முஸ்லீம்கள், கிறித்துவர்கள், கம்யூனிஸ்டுகள் ஆகிய முப்பிரிவினரும் இந்நாட்டின் எதிரிகள் என்பதும், அவர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் முக்கியக் கொள்கைகள் என்பதைப் பலரும் அறிவர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர்களுக்குப் பாதம் தாங்கியவர்கள் யார், அவர்களிடம் உதவித்தொகை பெற்றுக்கொண்டு அவர்களுக்குத் தொடர்ந்து உதவியாக இருந்தவர்கள் யார் என்பதை நாடு அறியும், நல்லோர் அறிவர்.

கிறித்தவர்கள் இந்திய மக்களுக்கு ஆற்றிய பணிகளை மனச்சான்றுள்ள எவரும் மறுக்க இயலாது. கல்வி, மருத்துவம், இலக்கியம், சமூகத் தொண்டு ஆகிய துறைகளில் அவர்கள் ஆற்றிய பணிகள் எண்ணற்றவை. தென்னாப்பிரிக்காவில் இருந்த காந்தியாரை இந்தியாவிற்கு வர வேண்டும் என வலியுறுத்தியவர் காந்தியாரின் நெருங்கிய நண்பரான சார்லஸ் பிரிர் ஆன்டுரூஸ் என்பவர்தான் எனவும், இலண்டனில் தங்கியிருந்த பொழுது காந்தியார் கிறித்தவர்களின் புதிய ஏற்பாடு நூலைப் படித்து அதனால்

ஈர்க்கப்பட்டார் எனவும், இயேசுவின் மலைச் சொற்பொழிவு அவரது வாழ்நாள் முழுவதும் அவர் மீது செல்வாக்குச் செலுத்தியது எனவும், 1887 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்ட மொத்தம் 607 உறுப்பினர்களில் 35 பேர் கிறித்தவர்கள் எனவும் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

சமயப்பணி ஆற்றுவதற்காக 1542-ஆம் ஆண்டிலேயே அருட்திரு பிரான்சிஸ் சேவியர் என்பார் போர்சுக்கல் நாட்டிலிருந்து திருநெல்வேலிக்கு வந்தார் எனத் தரவுகள் மூலம் அறிய வருகிறோம். அன்றிலிருந்து கிறித்தவ மதத்திற்கும் இந்தியாவுக்கும் -- குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கும் -- உள்ள தொடர்பு மிக நீண்டதாகும். தமிழில் முதன்முதல் நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர்கள் கிறித்துவப் பாதிரியார்கள் என்பதும், தமிழ்ப் படைப்புகள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர்கள் கிறித்தவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. எல்லிஸ், ஜி.யூ.போப், கால்டுவெல் போன்றவர்கள் தமிழ் மொழிக்குத் தந்த கொடைகளை யாராலும் மறக்க முடியாது.

இருப்பினும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் கிறித்தவர்கள் பங்களிப்புக் குறித்துப் பலரும் அறிந்திராத நிலைதான் பொது வெளியில் உள்ளது.

அக்குறைபாட்டை நீக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது முனைவர் எம்.ஏ. சேவியர் அவர்கள் எழுதி, திண்டுக்கல் வைகறை பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ள "இந்திய விடுதலைப் போராட்டமும் கிறித்தவர்களும்" எனும் நூல். இந்நூலில் இந்திய விடுதலைப் போரில் இந்திய அளவிலும் தமிழக அளவிலும் கிறித்தவர்கள் பங்கேற்றுப் போராடிய செய்திகளை அரிதின் முயன்று சேகரித்துப் பதிவு செய்துள்ளார் நூலாசிரியர் முனைவர் எம்.ஏ. சேவியர் அவர்கள். விடுதலைப் போரில் கிறித்தவர்களின் பங்கு பற்றி ஆங்கிலத்தில் பல்வேறு கட்டுரைகள் வந்துள்ளன. ஆனால், தமிழில் அந்தளவு விரிவான நூல்கள் எவையும் வந்ததாகத் தெரியவில்லை. எனவே, அதை நிறைவு செய்யத்தக்க வகையில் தரவுகளுடன் கூடிய பெட்டகமாக விளங்குகிறது இப்புத்தகம்.

1931 ஆம் ஆண்டு கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'ஆனந்தபஜார்' பத்திரிகை தனது தலையங்கத்தில், 'இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கிறித்தவர்களின் பங்கு, அவர்களது மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது மிகவும் அதிகம்' எனப் பாராட்டியுள்ளது என்ற வியப்பான செய்தியுடன் நூலில் நுழைகிறோம்..

கிறித்துவர்களின் பணிகளை ஓரிரு துறைகளில் அடக்கிவிட முடியாது. ஏறத்தாழ 25 விழுக்காடு சேவை நிறுவனங்கள் கிறித்தவர்களால்தான் நடத்தப்படுகின்றன. "நாட்டின் ஒட்டுமொத்தத் தொடக்கக் கல்வியில் 5% பிற கல்விப் பணி மருத்துவப் பணியில் 10% சமூகத்தால் கைவிடப்பட்ட அநாதைகள் மற்றும் விதவைகளைப் பாதுகாக்கும் பணியில் 25 % மன வளர்ச்சி குன்றியோர், ஊனமுற்றோர், தொழுநோயாளர் மற்றும் பால்வினை நோயாளிகளுக்கான பணியில் 30% கிறித்துவர்களால் செய்யப்பட்டு வருகிறது" எனும் புள்ளி விவரம் வியப்பூட்டுகிறது.

1578 ஆம் ஆண்டு 'தம்பிரான் வணக்கம்' என்ற நூலை முதன் முதலில் தமிழில் கொண்டு வந்தவர் ஹென்றி ஹென்ரிக்கஸ் எனும் கிறித்தவ அருட்தந்தை ஆவார். மேலும் தமிழ் போர்ச்சுகீசிய அகராதியை வெளியிட்டவரும் இவர்தான். தமிழக மக்களால் வீரமாமுனிவர் என அன்போடு அழைக்கப்படும் ஜோசப் கான்ஸ்டன்டைன் பெஸ்கி (1680 -1747) இத்தாலிய இயேசு சபைத் துறவி ஆவார். அவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு மிகவும் குறிப்பிடத்தக்கது. தமிழின் பெருமையை உலகறியச் செய்த கிறித்தவப் பெருமகனாரில் முதன்மையானவர் இவர் எனக் கூறினால் அது மிகையாகாது. 'தேம்பாவணி' எனும் கிறித்தவக் காப்பியத்தையே படைத்த அரிய தமிழ்க் கவிஞராகவும் அவர் திகழ்ந்தார். 'சதுரகராதி' எனும் நூலையும், 'தொன்னூல் விளக்கம்' எனும் இலக்கண நூலையும் அவர் இயற்றினார். தமிழ் இலக்கியத்தில் அவரை மிகவும் கவர்ந்த திருக்குறளை இலத்தீன் மொழியிலே முதன்முதல் மொழிபெயர்ப்புச் செய்த வெளிநாட்டவர் என்ற பெருமை இவருக்கு உண்டு. இராபர்ட் கால்டுவெல் (1814-1891) படைத்த 'திராவிட மொழிகளின் இலக்கணம்' எனும் அரிய நூல் வரலாற்றுத் திருப்புமுனையான அரிய நூலாகும்.

கிறித்தவப் பேரறிஞராகிய ஜி.யூ. போப் (1820-1908) அவர்கள் திருக்குறள், திருவாசகம் மற்றும் பல சிறந்த தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். முனைவர் கிரவுல், முனைவர் ஆல்பர்ட் ஸ்வைட்சர், எல்லீஸ், வின்ஸ்லோ போன்ற எண்ணற்ற கிறித்தவப் பெருமக்கள் தமிழுக்கு அளப்பரிய தொண்டினைச் செய்துள்ளனர். ஹென்றி ஹீராஸ் என்ற ஸ்பெயின் நாட்டின் ஏசுசபைப் பாதிரியார் ஒரு சிறந்த வரலாற்று அறிஞர் இந்தியாவின் தொன்மையை வெளிக்கொணர்ந்த சிந்து வெளி நாகரிகத்தில் கிடைத்த எழுத்துக்களைப் புரிந்துகொள்ள மிகவும் பாடுபட்டு உழைத்தவர். அந்த எழுத்துக்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த எழுத்துக்கள்

எனத் தனது பல ஆண்டுக்கால ஆய்வுக்குப்பின் பறைசாற்றித் தமிழ்நாட்டின் பெருமையை உலகம் அறியச் செய்த மாபெரும் அறிஞரும் இவர்தான்.

சாதித் தீண்டாமையால் ஒதுக்கப்பட்ட நாடார் சமூக மக்களுக்குச் சமூக நீதி கிடைக்கப் போராடியவர்கள் கிறித்தவ மதப் பாதிரியார்கள். தோள் சீலைப் போராட்டத்தின் மூலம் அவர்களுக்குச் சுயமரியாதையை மீட்டுக் கொடுத்தவர்கள் ஐரோப்பிய அருட் தந்தையரே! அதே போல், அயர்லாந்தைச் சார்ந்த அன்னி பெசன்ட் அம்மையார் இந்திய விடுதலைப் போரில் முக்கியப் பங்குபணி ஆற்றியதைப் பலரும் அறிவர்.

1757 ஆம் ஆண்டு பிளாசிப் போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றதிலிருந்து தனது வாதங்களைத் தொடங்குகிறார் நூலாசிரியர். பிளாசிப் போருக்குப் பின் ஆங்கிலேயர் அடித்த கொள்ளை மட்டும் 4.9 மில்லியன் பவுண்டு ஸ்டெர்லிங் என்று வரலாற்று அறிஞர்களின் ஆய்வுகள் கணக்கிட்டு உள்ளன. கி.பி. 1834 - 38 ஆண்டுகளில் ஏறக்குறைய 600 மில்லியன் பவுண்டு ஸ்டெர்லிங் அளவுக்கு ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றுள்ளனர். ஆங்கிலேயருக்கு முன் இந்தியாவை ஆண்ட பாரசீகர்களும், ஹுணர்களும், குப்தர்களும், அரேபியர்களும் முகலாயர்களும் வரி என்ற பெயரில் கொள்ளைதான் அடித்தனர். ஆனால், அவர்கள் எல்லோரும் இங்கு சுரண்டிய செல்வங்களை இந்த நாட்டிலேயே செலவிட்டார்கள். ஆனால் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் சுரண்டிய செல்வத்தை ஒன்றுதிரட்டி அவர்களது நாட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தனர் என்பது கொடுமையான, மறுக்க முடியாத உண்மையாகும்.

இத்தருணத்தில்தான் இந்திய வரலாற்றில் கோவாவில் போர்ச்சுகீசியருக்கு எதிராக 1787 இல் 'பின்டோ புரட்சி' நடைபெற்றது. கிறித்தவ சமயத்தைச் சார்ந்த இரண்டு பாதிரியார்கள் அப்புரட்சியைத் தலைமையேற்று நடத்தினர். பின்டோ என்ற குடும்பத்தைச் சேர்ந்த அருட்தந்தை கெய்தானோ பிரான்சிஸ்கோ கூட்டோ மற்றும் அருட்தந்தை ஜோஸ் அந்தோணியோ கொன்சால்வஸ் ஆகியோர்தான் அந்த நாட்டுப்பற்று மிக்க போரினைத் தொடங்கியவர்கள். ஆங்கிலேயர்கள் மக்களிடம் வசூலித்த வரிகளுக்கு எதிராக மக்கள் இயக்கத்தை இவர்கள் ஒருங்கிணைத்தனர். கோவா பகுதியிலிருந்த அருட்தந்தை பின்டோ வீட்டிலிருந்து அப்புரட்சியைத் திட்டமிட்டனர். ஆகவேதான் இது 'பின்டோ புரட்சி' என்று அழைக்கப்படுகிறது. கோவாவை அப்பொழுது ஆண்டு கொண்டிருந்த போர்ச்சுக்கீசியப் பேரரசு அனைத்துப் போராளிகளையும் கைது செய்து சிறையில் அடைத்தது. இவர்களில் 17 அருட்தந்தையர்களும் அடங்குவர் என வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

அருட்தந்தையர்கள் உட்பட 47 தலைவர்களை அந்த இராணுவ வீரர்கள் தேச துரோகச் சதிகாரர்கள் என்று குற்றம் சாட்டி, குதிரைகளின் கால்களில் அவர்களைக் கட்டி வைத்துத் தெருக்களில் இழுத்துச் சென்றனர். அவர்களின் கைகள் இரண்டையும் வெட்டியபின், பொது இடங்களில் அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்று, அவர்களது தலைகளைத் துண்டு துண்டாகக் கொய்து, பொது இடங்களில் மக்களை அச்சுறுத்துவதற்காகத் தொங்க விட்டனர்.

ஆங்கிலேயர்களும், போராடியவர்களும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்த பொழுதும், பாதிரியார்கள் சமரசமின்றி ஆதிக்கவாதிகளை எதிர்த்துப் போராடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே போன்றதொரு மக்கள் எழுச்சிதான் 'முண்டா புரட்சி' எனப்படுவது. இன்றைய பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் வாழ்ந்து வரும் சமூகம் முண்டா சமூகமாகும். கி.பி.1875 - இல் கிறித்தவ சமயத்தைத் தழுவிய முண்டா என்ற ஆதிவாசி இனத்தைச் சார்ந்த 7000 பேர் அவர்களின் தலைவரான பிர்சா முண்டா என்பவரின் ஒருங்கிணைப்பில் கொடுமையான அந்நிய சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் எதிராக 1899 -1900 ஆண்டுகளில் பெரும் போர்க் குரல் எழுப்பினர். அவர்களது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி சுமார் இரண்டு ஆண்டுகள் வரை ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடியுள்ளனர். அதில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

ஆதிவாசி மக்களான இம்மண்ணின் தலைவர்கள், எவ்வித வசதியுமே இல்லாத அக்காலகட்டத்தில் ஊர் ஊராக நடந்து சென்று, இரவு பகலாக மிகுந்த சிரமத்தோடு மக்களுக்கு அன்னிய ஆதிக்கத்தின் தீமைகளைப் பற்றி எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஊட்டி இருக்கின்றனர். பெரும் சிரமத்திற்கிடையில் மக்களை ஆங்கிலேய அரசுக்கு எதிராக ஒருங்கிணைத்தனர். ஆனால் ஆங்கிலேயருடைய வல்லமை மிக்க போர்க் கருவிகளுக்கு முன்னால், இவர்களது பலவீனமான போர்க் கருவிகள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இருப்பினும் இரத்தம் சிந்தித் தங்களுடைய கிறித்தவ வீரத்தை அவர்கள் வெளிப்படுத்தினர்.

19 ஆம் நூற்றாண்டில் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட இந்திய தேசிய உணர்வுக்குப் பிரெஞ்சுப் புரட்சி மற்றும் அமெரிக்க விடுதலைப் போர் ஆகியவற்றின்

தாக்கம் பெருமளவு உதவின. இருப்பினும், தேசபக்தி மிக்க பல புரட்சியாளர்களின் எழுச்சி மக்களிடம் பெருமளவு விழிப்புணர்வினை ஊட்டி ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டத்தில் அவர்களைப் பங்கேற்கத் தூண்டியது என்பதை மறுக்க இயலாது.

தவிரவும், நாட்டு விடுதலைப் போராட்டத்தில் அப்பொழுது முன்னணியில் இருந்த காங்கிரஸ் இயக்கத்தில் பல்வேறு கிறித்தவத் தலைவர்கள் பங்கேற்றுப் போராடி உள்ளனர். இங்கிலாந்து திருச்சபையைச் சார்ந்த சி.எப். ஆன்ட்ரூஸ் அவர்களது அர்ப்பணிப்பைக் காந்தியாரே பாராட்டிப் புகழ்ந்துள்ளார். இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸின் செயற்குழுவிற்கு உதவி புரிய முக்கியமான சிலரைக் காங்கிரஸ் நியமித்தது. அதில் முதலிடம் பெற்றவர் சி.எப். ஆன்ட்ரூஸ் ஆவார். இக்குழுவில் சிங்காரவேலர் போன்றோரும் உறுப்பினர்களாகச் செயல்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அனைத்து வகை அடிமைத் தளைகளையும் எதிர்த்துக் குரல் கொடுக்க 1868 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது வங்காள கிறித்தவ அமைப்பு (Bengal Christian Association) இதுவே இந்திய விடுதலைக்காக முதன் முதலாகத் தொடங்கப்பட்ட அமைப்பாகும். இவ்வமைப்பு பல போராட்டங்களை முன்னெடுத்தது.

அதே போல் வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கப்பல் ஓட்ட முயற்சித்த பொழுது அதற்கான நிதி திரட்ட உதவியவர்கள் மூன்று கிறித்தவர்கள். ஒருவர் தியாகி மாசிலாமணி மற்ற இருவர் ஜே.பி.ரோட்ரிகுவஸ் மற்றும் பால் பீட்டர் ஆகியோர் ஆவர்.

காந்தியாரின் தென்னாப்பிரிக்கப் போராட்டங்களில் ஜோசப் இராயப்பன் உள்ளிட்ட கத்தோலிக்கத் தமிழர்கள் பங்கேற்றுள்ளனர். காந்தியார் முன்னெடுத்த ஒத்துழையாமை இயக்கத்திலும், சட்டமறுப்பு இயக்கத்திலும் கிறித்தவர்கள் பலர் பங்கேற்றுச் சிறை சென்றுள்ளனர்.

மேலும் நாடு முழுவதும் சைமன் கமிஷனுக்கு எதிர்ப்பு எழுந்த வேளையில் கிறித்தவ சமயத் தலைவர்களும் தங்கள் எதிர்ப்பைத் தெளிவாகப் பதிவு செய்தனர்.

சென்னை கிருத்துவக் கல்லூரியில் பயின்ற மாணவரான வெங்கல் சக்கரை என்ற கிறித்தவ இளைஞர் தேசிய இயக்கத்தால் மிகவும் கவரப்பட்டார். சென்னையில் தேசிய மிஷனரி சபை என்ற அமைப்பிலிருந்த கிறித்தவ இளைஞர்களை வெங்கல் சக்கரை, தனது தலைமையின் கீழ் ஒன்றிணைத்துத் தேசியப் போராட்டத்தில் இணைத்தார். அவர்களைத் தேர்ந்தெடுத்து இளைய விடுதலை இயக்கம் (Young Liberals League). என்ற அமைப்பையும் உருவாக்கினார் இவர் ஒரு சமதர்மப் போராளியாகவும் விளங்கினார்.

நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சீர்கேடுகள், ஏகாதிபத்தியம், முற்றுடைமைப் போர்கள் போன்ற முடிவற்ற தீமைகளுக்குச் சமதர்மம் ஒன்றே தீர்வாகும் என்று முழக்கமிட்டு ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்தார்.

இந்திய விடுதலைப் போரில் தமிழகத் தலைவர்கள் பலர் பங்கேற்றுத் தங்களது தேசபக்தியை வெளிப்படுத்தினர். அவர்களில் ஒருவர் தூத்துக்குடியைச் சார்ந்த தியாகி மாசிலாமணி அவர்கள். இவரது இளம் வயதில் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் சீடராக இருந்து விடுதலைப் போராட்டத்திற்காகத் தன்னையே முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டவர். தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். எனவே, தமிழகத்திற்கு வரும் நேருவின் ஆங்கில உரையை இவர்தான் மொழிபெயர்த்து வந்தார். இவர் இயற்றிய தேச பக்திப் பாடல்கள் மிகவும் புகழ் பெற்றவை. இந்திய விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்று சுமார் 40 ஆண்டுக் காலம் போராடிய முன்னணித் தலைவராக மாசிலாமணி அவர்கள் விளங்கினார். ஆங்கில அரசால் பல முறை இவர் சிறையில் அடைக்கப்பட்டார். மாசிலாமணியின் துணைவியார் ஜெபமணி அம்மையார் தென்தமிழகத்தின் சுதந்திரப் போராட்ட வீராங்கனைகளில் முக்கியமானவர். இரண்டாம் உலகப்போர் எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்ற முதல் கிறித்துவத் தம்பதிகள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரைப் பகுதியில் தன்னையும் தனது குடும்பம் முழுவதையும் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டு பாடுபட்டவர் 'ரோசாப்பூ ராசா' எனும் மதுரை ஜார்ஜ் ஜோசப் அவர்கள். இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்று மதுரையில் புகழ்பெற்ற வழக்கறிஞராக விளங்கினார். ஆயினும் விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுவதற்கு முதல் கட்டமாகத் தனது வழக்கறிஞர் தொழிலைத் துறந்தார். ரௌலட் சட்ட எதிர்ப்பு இயக்கத்தை மதுரையில் தலைமை ஏற்றுச் சிறப்பாக நடத்தினார். இவர் புகழ்பெற்ற வைக்கம் போராட்டத்திலும் பங்கேற்றார். Young India மற்றும் Independent ஆகிய இதழ்களின்

ஆசிரியராக இவர் திறம்படச் செயல்பட்டார். அதில் வெளியான கட்டுரைகளுக்காக லக்னோ சிறையில் அடைக்கப்பட்டார். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட ஜார்ஜ் ஜோசப் மதுரையில் முதன் முதலாகத் தொழிற்சங்கம் அமைத்தார். காந்தியார் மதுரைக்கு வரும் பொழுது இவரது வீட்டில்தான் தங்குவார். 1925 - ஆம் ஆண்டு காந்தியார் மதுரையில் ஜார்ஜ் ஜோசப் வீட்டில் தங்கியிருந்த பொழுதுதான் வேட்டி துண்டுக்கு மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரைப் பகுதியில் பிரமலைக்கள்ளர் என்னும் வகுப்பினரைக் கொடுமைப்படுத்தியது ஆங்கில அரசு. இரவில் அச்சமூக மக்கள் காவல் நிலையங்களில்தான் தங்க வேண்டும் காவல் நிலையங்களில் அதிகாரிகள் அழைத்தபோதெல்லாம் அவர்கள் ஆஜராக வேண்டும். கைரேகையைப் பதிவு செய்ய வேண்டும் என்று ஆணைகள் விதிக்கப்பட்டன. இதனை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர் ஜார்ஜ் ஜோசப்தான். கைரேகைச் சட்டத்தை இவர் எதிர்த்த பொழுது பிரமலைக் கள்ளர் சமூகத்தினர் அனைவரும் அதில் கலந்து கொண்டனர். ஆனால், வழக்கம் போல் ஆங்கில அரசு துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதில் ஒரு கர்ப்பிணிப் பெண் பலியானார்; பிரமலைக் கள்ளர் சட்டம் பின்னர் திருத்தப்பட்டது. ஆகவே அம்மக்கள் ஜார்ஜ் ஜோசப்பிற்கு 'ரோசாப்பூ ராசா' என்ற பட்டம் கொடுத்து அவரை அழைத்தனர். மேலும் விடுதலை அடையும் முன் ஆதிக்க வர்க்கம் திணித்த இந்தியை எதிர்த்துப் போராடிய குழுவிலும் போராளி ஜார்ஜ் ஜோசப் இருந்தார்.

விடுதலைப் போராட்டத்தில் தவிர்க்க முடியாத மற்றுமோர் கிறித்துவ ஆளுமை தஞ்சை மண்ணைச் சார்ந்த ஜே.சி. குமரப்பா (எ) ஜோசப் செல்லத்துரை கொர்னேலியஸ் சென்னை கிறித்தவக் கல்லூரியில் முதுகலைப் படிப்பும், இங்கிலாந்தில் வணிக மேலாண்மையியல் மேற்படிப்பும் படித்தவர். அமெரிக்காவில் சைரக்யூஸ் பல்கலைக்கழகத்திலும், கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் பொருளாதாரம் பயின்றார். காந்தியக் கோட்பாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, விடுதலைப் போராட்டத்தில் பல முறை சிறைக்குச் சென்றார்.

சுரண்டலற்ற பொருளாதாரம் சாத்தியமானது மட்டுமல்ல, இந்தியாவின் பிரச்சனைகளுக்கும் அதுவே விடையும் கூட எனக் குமரப்பா ஆழமாக நம்பினார். வாழ்வின் அடிப்படை ஆதாரமான இயற்கையை சீரழிக்காமலே பொருளாதாரத்தில் நமது இலக்கை அடைய முடியும் என்றும் நம்பினார். மேலும், சுற்றுச்சூழல் பேணலில் அவருக்கு இருந்த அக்கறையின் ஒரு வெளிப்பாடே கிராமியத் தொழிலில் அவர் காட்டிய ஆர்வம். காந்தியப் பொருளாதாரம் குறித்துப் பல கட்டுரைகளை எழுதி விழிப்புணர்வு ஊட்டியவர். திருமணம் செய்து கொள்ளாமலே இறுதிவரை தனது வாழ்நாள் முழுவதும் நாட்டிற்காக அர்ப்பணித்த குமரப்பாவின் தம்பி பரதன் குமரப்பாவும் விடுதலைக்காகப் பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்த ராவ் பகதூர் ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று வழக்கறிஞராகச் சில காலம் பணியாற்றியவர். நீதிக்கட்சியின் தாக்கத்திற்கு உள்ளாகி அதில் தன்னை இணைத்துக் கொண்டார். சமூக நீதிக்காகவும், சம வாய்ப்புக்காகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளுக்காகவும் இணைந்து குரல் கொடுத்தார். வடமொழி மட்டுமே கற்பிக்கப்பட்ட திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரியின் பெயரை 'அரசர் கல்லூரி' என்று மாற்றி அங்கு தமிழ் வகுப்புகளைத் தொடங்க ஏற்பாடு செய்ததோடு, தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இருந்த போது அக்கல்லூரியில் அனைவரும் பயிலத்தக்க வகையில் உத்தரவு பிறப்பித்தார். அறக்கட்டளை சத்திரங்களில் சாதி வேறுபாடு கருதாது அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்ண ஏற்பாடு செய்து சமத்துவம் நிலவ உழைத்தார் சுயமரியாதை இயக்கத்தில் தீவிர உறுப்பினராக இருந்த இவர் 1918-இல் தஞ்சையில் பிராமணர் அல்லாதார் மாநாடு ஒன்றையும் கூட்டினார். 1937 - இல் நீதிக்கட்சி அமைத்த இடைக்கால அமைச்சரவையில் நிதி, உள்துறை போன்ற முக்கியமான துறைகளுக்குப் பொறுப்பேற்றார். பின் நடைபெற்ற அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றார். குறிப்பாக இந்தித் திணிப்புக்கு எதிராக நடந்த போராட்டங்களிலும், தமிழர் மாநாடுகளிலும் கலந்து கொண்டு தனது சிறந்த பங்களிப்பை வழங்கினார்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்திலும், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பத்திலும் பிறந்த திருச்செந்தூர் பெஞ்சமின் அவர்கள் பள்ளிப்பருவத்திலேயே தேசியப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டவர். காந்தியாரின் தனி நபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். தொடர்ச்சியாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அமைதி வழியாகப் போராடிய அவர், பிறகு ஒரு வன்முறைப் போராட்டத்தைத் தேர்ந்தெடுத்தார் அதுதான் சென்னை மாகாண அளவில், ஏன் இந்திய அளவில், விறுவிறுப்பாகப் பேசப்பட்ட 'குலசேகரப்பட்டணம் சதி வழக்கு' என்பதாகும். 1942 ஆம் ஆண்டு வெள்ளையர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஆங்கிலக் காவல் அதிகாரி லோன் என்பவரது படுகொலை வழக்கில் இவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

ஆண்களைப் போலவே கிறித்துவ மதத்தைச் சார்ந்த பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றுள்ளனர். வைலட் ஆல்வா, ஜெபமணி, அன்னி பெசன்ட் அம்மையார், சகோதரி நிவேதிதா போன்ற பல வீராங்கனைகளின் ஒப்பற்ற தியாகம் போற்றத்தக்கது. மகளிர் மட்டுமல்லாமல், விடுதலைப் போராட்டத்தில். மாணாக்கர்கள் மற்றும் பத்திரிகைகளின் பங்கும் சிறப்புமிக்கதாகும். அதே போல் கிறித்துவர்களான தொழிலாளிகள், சிறு வணிகர்கள், விவசாயிகள் எனப் பலரும் விடுதலைப் போரில் ஆற்றிய பங்களிப்பு குறித்தும், ஆட்சியிலும், அரசியல் சாசன உருவாக்கத்திலும், நேதாஜியின் இந்திய தேசியப் படையிலும் பங்கேற்றவர்கள் குறித்தும் முனைவர் எம்.ஏ. சேவியர் தமது நூலில் மிக விரிவாகப் பதிவிட்டுள்ளார். அவரே குறிப்பிடுவது போல், "தியாகிகளின் பட்டியல் நீண்டு கொண்டே சென்றாலும் அவை வெறும் பெயர்ப்பட்டியல் அல்ல! நமது இந்தியத் தாய்நாடு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்று தங்கள் உயிரைக் கூடப் பொருட்படுத்தாமல், அதைப் பணயம் வைத்து விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த கிறித்தவத் தியாகிகள் வாழ்க்கையின் சிலுவை சித்திரங்கள்!" என்பது துல்லியமான மதிப்பீடு ஆகும்.

அடுத்து இந்தியக் கிறித்தவச் சமூகத்தின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நூல் ஆசிரியர் மிகச் சிறப்பான முறையில் பதில் அளிக்கிறார். தங்களது முன்னோரின் சமயத்தை விடுத்து அந்நிய மதத்திற்குச் சென்று விட்டனர் என்றும், கிறித்தவச் சமுதாயத்திற்கு மாறியதே நாட்டுப்பற்றுக்கு எதிரான செயல் என்றும் கிறித்தவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து பரப்புரை செய்யப்பட்டது. எனவே இந்தியாவிலுள்ள கிறித்தவர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற சிந்தனை மேலோங்கி இருந்தது. இந்து மத உணர்வு கலந்து உருவாக்கப்பட்ட சுதேசிப் போராட்டம் வலுவடைந்த 1905 - 1907 மற்றும் 1916 - 1917 ஆகிய ஆண்டுகளில் கிறித்தவர்களுக்கு எதிரான உணர்வு வலுவாகச் சமூகத்தில் திணிக்கப்பட்டது. சுதேசிப் போராட்டம் உச்சத்திலிருந்த காலத்தில் இந்திய தேசியக் காங்கிரசில் கிறித்தவப் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ள அவ்வமைப்பு மிகவும் தயங்கியது. இந்திய தேசியத்தின் முற்பகுதி, இந்து மீட்டுருவாதிகளின் கைகளில் இருந்ததால், அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளையும், சாதாரண இந்தியக் கிறித்தவர்களையும் ஒன்றிணைத்துப் பார்த்து வந்தனர். இது போன்ற மதவாதப் போக்குகளைப் பிபின் சந்திரா போன்ற மிகப் பெரிய வரலாற்று ஆய்வாளர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.. "அரசியல் தீவிரத்தன்மை என்பது பொதுவாக வலுவான இந்து மீட்டுருவாக்க உணர்வோடுதான் பார்க்கப்பட்டது. இந்து மதவாதச் சக்திகள் வலுவடைந்ததால், இந்தியாவை ஒன்றுபடுத்தவும், கசப்பான வகுப்புவாதம் பின்னாளில் ஏற்படவும் வழி வகுத்தது " எனப் பிபின் சந்திரா குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கது.

"தொடக்க கால இந்திய தேசியக் காங்கிரசின் கூட்டங்களிலும், அதன் அமர்வுகளிலும் கிறித்தவர்களின் பங்கு மிகச் சிறப்பானதாக இருந்தது. ஏக மனதாக இந்திய தேசியக் காங்கிரசை அவர்கள் ஆதரித்தனர். அவ்வாறு தொடர்ந்து ஈடுபடவும் அவர்கள் விரும்பினார்கள். ஆனால், புகுத்தப்பட்ட வெறுப்புணர்வின் காரணமாக அவர்கள் ஒதுங்க ஆரம்பித்தனர். இருப்பினும், கற்றறிந்த கிறித்தவ பெருமக்கள் இந்துமதவாதிகளின் மதவாதக் கண்ணோட்டத்தைப் புறந்தள்ளிவிட்டு, விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். அதற்கோர் எடுத்துக்காட்டு வெங்கல் சக்கரை எனும் கிறித்தவப் போராளி ஆவார். 'கிறித்தவம்' மற்றும் 'தேசியம்' என்பதற்குச் செயல்பாடுதான் மையப்புள்ளி. இவை இரண்டுமே வரலாற்றில் செயல்படுவதால், அவற்றைத் தனித்தனி அலகாக எடுத்துக் கொள்ள முடியாது. இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்கம் கிறித்தவத்திற்கு மாறானது அல்ல. மாறாகக் கிறித்தவத்தில் மலர்ந்த ஒரு மலராகும்" எனும் அவரது கூற்று அன்றைய நிலையைத் தெளிவுபடுத்துகிறது.

தொடக்கத்தில் பெரும்பான்மைச் சமூகத்தின் பயமுறுத்தல் கண்டு சற்று அச்ச உணர்வு ஏற்பட்டாலும், அன்றைய தலைவர்களின் தொடர் முயற்சியாலும், அரசியல் ஈடுபாட்டாலும் கிறித்தவ மக்கள் பிற சமூகத்தினரைப் போலவே விடுதலைப் போரில் தீவிரமாகப் பங்கேற்கத் தொடங்கினர். இதை எண்ணற்ற தரவுகளுடனும், ஆய்வுகளுடனும் முனைவர் எம்.ஏ. சேவியர் அவர்கள் 288 பக்கங்கள் கொண்ட தனது நூலில் மிக விரிவாகப் பதிவு செய்துள்ளார். நூலின் இறுதியில் பொருத்தப்பாடு மிக்க படங்களையும், உரிய வரலாற்று ஆதாரங்களையும் இணைத்து இந்தப் புத்தகத்திற்கு ஓர் ஆவண மதிப்பீட்டை உருவாக்கி உள்ளார். பேசாப் பொருளை உரத்துப் பேசிச் சுவடு பதித்த இந்த வரலாற்று ஆவணம், கிறித்தவ மக்களின் விடுதலை வேட்கையையும், தியாகத்தையும் பதிவு செய்வதோடு கிறித்தவ சமுதாயத்தின் மீது மதக்காழ்ப்புணர்வோடு சுமத்தப்படும் பழியையும் நீக்கியுள்ளது என்பதில் ஐயம் ஏதுமில்லை.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர், இதழாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர்.**



# மொழிபெயர்ப்பு வெளியீட்டில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் ஆவணக்களஞ்சிய சாதனையும் மொழிபெயர்ப்பாளரின் அனுபவங்களும்

கி. இளங்கோவன்

வரலாற்றாய்வறிஞர் பேராசிரியர் முனைவர் ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் எழுதிய தமிழகக் கடற்கரையில் போர்ச்சுக்கீசியர், ஐரோப்பியர்கள் தமிழகத்திலிருந்து நடத்திய துணி வணிகம், மற்றும் பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி நகரம், ஆகிய ஆங்கில நூல்களை நான் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நூலகத்தில் படித்துள்ளேன். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்ட சோழமண்டலக் கடற்கரையும் அதன் உள்நாடும், காலனியத் தொடக்ககாலம், மற்றும் காலனிய வளர்ச்சி காலம் ஆகிய நூல்கள் மூலம், வரலாற்றின் மீது என் ஆர்வம் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன் அதிகமாகத் திரும்பியது.

### கடல்சார் வரலாறு

சோழமண்டலக் கடற்கரையும் அதன் உள்நாடும் என்ற நூல், 16ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர் ஆட்சியின் போது சோழமண்டலக்கரை உலக வரலாறு அளவில் முக்கியத்துவம் பெற்றதை விளக்குகிறது. இந்நூல் வேளாண்மை, கைவினைத்தொழில் கிராம மற்றும் நகர்ப்புற இணைப்பு, உள்நாட்டு வணிகம், மற்றும் அயல்நாட்டு வணிகம் ஆகியவைப் பற்றி விரிவாக எழுதி, சமூகத்தின் மீது ஏற்பட்ட தாக்கம் அழுத்தம் பெறுகிறது.

மேற்சொன்ன நூலில் குறிப்பிட்டுள்ள அயல்நாட்டு வணிகம் மட்டும், போர்ச்சுக்கீசிய ஆவணங்களின் அடிப்படையில் தனி ஒரு நூலாகவே ஜெயசீல ஸ்டீபன் ஆழமாக ஆய்வு செய்துள்ளார். முத்துக்கள் மற்றும் சங்குகளின் வர்த்தகம், குதிரை, யானை, வெடியுப்பு வணிகம், அரிசி, துணிமணி வணிகம், தமிழக பொருளாதாரத்தின் தன்மையை மாற்றிய வாசனைப் பொருட்கள், உலோகம், விலையுயர்ந்த கற்கள், தங்கம் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது. போர்ச்சுகீசியர் தங்கிய கடலோர சிற்றூர்கள் நகரமாக்கியதும் வர்த்தகத்தின் விரிவும் அளவிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தமிழ் வணிகர்கள் பற்றி மட்டும், அவர்கள் மேற்கொண்ட கடற்பயணங்களின் வணிகக் கப்பல்கள், சரக்குகள், தென்கிழக்கு ஆசியாவின் மன்னர்கள் வழங்கிய சலுகைகள், கடல்சார் வணிகம் பெருக

உதவியைப் பற்றி ஒரு நூல், விளக்குகிறது. மலாக்கா, மணிலா, ஜாவா, தாய்லாந்து, சுமத்ரா தீவு, மலாய் தீபகற்பம், பிராக், பினாங்கு ஆகிய இடங்களில் தமிழர்கள் பல்கிப் பெருகி, பல தமிழ் வணிகர்கள், பிரதம மந்திரி, துறைமுக அதிகாரி, வரி வசூலிக்கும் அதிகாரி, கப்பல்படை தலைவர் போன்ற பதவிகளில் நியமனங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்பது வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துறைமுகம் வழியே நடந்த ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா கடல்சார் வணிகம் (1570-1880) தனியே ஒரு நூலில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. ஏற்றுமதியான பொருட்கள், இறக்குமதியான பொருட்கள், விலையின் குறிப்புகள் ஆகியவையும் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளது.



ஜெயசீல ஸ்டீபன்

**புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாறு**

கடல்சார் வணிகத்தின் தொடர்ச்சியாக புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கை நூல்களில் விளக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இருந்து ஒப்பந்த தமிழ் தொழிலாளர்கள் பிரெஞ்சு கயானா, குவாதலுப், மர்த்தினி, மொரிஷியஸ், ரீயூனியன் தீவுகளுக்கு புலம்பெயர்ந்தது (1729-1883) ஆவணங்களில் அடிப்படையில் ஒரு நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆண்டுகள், குடியேறியவர்களின் எண்ணிக்கை, கப்பல் புறப்பட்ட தேதி, கப்பல் பெயர், ஒப்பந்தம் முடிந்து தமிழகம் திரும்பியவர்கள் ஆகிய புள்ளிவிவரங்கள் வழங்கப்பட்டுள்ளது இந்த நூலின் சிறப்பாகும். இதுவுமன்றி பயணத்தின் போது இறந்தவர்களின் எண்ணிக்கை, பயணித்த கூலிகளின் சாதி ஆகியவைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து ஒப்பந்தத் தொழிலாளர்கள் கயானா, டிரினிடாட், ஜமைக்கா, செயின்ட் லூசியா, செயின்ட் வின்சென்ட் தீவுகள் மற்றும் தென்னாப்பிரிக்காவின் நத்தாலுக்கும் புலம்பெயர்ந்த வரலாறு (1837-1896) சிறப்பாக புள்ளிவிவரங்களோடு ஒரு நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணம் மேற்கொண்ட ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஆவணத்தின் முழுமையான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் ஒவ்வொரு நபருக்கும் காலனிய குடிபெயர்ப்பாளர் எண் வழங்கப்பட்டுள்ளது சிறப்பானது ஆகும். ஆறு மாத கைக்குழந்தைக்குக் கூட ஒரு எண் வழங்கப்பட்டுள்ளது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மொரிஷியஸ் பயணமான தமிழ்க் கூலிகள், மாவட்டம் வாரியாக அனுப்பப்பட்ட தொழிலாளர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், இலங்கை சென்று காப்பித் தோட்டங்களில் பணியாற்றிய கூலித்தொழிலாளர்கள், மலாயாவில் வாழ்ந்த கூலிகளின் சமூக வாழ்க்கை ஆகிய விவரங்களும் ஒரு நூலில் வழங்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.


இதோடு மட்டுமல்லாது தண்டனையடைந்த தமிழ்க் குற்றவாளிகள் மலாயா, பர்மா, சுமத்ரா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, டாஸ்மேனியாவிற்கு ஆங்கிலேயர்களால் நாடுகடத்தப்பட்டதும் (1787-1896) அவர்களின் வாழ்க்கையும், சிறையிலிருந்து துறைமுகத்திற்கு அழைத்துச் சென்று கப்பலில் ஏற்றும்வரை நடந்த நிகழ்வுகளும், கைதிகளின் கோரிக்கை, கைதிகள் மனு அளித்தது, கைதிகள் பற்றிய ஆங்கிலேயர்களின் கொள்கை, குற்றவாளிகளின் இறப்பு ஆகியவைகளும் ஒரு நூலில் விளக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியர்கள் தமிழகத்திலிருந்து நடத்திய உலகளாவிய அடிமை வணிகம் (1547-1792) பற்றி ஒரு நூலில் மிகவும் விளக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக ஐரோப்பியர்கள் பயணித்ததை நாம் அறிவோம். ஆனால் இந்த நூலில் தமிழகத்திலிருந்து மலாக்கா, மணிலா வழியாக பசிபிக் கடலில் பயணித்து, மெக்சிகோ நாட்டிற்கு தமிழ் அடிமைகள் அனுப்பி விற்றது தெரிவிக்கப்பட்டுள்ளது. வடஅமெரிக்கா நாட்டிற்கு தமிழ் அடிமைகள் சென்றது ஒரு வியப்பான செய்தி. இவ்வாறு உலகளாவிய அடிமை வணிகம் நடந்ததை புலப்படுத்துகிறது. இதுவரை எவரும் எழுதாத ஒரு வரலாறு இதன் மூலம் நமக்குத் தெரிகிறது.

**தமிழ்ச் சமூகத்தின் வரலாறு**

ஜெயசீல ஸ்டீபனின் சில நூல்களில், காலனிய தொடக்ககாலத்தில் பல சாதி மக்களின் வரலாறு தெளிவாக விளக்கப்படுகிறது. பறையர், பள்ளர் வாழ்க்கை, கொல்லர், தச்சர் வாழ்க்கை, மீனவ சமூகமான கரையாளர், முக்குவர், செம்படவர்,













பட்டணவர் ஆகியோரது வாழ்க்கைப் பற்றி ஒரு நூலில் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியும் உழைப்பாளர் சமூக உண்மைநிலையும், சாதியும் (கி.பி.600-1565) பற்றி தனியே ஒரு நூலில் விளக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கூலியாட்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களின் அடிமைகளின் வாழ்வியல் சூழல் (1621-1878) பற்றி ஒரு நூல் விளக்குகிறது. பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி மக்களின் சமூக வாழ்க்கை பற்றி (1574-1793) ஒரு நூல் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. இதில் போர் அவலங்கள், மக்கள் பட்ட துயரங்கள், கைவினைஞர்கள் இடம்பெயர்தல் ஆகியவைகள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சாதிகளின் அமைப்புமுறை, நடைமுறை மற்றும் ஆங்கிலேயரின் 1871ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கு முன்பு நடந்த அனைத்து விவரங்களும் மிக சிறப்பாக தனியே ஒரு நூலில் விளக்கப்பட்டுள்ளது. தொழில் வகைகளும், சாதிகளும் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளது என்பதும், சாதிய புராணங்கள் புனையப்பட்டு தோன்றியது மற்றும் இவைகள் எந்தவித ஆதாரமும் இல்லாமல் உள்ளது என்பதும் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிப்பாய்களும் போர்களும் தமிழகத்தில் காலனியமயமாக்கலும் அதன் சமூகத் தாக்கம் பற்றி ஒரு நூல் விவரிக்கிறது. நெசவாளர்களும், துணி வணிகர்களும் பற்றி தனியே ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் மாணவர்களும், தமிழ்வழிப் பள்ளிகள், கல்வி நிலை, மேற்கத்தியத் தாக்கம் மற்றும் புதுப்பரிமாணங்கள் பற்றி ஒரு நூல் விளக்குகிறது. தமிழக இசைக்கலைஞர்கள், நடனக்காரிகள் மற்றும் நாடக-நடிகர்கள் பற்றியும், நிகழ்த்துக்கலை வரலாற்றில் ஐரோப்பியத் தொடர்பும் தாக்கமும் பற்றி ஒரு நூல் விளக்குகிறது. காலனியகால உள்ளூர் கலைஞர்கள், வண்ணஓவியர்கள், ஐரோப்பியர் வண்ணஓவியங்கள் தொடர்பாக தனியே ஒரு நூல் விளக்குகிறது.

## தமிழ் மக்களின் அறிவாற்றலும் ஐரோப்பியர்களின் தாக்கமும்

தமிழகத்தில் தொழில்நுட்பம் எவ்வாறு சிறப்பாக இருந்தது என்று ஒரு நூல் விளக்குகிறது. இந்த நூல் கட்டடத் தொழில்நுட்பம், பாய்மரக் காலத்தில் கடலோடிகளும் கப்பலும், படகு தொழில்நுட்பம், இரும்பு மற்றும் எஃகு உருமாறும் தொழில்நுட்பம், பீரங்கி, பீரங்கிக்குண்டுகள், வெடிமருந்து, துப்பாக்கிகள், போர் ஏவுகணைகள், போர்ப்படை தொழில்நுட்பம் பற்றி விளக்குகிறது.

தமிழர்களின் சித்த மருத்துவத்தை ஐரோப்பியர்கள் கண்டதும் தெரிந்துகொண்டதும் பற்றி ஒரு நூல் விளக்குகிறது. பூச்சிக்கடி, வண்டுக்கடி, தேள்கடி, நாய்க்கடி, மற்றும் நச்சு பற்றிய தமிழர் மருத்துவம் பற்றி இது விளக்குகிறது. தமிழ் மருத்துவச் சுவடிகள் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. மருத்துவத் தகவல் பரிமாற்றம் மூலம் ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவு வளர்ச்சி பற்றியும் விளக்குகிறது.

தமிழத்தில் ஐரோப்பியர்கள் கண்ட விலங்குகள் பற்றியும், விலங்கு அறிவியல் ஆராய்ச்சி நடந்தது பற்றியும், மருத்துவ விலங்கியல் வளர்ச்சி பற்றியும் ஒரு நூல் விளக்குகிறது. இந்நூலில் ஐரோப்பியர்கள் கண்ட பறவைகள், பூச்சிகள், விலங்குகள், பாம்புகள், மீன்கள் பற்றியும், அவர்கள் வரைந்த படங்கள், வண்ணஓவியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் நிலப்பரப்பில் நிகழ்ந்த தட்பவெப்ப மாற்றங்கள் மற்றும் இயற்கைப் பேரிடர்கள், மக்கள் பட்ட இன்னல்கள் பற்றி 9ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை, இதுவரை எழுதப்படாத வரலாறு எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் மழைநிலவரம், சந்தித்த பஞ்சம், வறட்சி, புயல், சூறாவளி காற்று, வெள்ளம், நிலநடுக்கம், பேரலை தாக்கங்கள், ஐரோப்பியர்கள் வருகைக்குப்பின் தமிழகத்தில் அறிமுகமான தொழில்நுட்பங்கள்

வெப்பநிலை, வளிமண்டலம் அழுத்தம் தொடர்பான உபகரணங்கள் மற்றும் அறிவியல் மாற்றங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழியின் இலக்கியப் பயணத்தை ஐரோப்பிய மொழிபெயர்ப்புகளின் வழியே ஒரு நூல் விளக்குகிறது. தமிழிலிருந்து போர்ச்சுக்கீசியம், இத்தாலியன், லத்தீன், ஆங்கிலம், டச்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு நடந்தது பற்றி விளக்குகிறது. சமஸ்கிருதம், மராத்தி, வங்காளம், மற்றும் தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு நடைபெற்றது விளக்கப்படுகிறது. எபிரேயம், கிரேக்கம், லத்தீன், ஜெர்மன், போர்ச்சுக்கீசியம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலிருந்து பைபிள் தமிழில் மொழிபெயர்ப்பு நடந்தது பற்றி விளக்குகிறது. இதனால் நடைபெற்ற தமிழ் உரைநடை வளர்ச்சி, மற்றும் அச்சாக்கத்தின் தாக்கம் பற்றி விவரிக்கிறது.

தற்போது இறுதியாக வெளிவந்துள்ள 25ஆம் நூலில் தேயிலை, புகையிலை, காப்பிக்கொட்டை தமிழகத்தில் அறிமுகமாகி வர்த்தகம் நடந்தது பற்றி விளக்கப்பட்டுள்ளது. பல வகையான மதுபானங்கள் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு நடந்த வணிகமும் நுகர்வும், இதனால் தமிழக சமூகத்தில் ஏற்பட்ட சீரழிவு பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### எனது மொழிபெயர்ப்பு அனுபவங்கள்

நான் ஏற்கெனவே புதுச்சேரியின் ஊர்ப் பெயர்கள் குறித்து சிறு ஆய்வு நூல் எழுதிக் கொண்டிருந்தபோது, பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி நூலை மொழிபெயர்த்து சமூக ஊடகங்களில் ஏன் வெளியிடக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது. இதற்காக பேராசிரியர் ஜெயசீல ஸ்டீபன் அவர்களை சந்திக்கவேண்டும் என காத்துக் கொண்டிருந்தேன். அப்போது திரு. சீனு. தமிழ்மணி அவர்கள் பெற்றோரின் பெயரால் அறக்கட்டளை சொற்பொழிவு ஒன்று நடந்தபோது, ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் உரையைக் கேட்டேன். பின்னர் புதுச்சேரிப் பல்கலைக்கழகம் நடத்திய ஒரு கடல்சார் வரலாற்று கருத்தரங்கில், 02-03-2020 அன்று அவரை சந்தித்தேன். பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி நூலின் ஒரு இயலை மொழிபெயர்த்துள்ளேன், அதை தாங்கள் அனுமதித்தால் வெளியிடலாம் என நான் எண்ணியுள்ளதை தெரிவித்தேன். பின்னர், அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மின்னஞ்சல் மூலம் மொழிபெயர்த்த கட்டுரையை அனுப்பிவைத்தேன். இதன்பிறகு அவர் என்னைத் தொடர்புகொண்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம், வரலாற்று நூல்களை வெளியிட்டு வரும் 'தமிழ் மக்கள் வரலாறு' வரிசையில், பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி நூலின் மொழிபெயர்ப்பை வெளியிடத் திட்டமிட்டுள்ளதால், தேர்தெடுத்த ஏழு இயல்களை மொழிபெயர்த்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். நானும் இதுபோல சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என எதிர்நோக்கியிருந்தபோது, அவர் கூறிய ஏழு இயல்களை உடனே மொழிபெயர்த்து அனுப்பினேன். இந்நூல் 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியானது.

இதன்பிறகு, தமிழ் இலக்கியப் பயணம், அடுத்து, தமிழகத்தின் தொழில் வளர்ச்சியும், உழைப்பாளர் சமூக உண்மைநிலையும், பிறகு, தமிழக அடிமைகள், கூலியாட்கள், ஒப்பந்தத் தொழிலாளர்களின் சமூகச்சூழல், மற்றும் சிப்பாய்களும் போர்களும் போன்ற 12 நூல்களை நான் கடந்த 5 ஆண்டுகளில் மொழிபெயர்த்தது, இதுவரை வெளிவந்துள்ளன.

அரசு அலுவலகத்தில் நான் பணிபுரிந்த போதும், ஏற்கெனவே சுற்றுச்சூழல் இயக்கத்தில் தன்னார்வலராக இருந்தபோதும், மொழிபெயர்ப்பு செய்துள்ள அனுபவம் எனக்கு கைகொடுத்தது. தமிழ் இலக்கியப் பயணம் நூலை மொழிபெயர்க்கும்போது தான், பல புரியாத சொற்களும், கிருஸ்துவ மதம் சம்பந்தமான சொற்களும், அதன் பொருள்களும், விரிவான தேடலையும் மற்றும் அதன் உள்ளாழ்ந்த அர்த்தத்தையும் உணர்த்தி, மொழிபெயர்ப்பு செய்ய மேலும் ஊக்கமூட்டியது. முனைவர் ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கு போர்ச்சுக்கீசியம், டச்சு, பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன் ஆகிய பல ஐரோப்பிய மொழிகள் தெரியும் என்பதாலும், ஐரோப்பிய ஆவணக்காப்பகங்களிலும், நூலகங்களிலும் தேடி அலசி, அவரின் ஆய்வுகள் மிகத் தெளிவாக இருப்பதாலும், பல சொற்கள் அந்தந்த மொழியோடு எழுதியிருப்பார். அதனால் நான் பல நேரங்களில் பேராசிரியரைத் தொடர்புகொண்டு சந்தேகத்தை கேட்டு எழுதி மொழிபெயர்த்தேன் சில நேரங்களில் அதன் வேர்ச்சொல், மூலச்சொல் எந்த மொழி என்பதையும் தேடி, பொருளைப் புரிந்து அதற்குத் தகுந்தவாறு மொழிபெயர்த்தேன். நான் இதுவரை படித்திராத பல புதிய சொற்களையும் இவரது பெரும் அறிவுப்புலத்திலிருந்து கற்றுக்கொண்டேன்.

முனைவர் ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் ஆங்கில நூல்களில் சொற்றொடர்களைப் படித்து, புரிந்து மொழிபெயர்த்து வருகிறேன். ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்புகளைப் பிரித்து தொடர்ச்சியாக அடிக்குறிப்புகளில், அதன் தரவுகள், ஆதாரங்கள், நூல்கள் போன்றவற்றை கட்டுரையின் முடிவில் தந்திருப்பார், அதையும் சற்று உற்றுநோக்கி படித்துப்பார்த்து அதன் மூலத்தை சில நேரங்களில் சுருக்கமாக மொழிபெயர்ப்பில் எழுத வேண்டி வரும். பெயர்ச்சொற்களின் உச்சரிப்பு, சரியாகப்

பயன்படுத்தி மொழிபெயர்த்து வருகிறேன். குறிப்பாக தமிழகத்தில் நிகழ்ந்த தட்பவெப்ப நிலை மாற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள், மக்கள் பட்ட இன்னல்கள் நூலில், பல அறிவியல் கலைச்சொற்கள், அறிவியல் உபகரணங்களின் பெயர்கள் ஆகியவையும் பேராசிரியருக்கு பல துறைகளில் இருக்கின்ற ஆழ்ந்த அறிவும் புலப்பட்டது. இதோடு அவரின் பன்முகத் தன்மையுடன், காலனிய காலத்தில் தமிழ் மக்களின் உண்மையான நிலையை ஆணித்தரமாக எடுத்துக்கூறும் பாங்கும், மொழிபெயர்க்கும்போது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

பேராசிரியர் வெளிநாடுகளுக்குச் சென்று ஆவணங்களைத் தேடி, அதிலிருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அவற்றிலிருந்து தேர்ந்தெடுத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தார், 'தமிழ் மக்கள் வரலாறு' என்ற நூல் வரிசையில் காலனிய கால வரலாற்று இடைவெளியை நிரப்புவதற்காக, இதுவரை 25 நூல்களை வெளியிட்டு, மிகப் பெரிய வரலாற்று சாதனையைப் படைத்துள்ளனர்.

இந்தத் 'தமிழ் மக்கள் வரலாறு' நூல் வரிசை வெளிவர இதில் நானும் பங்குகொண்டுள்ளேன் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக மொழிபெயர்க்க ஊக்கமளித்த வரலாற்றாய்வறிஞர் பேராசிரியர் முனைவர் ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தாருக்கும் நன்றி.

●

**கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்**



# டில்லியில் நியூ செஞ்சுரியின் நூல் வெளியீட்டு விழா

17-3-2025 அன்று டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தில் சிறப்புநிலைத் தமிழ்த்துறையும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து ஒருங்கிணைத்த சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியத் தொகுப்பு நூல்களின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. இதில் மக்களவை உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன் மற்றும் இரவிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். பேராசிரியர் அறவேந்தன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் அவர்கள் நூல்களை வெளியிட்டு வாழ்த்துரை ஆற்றினார். தொல்லியல் ஆய்வாளர் திரு. அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்திப் பேசினார். நூலாசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

முனைவர் துரை இரவிக்குமார் அவர்கள் பேசுகையில் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் எல்லாம் சேர்ந்து கூட்டு முயற்சியாக நூலாசிரியராக உருவெடுத்து இத்தொகுப்பை உருவாக்கி இருக்கிறார்கள். க.ப.அறவாணனைப் போலவே அவரது மாணவரான அறவேந்தன் அவர் செயல்பட்டதைப் போலவே தன்னுடைய மாணவர்களையும் ஊக்குவித்து இந்தப் பெரும் முயற்சியை நிறைவேற்றியிருக்கிறார். தமிழ்த்துறையைத் தவிர மற்ற துறைகளில் இதுபோன்ற முயற்சிகள் நடப்பதில்லை என்று குறிப்பிட்டார்.

தொல்.திருமாவளவன் அவர்கள் உரையாற்றும்போது சங்க இலக்கியங்கள் நமக்கு எவ்வளவு பெரிய சான்றாதாரங்களாக இருக்கின்றன என்பதை இங்கே நிகழ்ந்த உரைகள் எடுத்துக்காட்டின. சங்க இலக்கியங்கள் நமது தொன்மை வரலாற்றைப் பேசுகின்றன. நமது நாகரிகத்தைப் பேசுகின்றன. நாகரிகம் என்பது நமது அறிவுச் சொத்து. அதனால்தான் இந்த இனம் அழிந்துவிடக்கூடாது. அப்படியென்றால் மொழி அழிந்துவிடக்கூடாது. இந்த மொழியின்மீது எந்தத் திணிப்பும் நிகழ்ந்துவிடக்கூடாது என்று நினைக்கிறோம். மற்றபடி எந்த மொழி மீதும் நமக்கு வெறுப்பு கிடையாது.

சங்க இலக்கியத்திற்கு உள்ள வெவ்வேறு உரைகளைத் தொகுத்து வெளியிடுவது வருங்காலத் தலைமுறையினர் அவற்றை நுட்பமாக அறிந்துகொள்வதற்கு துணையாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

கட்டுரை


# புதிய எல்லையை நோக்கி



(சிண்டாய். ஜெ.அரவின்குமார். வல்லினம் பதிப்பகம். மலேசியா)

தமிழ்ச்சிறுகதையின் வடிவமும் கதைக்களமும் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகின்றன. வ.வே.சு.ஐயர், பாரதியார், அ.மாதவையா போன்ற மூத்த தலைமுறைப் படைப்பாளிகள் உருவாக்கிய அல்லது கண்டடைந்த சிறுகதையின் வடிவத்தை ஒரு தொடக்கநிலை என வைத்துக்கொள்ளலாம். புதுமைப்பித்தன், மௌனி, ந.பிச்சமூர்த்தி போன்ற இரண்டாம் தலைமுறைப் படைப்பாளிகள் உருவாக்கிய சிறுகதையின் வடிவம் முற்றிலும் வேறுவகையாக இருந்தது. அசோகமித்திரன், சுந்தர ராமசாமி, கி.ராஜநாராயணன் போன்ற படைப்பாளிகள் உருவாக்கிய கதைவடிவம் இன்னொரு வகையில் புதுமையாக அமைந்திருந்தது. ஜெயகாந்தன், ஜி.நாகராஜன், ஆ.மாதவன், ஆதவன் போன்றோர் முன்வைத்த வடிவங்கள் மற்றொரு புதிய பரிமாணத்தை உணர்த்துவதாக இருந்தன.

எல்லா மாற்றங்களும் தமிழ்ச்சிறுகதை உலகத்தை ஒவ்வொரு கோணத்தில் வளப்படுத்தின. இரண்டாயிரத்துக்குப் பிறகு எழுதத் தொடங்கிய புதிய எழுத்தாளர்களில் ஒரு பகுதியினர் தமக்கு எளிதாக கைவரப்பெற்ற வடிவத்தில் தம் ஆக்கங்களை எழுதினர். இன்னொரு பகுதியினர் மற்றுமொரு புதிய வடிவத்தையும் வழிமுறையையும் ஏற்படுத்திக்கொண்டனர்.



**பாவண்ணன்**

இன்றைய சிறுகதைக்கு வாழ்க்கையின் ஒரே ஒரு தருணம் மட்டுமே போதும். அதை சரியான கோணத்தில் முன்வைப்பதன் வழியாக ஒரு சிறுகதையை நிகழ்த்திக் காட்டிவிட முடியும். உருவகமாகவும் படிமமாகவும் ஒரு காட்சியைச் சித்தரிக்கும் கலை, தமிழில் சங்ககாலச் செய்யுள் காலத்திலிருந்து நிலைபெற்றிருக்கும் ஓர் அம்சமாகும். நுட்பமனம் கொண்ட படைப்பாளிகள் அத்தகு சித்தரிப்புகளை சிறுகதைகளின் ஊடே பயன்படுத்தி கதைக்கு வலிமையை ஏற்படுத்துகின்றனர்.

’கண்தர வந்த காம ஒள்ளெரி என்புற நலியினும் அவரொடு பேணிச் சென்று நாம் முயங்கற்கு அருங் காட்சியமே’ என்று தொடங்கும் குறுந்தொகைப்பாடல் நுட்பமான காட்சிச்சித்தரிப்புக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு. தானாகச் சென்று காதலனைக் கண்டு மகிழ்ச்சியடையவும் வழியற்று, அவராகத் தேடிவந்து தன்னைக் கண்டு மகிழ்ச்சியூட்டவும் வழியற்றுத் தவிக்கும் ஒரு காதலியின் கூற்றாக இக்கவிதை அமைந்துள்ளது. பிரித்துவிடவோ, விரட்டிவிடவோ யாருமின்றி குப்பைமேட்டில் ஏறி நின்று மோதும் கோழிகளைப்போல தன் விழைவுகளும் எண்ணங்களும் தமக்குள் முடிவில்லாமல் மோதிக்கொண்டே இருக்கின்றன என்னும் வேதனையை வெளிப்படுத்துகிறாள் அவள். ஒரு கோழிச்சண்டையின் சித்தரிப்பு, அவளுடைய அகத்தில் நிகழும் தவிப்புகளையும் மோதல்களையும் சித்தரிக்கும் ஊடகமாக அமைந்துவிட்டது. எங்கோ இருக்கும் நிலவின் படிமத்தை கண்ணாடி பிரதிபலிப்பதைப்போல

ஒரு காட்சியின் சித்தரிப்பு இன்னொரு காட்சியைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறது.

ஒன்றைச் சித்தரித்து இன்னொன்றை உணர்த்தும் குறுந்தொகைப்பாடலின் வழியை இன்றைய சிறுகதைகளில் அமைந்திருக்கும் காட்சிச் சித்தரிப்புகள் பயன்படுத்திக்கொள்கின்றன. தொடக்க காலத்தில் அங்கொருவர் இங்கொருவர் என கையாண்டுவந்த இந்த வழிமுறையை இரண்டாயிரத்துக்குப் பிறகு பல இளைய எழுத்தாளர்கள் ஆற்றலுடன் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். இதை ஒரு நல்ல திருப்புமுனையான காலகட்டம் என்றே சொல்லவேண்டும். தமிழகத்தைச் சேர்ந்த செந்தில் ஜெகன்னாதன், திருச்செந்தாழை, விஷால்ராஜா, சுஷில்குமார், அஜிதன் போன்ற எழுத்தாளர்களின் பல படைப்புகளில் இத்தகு சித்தரிப்புகள் பொருத்தமாக பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இந்த வரிசையில் வைக்கும் அளவுக்கு அழகான சித்தரிப்புகளைக் கொண்டதாக மலேசியச் சிறுகதை எழுத்தாளர் அரவின்குமாரின் கதைகள் அமைந்திருக்கின்றன. அவருடைய ‘சிண்டாய்’ என்னும் முதல் சிறுகதைத்தொகுதியில் அத்தகு முயற்சிகளைப் பார்க்கமுடிகிறது.

மலேசிய நாட்டின் புகழ்பெற்ற பாடகி சித்தி. அவள் குரல் வசியப்படுத்தும் தன்மையைக் கொண்டது. அவளுடைய பாடல் ஒலிக்காத இடமே இல்லை. அவள் பாடும் சிண்டாய் பாட்டு பட்டிதொட்டியெங்கும் பிரபலமான பாட்டு. சிண்டாய் என்னும் சொல்லுக்கு இளவரசி என்பது பொருள். ஓர் இளவரசிக்கே உரிய கனவுகளை அந்தப் பாடல் வெளிப்படுத்துகின்றன. ஓர் ஏக்கத்தைப் போல, ஒரு தீர்மானத்தைப் போல, ஒரு ரகசியத்தைப்போல வெளிப்படும் அக்குரலின் வசீகரத்துக்கு ஆட்படாதவர்களே இருக்கமுடியாது.

இனிமையான ஒரு பாட்டின் வரிகளையும் இனிய குரலையும் லயித்துச் சுவைக்கும் நாட்டம் கொண்ட ஒருவன் இனிமை மயமானவனாக இருக்கக்கூடும் என்கிற கற்பிதம் நொறுங்கிவிழும் அளவுக்கு நேர்மாறானவனாக இருக்கிறான் அவாங் என்பவன். அவன் ஆழத்தில் குரூரம் உறங்குகிறது. ஒரே நேரத்தில் ரசிகனாகவும் குரூரமானவனாகவும் இருக்கும் அவாங் ஒருபக்கம். இரண்டாவது கணவனாக அவனை மணந்துகொண்டு அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆட்படவேண்டிய நிலையில் இருக்கும் அப்பாவிப் பெண் இன்னொரு பக்கம். இவர்களிடையில் நிலவும் நெருக்கத்தையும் முரணையும் முன்வைப்பதுதான் இச்சிறுகதை.

பழுதாகி நிற்கும் தெருவிளக்கின் தோற்றத்தைச் சித்தரிக்கும் வரிகள், கணவனை இழந்து கைக்குழந்தையோடு துயரத்தில் மூழ்கியிருக்கும் பெண்ணை நினைத்துக்கொள்ளத் தூண்டுகின்றன. பறந்து திரிந்துவிட்டு தரையிலிறங்கும் புறாக்களின் கால்கள் சிக்கிக்கொள்ளும் அளவுக்கு சிறுசிறு வலைகளை தரையெங்கும் தயார்செய்துவைத்து, தந்திரமாக அவற்றைப் பிடிக்கும் அவனுடைய செயலைப் பற்றிய சித்தரிப்பு, அவாங்குக்கும் அவளுக்கும் இடையிலான திருமண வாழ்வின் தன்மையைச் சொல்லாமல் சொல்லி உணர்த்திவிடுகின்றன.

சமையலறையில் குறுக்கும் நெடுக்குமாக ஓடும் எலிகளைப் பிடிக்க எலிப்பொறிகளைப் பயன்படுத்துவதும் எலி பிடிபட்ட பின்னர் அந்தப் பொறியை தொலைவான ஓர் இடத்துக்கு எடுத்துச்சென்று எலியை விடுவிப்பதும் உலக வாடிக்கை. அவாங் வீட்டிலும் அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. பொறியில் எலி மாட்டிக்கொள்கிறது. ஆனால், அப்பொறியை எடுத்துச் செல்லும் அவாங் தண்ணீர் நிரம்பிய வாளிக்குள் அந்தப் பொறியை வைத்திருந்து, அந்த எலி செத்தபிறகு அதை எடுத்துச் சென்று வெளியே வீசுகிறான். அதுதான் அவனிடம் வெளிப்படும் குரூரத்தின் உச்சம். உழைப்பாளியாகவும் ரசிகனாகவும் இருக்கும் ஒருவன் குரூரமானவனாகவும் இருக்கும் புதிரை உணர்த்துகிறார் அரவின்குமார்.

‘அணைத்தல்’ இன்னொரு முக்கியமான சிறுகதை. சின்னம்மாக்கிழவி, குமார் அண்ணன், சுகுமாறன் அங்கிள், வட்டிக்குக் கடன் வாங்கும் அப்பா, கடனை அடைப்பதற்காக பணத்தை எடுத்துக்கொண்டு செல்லும் மகன் என பல பாத்திரங்கள் இச்சிறுகதையில் இடம்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு கோணத்தில் ஒவ்வொருவரோடும் தொடர்புடைய தனிக்கதையாக இச்சிறுகதை தோற்றமளிக்கிறது. காட்சிச்சட்டகங்கள் அந்த அளவுக்கு கச்சிதமாக அமைந்திருக்கின்றன. ஆனால் முடிவை நெருங்க நெருங்க மனிதர்களின் கதையாக அல்லாமல் மானுட குணத்தைப்பற்றிய கதையாக அது மாறிவிடுகிறது. அந்த அளவுக்கு வலுவான காட்சிச்சித்தரிப்புகள் இக்கதையில் அமைந்துள்ளன.

குறுகிய காலத்தில் அதிக அளவில் பணமீட்டும் வழி என சொல்லப்பட்டதை நம்பி திருப்பியளிக்கமுடியாத அளவுக்கு அதிமான தொகையைக் கடனாகப் பெற்றுவிட்டுத் தவிக்கும் அப்பா. தினசரி வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் அளவுக்கு மட்டுமே வருமானமுள்ள மகன். கடன் கொடுத்த குமார் அண்ணன் அளிக்கும் நெருக்கடிகள், அவனால் ஏற்பட வாய்ப்புள்ள ஆபத்துகளுக்கு அஞ்சி எப்படியோ பணத்தைப் புரட்டி மகனிடம் கொடுத்து கடன்கணக்கை நேர் செய்துவிட்டு வருமாறு கேட்டுக்கொள்ளும் தந்தை என பல துண்டுக் காட்சிகள் வழியாக கதை நீண்டு செல்கிறது.

குமார் அண்ணனைப் பற்றிய பழைய நினைவுகளை அசைபோட்டபடி கடனை அடைக்க நடந்து செல்கிற மகனால் குமாரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் இறந்துபோன செய்தி கிடைக்கிறது. அவன் இறந்தால் என்ன, அவனுக்குரிய பணத்தை அவனுடைய அம்மாவான சின்னம்மாக்கிழவியிடம் கொடுப்பதுதான் முறை என்ற எண்ணத்தோடு அந்தக் கிழவியைப் பார்க்கச் செல்கிறான். அவள் தெருவோரத்தில் மரணத்தின் விளிம்பில் இருக்கிறாள். தொகையை அவளிடம் கொடுப்பதா அல்லது திரும்பிச் செல்வதா என நினைத்து ஒரு கணம் தடுமாறுகிறான் அவன்.

கிழவி பசியாறட்டும் என அவளுக்கு அருகில் இரு சோள ரொட்டிகளை வாங்கி வைக்கிறான் அவன். பிறகு ஒதுங்கி நின்று என்ன நடக்கிறது என வேடிக்கை பார்க்கிறான். யாசகத்தை மறுக்கும் வேகத்தோடு அந்தக் கிழவி அதை எடுத்து சாலையில் வீசுகிறாள். அவளுக்குப் பக்கத்தில் சென்று உரையாடலாம் என நினைத்து அருகில் சென்று நிற்கிறான் அவன். கிழவியின் மனத்தில் என்ன ஓடியதோ தெரியவில்லை. ஒரு விம்மலுடன் அவனை அணைத்துக்கொள்கிறாள்.

அந்த அணைத்தலுக்கான தூண்டுதலை அரவின்குமார் சித்தரிக்கவில்லை. என்றோ இறந்துபோன தன் மகனே தன் அருகில் வந்து நிற்பதாக அவளுக்குத் தோன்றியிருக்கலாம். வாழ்வின் இறுதிக்கணத்தில் இளைப்பாறுவதற்குக் கிடைத்த தோளாக அவனைக் கருதியிருக்கலாம். சோள ரொட்டிகளைத் தள்ளி ஒதுக்குவதுபோல மானுட உறவை மனிதர்களால் ஒருபோதும் ஒதுக்கித்தள்ள முடிவதில்லை என்கிற உண்மையை உணர்ந்துகொண்ட கணமாகவும் இருக்கலாம். ஏதோ ஒன்று, அந்த அணைப்புக்குப் பிறகு அவள் சுருண்டு படுத்துவிடுகிறாள். பணத்தை அவளிடம் கொடுக்க நினைத்த இளைஞன் அக்கணத்தில் கொடுக்காமலேயே திரும்பி விடுகிறான்.

அவனுடைய மனநிலையை உணர்த்தும் வகையில் ஒரு புறக்காட்சியைச் சித்தரித்திருக்கிறார் அரவின்குமார். அந்தக் கிழவி சாலையில் தூக்கியெறிந்த சோளரொட்டிகள் மீது தொடர்ச்சியாக வாகனங்கள் ஊர்ந்து செல்கின்றன. அந்த ரொட்டி முதலில் நசுங்குகிறது. அதன் கிரீம் எங்கும் பரவுகிறது. அடுத்தடுத்து செல்லும் வாகனங்களின் பாய்ச்சலால் ரொட்டி விழுந்த தடமே இல்லாமல் சில கணங்களிலேயே மறைந்துபோய்விடுகிறது. மனித உள்ளத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து இல்லாமல் போகும் நன்றிஉணர்ச்சியின் வெளிப்பாடாக அக்காட்சி அமைந்துவிடுகிறது. இத்தொகுப்பில் சிறந்த கதைகளில் ஒன்றாக இக்கதையைக் குறிப்பிடலாம்.

'கோணம்' என்பது இன்னொரு சிறுகதை. புதிதாகப் படமெடுக்கக் கற்றுக்கொள்ளும் ஒளிப்படக் கலைஞர்களுக்கான பயிலரங்கில் நல்ல கோணத்தில் சிறப்பான படங்களை எப்படி எடுப்பது என்பதைப் பற்றி மாஸ்டர் சொல்லிக் கொடுக்கிறார். பயிற்சியின் முடிவில் இரு நண்பர்கள் புதுமையான கோணத்தில் புகைப்படம் எடுக்கும் ஆசையோடு நகரத்தைச் சுற்றி வருகின்றனர். உச்சி வேளை வரைக்கும் எதுவும் சரியாக அமையவில்லை. நண்பகல் உணவுக்காக ஒரு விடுதிக்குச் செல்கின்றனர். அங்கே நடிப்பதற்கு வாய்ப்புத் தேடி அலையும் நடிகரொருவரைக் காண்கின்றனர். வாய் ஓயாமல் அவர் பேசுவதும் அடிக்கடி அறிவுரை சொல்வதும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அக்கணமே அவரைப் பற்றிய தவறான எண்ணம் அவர்கள் நெஞ்சில் உருவாகிவிடுகிறது. அவர் பேசும் ஆத்மார்த்தமான சொற்களை அவர்கள் பொருட்படுத்தவே இல்லை. அவர் சாப்பிட்டதற்கும் சேர்த்து அவர்கள் பணம் செலுத்திவிட்டுச் செல்கின்றனர்.

அன்று முழுதும் நல்ல படம் எடுப்பதற்கான கோணம் அமையவே இல்லை. மறுநாள் வேறொரு பகுதியில் அலைகின்றனர். அங்கும் எதுவும் சரியாக அமையவில்லை. பகல் உணவுக்காக மீண்டும் அதே விடுதிக்கு வருகின்றனர். அப்போது அந்தப் பெரியவர் இல்லை. அது அவர்களுக்கு நிம்மதியுணர்வைக் கொடுக்கிறது. சாப்பிட்டு முடித்தபிறகு பணம் செலுத்த கல்லாவுக்கு அருகில் வந்ததும், அங்கே அமர்ந்திருந்த பெண் அவர்களிடம் பணம் வாங்க மறுத்து, அந்தப் பெரியவர் அவர்களுக்கு வழங்கும் உணவுக்குரிய தொகையை தன் கணக்கில் வரவுவைக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கிறாள்.


அக்கணத்தில், அந்தப் பெரியவர் மீது அந்த இளைஞர்கள் கொண்டிருந்த பிம்பம் கரைந்து இன்னொன்றாக மாறுகிறது. நாம் சாதாரணமாக பார்க்கும் காட்சிகளுக்கும் கேட்கும் சொற்களுக்கும் நம் மனம் உருவாக்கும் கோணம் என்பது முற்றிலும் ஒரு கற்பிதமே என்பதையும் அது வேறொரு கோணமாக இருப்பதற்கான சாத்தியப்பாடுகளை இயல்பாகவே கொண்டிருக்கிறது என்பதையும் அவர்கள் உணர்ந்துகொள்கிறார்கள். ஒளிப்படத்தை மாறுபட்ட கோணத்தில் எடுக்க நினைத்தவர்களுக்கு வாழ்க்கையின் மாறுபட்ட கோணம் பற்றிய புரிதல் ஏற்படுகிறது.

அரவின்குமார் வெவ்வேறு காலகட்டத்தில் எழுதிய பத்து சிறுகதைகள் இத்தொகுதியில் உள்ளன. ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. மலேசிய இளம் எழுத்தாளர் அரவின்குமாருக்கு வாழ்த்துகள்.

●

**கட்டுரையாளர், எழுத்தாளர்.**

# உலகம் வியந்த, உள்ளூர் படிக்க மறந்த நூல்






**க. பழனித்துரை**

ஜேம்ஸ் மேனோர் இங்கிலாந்தில் உள்ள சசெக்ஸ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஐடிஎஸ் என்ற ஆய்வு நிறுவனத்தின் உலகப் புகழ் பெற்ற பேராசிரியர். அவர் உலக வங்கிக்காக உலக நாடுகளில் அதிகாரப்பரவல் எப்படி நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்று ஆய்வு செய்து அறிக்கையாக வெளியிட்டவர். அதேபோல் இந்தியாவிலும் இந்த அதிகாரப்பரவல் என்பது எப்படி புரிந்து கொள்ளப்பட்டது, நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளை உலகத் தரத்தில் வெளியிட்டவர். உள்ளாட்சி அரசாங்கம், அதிகாரப்பரவல் என்ற கருத்தியலில் ஆய்வு செய்யும் அனைவரும் அறிந்த மிகப்பெரும் ஆராய்ச்சியாளர். இவர் "அதிகாரப்பரவல் மற்றும் கிராமிய மேம்பாட்டுக்கான அதிகாரப்படுத்துதல்" என்ற ஆங்கில நூலுக்கு ஒரு அணிந்துரை எழுதி இருந்தார். அதுதான் அந்த நூலை ஆய்வாளர்கள் அனைவரையும் வாசிக்க வைத்தது. ஆனால் அவர் யாரை கட்டாயம் வாசிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினரோ அவர்கள் படித்ததாக அல்லது அந்த நூலைப் பற்றி விவாதித்து பரிசீலனை நடந்ததாக நமக்குப் புலப்படவில்லை. அவர் எழுதிய அணிந்துரையில் நம் ஆய்வாளர்களைக் கடந்து அரசுத் தளத்தில் கொள்கை முடிவுகளை எடுக்கும் நிலையில் உள்ள அனைவரும் படிக்க வேண்டும் என எண்ணி தன் கருத்தினைப் பதிவு செய்திருந்தார். இந்த நூல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பதிப்பகத்தால் 2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்தியாவில் பௌண்டேஷன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

இந்தப் புத்தகம் மிகப்பெரிய பொருள் செலவில் அதாவது 6 கோடி ரூபாய் அளவுக்கு செலவிட்டு இந்தியாவின் 17 மாநிலங்களில் 241 கிராமங்களில் 8659

குடும்பங்களில் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களை வைத்து தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையாகும். இந்த நூல் அதிகாரப்பரவலின் முக்கியத்துவம் பற்றியோ அல்லது அதிகாரப்பரவலால் அனைத்தையும் சாதித்து விடலாம் என்றோ, அல்லது அதிகாரப்பரவல் எதையும் சாதிக்க முடியாது என்றோ தத்துவார்த்த விளக்கங்களைக் கூறவில்லை. மாறாக அதிகாரப்பரவல் உருவாக்கிய தாக்கம் குடும்பத்தில் என்ன என்பதை எந்தவித புனைவும் இன்றி அடிப்படை புள்ளி விவரத்தின் பின்னணியில் விளக்கியிருப்பது அரசு தரப்பில் முடிவெடுக்கும் நிலையில், கொள்ளை உருவாக்கும் நிலையில் உள்ளோர் பெரிதும் பயன்படுத்தும் நோக்கத்தில் தயார் செய்யப்பட்ட அறிக்கை. இந்த அறிக்கையில் புள்ளி விவரத்தின் அடிப்படை மற்றும் முறைமையியல் இரண்டும் புதிதானவைகள். எவரும் உபயோகப்படுத்தாதவைகள். இவைகள்தான் இந்த அறிக்கையின் சிறப்புக்கள் என்று தன் அணிந்துரையில் ஜேம்ஸ் மேனோர் குறிப்பிட்டிருந்தார்.

பொதுவாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் விடுதலை அடைந்த நாடுகள் வறுமை ஒழிப்பில் தீவிரம் காட்டின. பெரும் திட்டங்கள் தீட்டி, பெரும் தொகை ஒதுக்கீடு செய்தது அரசாங்கங்கள். ஆனால், அந்தத் திட்டங்கள் உருவாக்க வேண்டிய தாக்கங்களை உருவாக்கவில்லை. இதனை ஆய்வு செய்து பார்த்தபோது ஆய்வாளர்கள் ஒன்றைக் கண்டுபிடித்தனர். திட்டத்தில் குறையில்லை, நிதி ஒதுக்கீட்டிலும் குறையில்லை ஆனால் திட்டங்களை நடைமுறைப்படுத்திய விதத்தில் முறைமைகளில் பிரச்சினைகள் இருந்ததைக் கண்டுபிடித்து உலகுக்கு விளக்கினர் ஆய்வாளர்கள். இதற்கான தீர்வினையும் அவர்கள் பரிந்துரைத்திருந்தனர். அந்தத் தீர்வுதான் அதிகாரப்பரவலும், மக்கள் பங்கேற்பும். இந்த அதிகாரப்பகிர்வின் மூலமும் மக்கள் பங்கேற்பின் மூலமும், அரசுத் திட்டங்களை முறையாக யாருக்குக் கொண்டு சேர்க்க வேண்டுமோ கொண்டு சேர்த்துவிட முடியும் என்பதை தெளிவுபடுத்தியிருந்தனர். அதன் அடிப்படையில்தான் இந்த அதிகாரப்பரவலை 80க்கும் மேற்பட்ட நாடுகள் முன்னெடுத்து பல்வேறு முறைகளில் நடைமுறைப்படுத்தின. அதில் நம் நாடு அரசமைப்புச் சாசனத்தைத் திருத்தி பகுதி 9 மற்றும் 9Aயில் உள்ளாட்சியை அரசாங்கமாக உருவாக்கி செயல்பட வைத்தது. இது உலக அரங்கில் மாபெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியது. காரணம் பாராளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் ஒட்டுமொத்தமாகவே 5000க்கும் குறைவான எண்ணிக்கையில்தான் மக்கள் பிரதிநிதிகள் செயல்பட்டு வந்தனர். இந்தச் சூழலில் தான் 30 லட்சத்திற்கும்மேல் மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சிக்குள் வரும்போது மிகப்பெரிய மாற்றம் சமூகத்திற்குள், அரசியலில், ஆளுகையில் நிர்வாகத்தில் ஏற்பட்டுவிடும் என்ற பெரும் எதிர்பார்ப்பு அனைவரிடமும் இருந்தது. இதன் அடிப்படையில்தான் கனடாவில் அரசாங்கத்தில் கொள்கை உருவாக்கும் செயல்பாடுகளுக்கு ஆய்வு செய்யும் ஐடிஆர்சி என்ற நிறுவனம் ஏறத்தாழ ஆறு கோடி ரூபாய் நிதியை என்சிஇஏஆர் (NCEAR) என்ற நிறுவனத்திற்கு வழங்கி, புதிய உள்ளாட்சியால் விளைந்தவைகள் என்னென்ன என்பதை ஆய்வு செய்ய உதவியது. இந்த ஆய்வு இந்தியாவில் செய்யப்பட்ட ஆய்வுகளிலேயே மிகப்பெரிய ஆய்வாகும். இதில் எது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்றால், அதிகாரப்பரவலுக்கும், அதிகாரப்படுத்துதலுக்கும் உள்ள உறவு அல்லது தொடர்பு, அதிகாரப்பரவலுக்கும், அதிகாரப்படுத்துதலுக்கும், மேம்பாட்டுக்கும் உள்ள தொடர்பினை ஆய்வு செய்தல். இதில் கிராமப்புற உள்ளாட்சிகளால் ஆளுகை எப்படி வலுப்பட்டுள்ளது, அடுத்து அது தரும் சேவைகளின் தரம் எப்படியுள்ளது, அடுத்து உள்ளாட்சி குடும்பங்களின் மேம்பாட்டுக்கு எந்த அளவு செயல்பட்டுள்ளது என்பதனை மையப்படுத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஆழமாக, சமூகம் மக்களாட்சிப்படுத்தப்படும் போது, எந்த அளவுக்கு இந்த அதிகாரப்பரவல் விளைவுகளை தரத்தில் உயர்த்துகிறது என்பதை ஆய்வு செய்தனர். இந்த ஆய்வை களத்தில் செய்ய ஒரு பெரிய ஆய்வுக்குழு உதவினாலும், இந்த ஆய்வு அறிக்கையை தயாரிக்க உலகளாவிய நிலையில் ஓர் ஆலோசனைக்குழு இருந்து வழிகாட்டினாலும், மூன்று நிபுணத்துவம் வாய்ந்த ஆளுமைகள்தான் தயார் செய்தனர். ஒருவர் இன்று ஐ.ஐ.எம் அகமதாபாத்தில் பணிபுரியும் பேராசிரியர் ஹரி. கே.நாகராஜ். இரண்டாமவர் உலக வங்கியில் பொருளாதார ஆலோசகராக செயல்பட்ட ஹான்ஸ் பிஸ்வாங்கர், மூன்றாமவர் 73வது சட்டதிருத்த மசோதாவை தயாரித்த முன்னாள் மத்திய அரசின் செயலர் எஸ்.எஸ்.மீனாட்சி சுந்தரம். இந்த மூவரும்தான் இந்த அறிக்கையை தயார் செய்தனர். இதில் இரண்டாமவர் மறைந்துவிட்டார். தயார் செய்த அறிக்கையை அறிஞர்களின் பார்வைக்குக் கொண்டு வந்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டு அறிக்கையை செப்பனிட ஒரு சர்வதேச கருத்தரங்கை நடத்தினர். அந்த அறிக்கை இறுதியில் நூல் வடிவமானது. அதை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பதிப்பகம் வெளியிட்டது 2015ஆம்

ஆண்டு. அந்த நூல் உலகத்தின் பார்வையை ஈர்த்தது. ஆனால், உள்ளூரில் நம் உயர் அதிகாரிகள் எவரும் ஏறு கொண்டு பார்க்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

இந்த அறிக்கைக்கு முன்பே மத்திய அரசாங்கம் மாநில அரசுகள் எந்த அளவுக்கு அதிகாரப்பரவலை அரசமைப்புச் சாசனத்தின் பின்புலத்தில் செய்துள்ளன என்பதை "அதிகாரப்பரவல் அறிக்கை" என்ற தலைப்பில் 2016ஆம் ஆண்டுவரை வெளியிட்டு வந்தது. அதன் பிறகு 2024-25 இந்த ஆண்டுதான் கொண்டு வந்துள்ளது. இந்த அறிக்கைகள் ஒரு மையக் கருத்தை வெளிக்கொண்டு வந்துள்ளது. எல்லா மாநிலங்களும் உள்ளாட்சியை வலுப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அதிகாரப் பரவலை முன்னெடுக்கவில்லை. பல்வேறு நிலைகளில்தான் அதிகாரப்பரவல் நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியது. இருந்தபோதிலும் கேரளா வழிகாட்டும் மாநிலமாக திகழ்வதை அந்த அறிக்கைகள் சுட்டுகின்றன. மாநில அரசுகள் பெரிய ஆர்வத்தை அதிகாரப் பரவலுக்கு காட்டவில்லை என்பதை படம் பிடித்துக்காட்டி வந்தன இந்த மத்திய அரசின் ஆய்வு அறிக்கைகள். 2015/16ஆம் ஆண்டு டாட்டி இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சயன்ஸ் என்ற உயர் கல்வி நிறுவனம் மத்திய அரசுக்காக தயாரித்த அதிகாரப்பரவல் அறிக்கைக்கு நான் தலைமை தாங்கியபோதுதான் எவ்வாறு மாநில அரசுகள் உண்மையான அதிகாரப் பரவலுக்கு மாற்றாக உள்ளாட்சிகளை ஒரு முகவையாக செயல்பட வைக்க எண்ணி செயல்படுகின்றன என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது. இதில் தேசிய கட்சிகளுக்கும் மாநிலக் கட்சிகளுக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது.

வெளிநாட்டு நிதி உதவியுடன் செய்யப்பட்ட ஆய்வு அறிக்கை, உள்ளாட்சிகள் என்ன தாக்கத்தை அதன் சேவைகளிலும், குடும்பங்களிலும், உருவாக்கின? பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்து பதவிக்கு வந்த பெண்களால் விளைந்தவைகள் என்னென்ன? ஆளுகையின் தரம் என்ன? கடைக்கோடி மனிதர்களின் தேவைகளை எப்படி பூர்த்தி செய்துள்ளன? என்பனவற்றை மையப்படுத்தி அந்த ஆய்வில் விடை கண்டனர்.

இந்த அறிக்கையில் உலக நாடுகளில் நடைபெற்று வரும் அதிகாரப் பரவல் செயல்பாடுகளிலிருந்து இந்தியா எவற்றையெல்லாம் கற்றுக்கொள்ள முடியும் என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது ஒரு சிறப்பான அம்சம். என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் என்னென்ன சீர்திருத்தங்களை தற்போது முன்னெடுக்க வேண்டும் என்பவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளது இந்த அறிக்கை.

இந்த அறிக்கை அதிகாரப் பரவலுக்கும், மக்களை அதிகாரப்படுத்துவதற்கும், மக்களின் மேம்பாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதை உறுதி செய்கிறது. அதே நேரத்தில் இந்தியாவில் இந்த அதிகாரப்பரவல் முறையாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதைப் படம் பிடித்துக் காண்பிக்கிறது. அதேபோல் அடித்தளத்தில் உள்ள ஆட்சிக் கட்டமைப்பு திறனற்று செயல்படுவதையும் சுட்டிக்காட்டுகின்றது. இருந்தபோதும் இந்த புதிய உள்ளாட்சிகள் பல தாக்கங்களை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் விளக்குகிறது.

கிராமப்புறங்களில் மக்கள் தொகைப் பெருக்கம் வேகம் குறைகிறது, குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை குறைகிறது, அதேபோல் விவசாயம் செய்யும் விவசாயியின் நில அளவு குறைகிறது, தனிமனித வருமானம் கூடுகிறது, விவசாயம் தவிர்த்து, சுயதொழில் செய்து வருமானம் பெறுவது உயர்கிறது, கிராமங்களில் வசதிகள் குறிப்பாக கட்டுமான வசதிகள் கூடியிருக்கின்றன, அதிக எண்ணிக்கையில் அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன, மக்களுக்குச் செய்யும் சேவையின் எண்ணிக்கை கூடியிருக்கின்றன, அவைகளின் தரமும் கூடியிருக்கின்றன, கூலி உயர்ந்துள்ளது, பெண்களின் கூலி அதிகரித்துள்ளது, விவசாய நிலத்தின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது, ஆளுகையைப் பொறுத்தவரையில் கிராமசபை அதிக எண்ணிக்கையில் கூட்டப்படுகின்றது, அதிக எண்ணிக்கையில் கிராமசபைக்கு உறுப்பினர்கள் வருகின்றார்கள், பெண்கள் தலைமையேற்று நடத்துகின்ற கிராமசபையில் விவாதங்கள் நடைபெறுகின்றன, பெண்கள் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன. தலித்துக்கள் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன போன்ற தாக்கங்களை இந்த அறிக்கை படம் பிடித்துக் காண்பித்துள்ளது.

இவ்வளவு அதிகாரப் பற்றாக்குறை நிதிப் பற்றாக்குறை இருந்தும் முடிவு எடுப்பதில் திறனுடன் செயல்படுகின்றன உள்ளாட்சி அமைப்புக்கள் என்றும், பஞ்சாயத்துக்கள் குறைந்த நிதியை தண்ணீருக்கும், சுகாதாரத்திற்கும், கல்விக்கும் செலவழித்தபோதும் விளைவுகள் என்பது அலுவலர்கள் நடத்திய நிர்வாக காலத்தில் இருந்ததைவிட சிறப்பாக இருந்துள்ளது என்பதையும் இந்த அறிக்கை படம் பிடித்துக் காண்பிக்கிறது. அடுத்து தனிநபர் செலவு கல்வியில், சுகாதாரத்தில்,

தண்ணீரில் குறைந்துள்ளது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

பொதுமக்களுக்குத் தேவையான செய்திகள் அரசுத் திட்டங்கள் சம்பந்தமான தகவல்கள் கிராமசபையில் நிறைய பரிமாறப்படுகின்றன. பெண்கள் தலைமை வகிக்கின்ற பஞ்சாயத்துக்களில் நிர்வாக நெறிமுறை பின்பற்றப்படுவது ஒரு சிறப்பு என்பதையும் ஆய்வு கூறுகின்றது. இந்த ஆய்வு அறிக்கை புதிய உள்ளாட்சியின் திறன் எவ்வளவு இருக்கின்றது, அதைப் பயன்படுத்துவதன் மூலம் எவ்வளவு நற்செயல்களை சமுதாயத்திற்குக் குறிப்பாக விளிம்பு நிலை மக்களுக்குக் கொண்டுவர முடியும் என்பதை எடுத்துக் காண்பித்து பல்வேறு விதமான பரிந்துரைகளையும் செய்துள்ளது. இந்த அறிக்கை நூலாக வந்த ஆண்டு 2015.

சென்ற ஆண்டு 2024இல் உலக வங்கி ஆய்வுக்குழு ஓர் ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது. "இரண்டரை லட்சம் மக்களாட்சி" என்ற தலைப்பில். இந்த அறிக்கை இந்திய கிராமங்களில் புதிய உள்ளாட்சி என்பது எப்படி செயல்படுகின்றது என்பதை ஆய்வு செய்த அறிக்கைகளையெல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை இன்னும் ஒருபடி மேல் சென்று 2015இல் வெளியான நூலில் எவைகள் எல்லாம் சாதனைகளாகப் பார்க்கப்பட்டதோ, அவைகளெல்லாம் அடையக்கூடிய லட்சியமாக இருக்கின்றது. அந்தச் செயல்பாடுகள் அதிகரித்த வண்ணம்தான் இருக்கின்றன. அது மட்டுமல்ல, மாநில அரசாங்கங்கள் ஆர்வம் காட்டாத சூழலிலும் இந்த உள்ளாட்சியின் செயல்பாடுகள் என்பது சிறப்பாகவே இருப்பதாக இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. அது மட்டுமல்ல மைய மாநில உறவுகளை ஆய்வு செய்த குழுவாக இருக்கட்டும், அல்லது இரண்டாவது நிர்வாக சீர்திருத்த ஆணையம் உள்ளாட்சிக்காக தயாரித்த அறிக்கையாக இருந்தாலும் அனைத்தும் கூறிய சீர்திருத்தங்களை மத்திய மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தினாலே மிகப் பெரிய மாற்றங்களை கிராமப் பகுதிகளில் கொண்டுவர முடியும். அது மட்டுமல்ல, 2.50 லட்சம் குடியரசுகளை உருவாக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறது இந்த உலக வங்கி அறிக்கை. இருந்தும் நம் மைய மாநில அரசுகள் ஏன் செய்ய மறுக்கின்றன என்பதை ஆழ்ந்து சிந்திக்கும்போது நமக்கு கண்முன் வந்து நிற்பது 1964இல் ஜெயபிரகாஷ் நாராயணன் பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாட்டில் கூறிய செய்திதான். அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார் "இன்றைய ஆட்சியாளர்கள் மக்களுக்கு அதிகாரம் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் மக்களை மேய்க்கத்தான் ஆசைப்படுகிறார்கள். மக்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று எண்ணுவோர் போராடித்தான் பெற வேண்டும். மக்கள் எழுச்சி பெற்று போராடாமல் அது நடைபெறாது. மனுக் கொடுத்து அதிகாரம் கிடைக்காது. எனவே மக்களை அறிவார்ந்தவர்களாக மாற்றி போராடித்தான் மக்களுக்கான அதிகாரத்தைப் பெறவேண்டும்" என்றார்.

இதே கருத்தைத்தான் கேரளாவில் கண்ணனூரில் நடந்த உள்ளாட்சிக்கான சர்வதேச கருத்தரங்கில் வலுயுறுத்தினேன். இன்று நம் தலைமைக்கு மக்களை அதிகாரப்படுத்தும் கடப்பாடு கிடையாது. எனவே பொதுமக்கள் தங்களுக்கான அதிகாரத்தை எடுக்க அரசமைப்புச் சாசனத்தில் தந்த உரிமைகளையும், சட்டங்கள் வழியாகத் தந்த உரிமைகளையும் ஆயுதங்களாக்கி போராடினால் தான் மட்டுமே கிடைக்கும், மனுக் கொடுத்து பெற முடியாது என்ற கருத்தை முன்வைத்தேன். அனைவருக்கும் தெரியும் உள்ளாட்சியின் மகத்துவம். யாருக்கும் மனமில்லை அதை வலுப்படுத்த. காரணம் அவர்கள் இன்று அனுபவிக்கும் சுகத்தை இழக்க வேண்டி இருக்கும் என்பதால். இதுதான் இன்றைய எதார்த்தமான உண்மை. இந்த இடத்தில் நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். சீனாவில் கிராமப்புற மேம்பாட்டுக்காக ஒதுக்கும் நிதியில் 42% நேரடியாக உள்ளாட்சிக்குத் தந்து செலவிட வைக்கிறது. ஊழல் நடந்தால் அவர் சிறைக்கு அனுப்பப்படுகிறார். அங்கு அரசமைப்புச் சாசனத்தைத் திருத்தி உள்ளாட்சிகள் உருவாக்கப்படவில்லை. ஒரு அரசாணை மூலம் உருவாக்கப்பட்டதுதான் சீன உள்ளாட்சிகள். அங்கு ஒரு அரசியல் கடப்பாடு இருக்கிறது ஆகையால் நடைபெறுகிறது.


அதேபோல் கேரளாவில் எப்படி இந்த அதிகாரப்பரவல் இந்தியாவுக்கே வழிகாட்டும் நிலையில் இயங்குகிறது. அதற்குக் காரணம் அங்கு அனைத்துக் கட்சிகளும் இணைந்து மக்களை அதிகாரப்படுத்துவதில் முனைப்புக் காட்டுகின்றனர். அந்த நிலை எல்லா மாநிலங்களுக்கும் வரவேண்டும். அதற்கு ஒரு மக்கள் இயக்கம் கீழிருந்து கட்டமைக்கப்படல் வேண்டும், அதுதான் இன்றைய தேவையும் கூட.

●

**கட்டுரையாளர்:**

**பேராசிரியர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)**

திறனாய்வு




# அரிதாய்த் தோன்றிய அணிந்துரைச் செல்வர்!



**மெய்ஞானி பிரபாகரபாபு**

ஒப்பற்ற இலக்கியவாணர் உள்ளங்களில் ஊஞ்சலிட்டுச் சீராட்டப்படும் மணித்தமிழ் மாமனிதர் சொல்வேந்தர் ஔவை நடராசன் அவர்களின் அணிந்துரைகள் அடங்கிய நூல். "ஔவையின் தமிழமுது" படிக்கப் படிக்கத் தெவிட்டாமல் இனிக்கிறது.

அறிவுச் செய்திகளைத் தாங்கிய அருமைப் பேழையாக இலங்குகிறது. இலக்கியத் தரம் மிக்க அணிந்துரைகளைத் தேர்ந்தெடுத்து அழகுறத் தொகுத்து வழங்கியிருக்கிறார் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள்.

இலக்கியத்தில் பன்முகப் பெட்டகமாக விளங்கிப் பளிங்கொளி வீசிய பல்கலைத் துணைவேந்தர் ஔவை நடராசன் அவர்கள் அவிரொளித் தமிழ் பொழியும் ஆகச்சிறந்த அருந்தமிழ் ஆர்வலர். அடுக்குச் சொற்களால் அருந்தமிழமுது சொரியும் நாவலர். அருந்தமிழ்ப் படைப்புகள் அனைத்தையும் பயின்று பயின்று அருங்கனியாய் முற்றியவர்; வகித்த பதவிகளிலெல்லாம் வெற்றிகளையே பற்றியவர். தானே ஒரு முழுமையாகக் கட்டமைக்கப்பட்ட பல்கலைக்கழகமாக நிலைத்தவர். தன்னிகரற்ற தனித்தன்மை கொண்டு தவறிலாத் தமிழியக்கமாகத் தழைத்தவர்.

சொல்வேந்தர் ஔவை நடராசன் அவர்கள் அவையேறும்போது அரங்கமே ஆர்ப்பரிக்கும் நாட்கள் இன்றும் நினைவலைகளில் நிழலாடுகின்றன. அரங்க அமைதிக்குள் ஒலிபெருக்கியும் நெகிழும் வண்ணம் அன்று அவர் பொழிந்தவை இன்று நினைத்தாலும் செவிகளுக்குள் குழலூதுகின்றன. சுவை குன்றாத் தமிழ்மொழியில் சொற்பொழிவாற்றி வனப்பொடு வாழ்ந்தவர் சொல்வேந்தர். எந்த வகை அவையிலும் அவரே கோலோச்சும் தார்வேந்தர். சொல்வல்லர் என்று பேர்பெற்றுச் சொல்வல்லளாகத் திகழ்ந்தவர். அயன்மையான அரங்காயினும் - நயன்மைமிக்க நற்றமிழால் நலம் பரப்புபவர்.

செந்தமிழ் வேழமாய் மேடையில் நடந்து சென்று சிறப்புரை நிகழ்த்தும் அவரது சொற்பொழிவின் சொல்லாழம் கண்டு சொல்லேர் உழவர்களே சொக்குவதுண்டு. யானும் சொல்வேந்தரின் இனிய தமிழ்மலர்த் தேனைச் சுவைத்து மயங்கிய வண்டு. அமிழ்து பொழிவது போலும் தமிழ் பொழியும் அந்த மணித்துளிகள் அவையோரை மயக்கு நிலைக்குத் தள்ளுபவை. ஒவ்வொரு சொல்லும் கேட்போர் உள்ளத்தில் காவிரிக் கெண்டைகளாத் துள்ளுபவை.

சொல்வேந்தர் என்றும் திருவள்ளுவர் வலியுறுத்திய "அருமை உடைத்தென்று அசாவாமை

வேண்டும்'' என்பதைக் கொள்கையாக வரித்தவர். எண்ணிய எண்ணியாங்கு எய்துவதையே நோக்கம் என்று நெஞ்சத்தில் தரித்தவர். வினைத் திட்பங்களுக்கேற்ற மனத்திட்பம் கொண்டவர். முயற்சிகளைத் திருவினையாக்கி வென்றவர்.

இவருக்கான செழிப்புமிக்க உடைமைகள் பலவாறாக இருந்த போதிலும் இவர் தனது தலையாய உடைமையாகக் கருதியது ஊக்கமுடைமையை. அவர் கவனம் சிதறாமல் எண்ணுவது அன்றாடம் தமிழ்வளர்ப்புக் கடமையை. அவரது ஊக்கமும் உலையா முயற்சியும் அவரை இலக்கிய உச்சத்தில் இருத்தியுள்ளன. உயிர்ப்பான சொற்பொழிவாற்றுவதில் ஒய்யார உயரத்தில் நிறுத்தியுள்ளன.

ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அறிவுத் தேடலுக்கான வேட்கையில் இவர் இளையவர்களை அணுகுவதற்கும் தயங்கியதில்லை. பிறரது இலக்கிய ஐயங்களுக்கு உடனுக்குடன் விளக்கங்கள் தந்து தந்து அவர் தளர்ந்ததுமில்லை. அவரே ஒரு இலக்கிய மேரு. அவரது தேடலின் தடத்தில் நானும் அவரது இலக்கியத் தீர்வுகளுக்காக அணுகப்பட்டதும் நான் பெற்ற பெரும்பேறு.

குணக்குன்றென விளங்கிய குறிஞ்சிப் புலவர் கபிலர் கூறியதுபோல் "நின்ற சொல்லர்; நீடு தோன்றினியர்'' என்று போற்றப்பட்டவர். வாழ்வாங்கு வாழ்ந்து சென்ற வலிமையான வண்ணத்தமிழ்வாணர் என்று சாற்றப்பட்டவர். சொல்வேந்தர் ஔவை நடராசன் அவர்கள் ஓர் ஆகச்சிறந்த அறிவுத் தொழிற்சாலை!

கவிதை, கதை, கட்டுரை, நாடகம், பண்ணிசை, ஓவியக்கலை என பலவகையிலும் மின்னிய கற்பனைச் சோலை. இலக்கணம் பிறழா இலக்கியம் போலும் வாழ்ந்த இனியவர். அவர்போலும் அழகியல் பொழிந்து நிற்கத் தக்கோர் இனியெவர்?.

கட்டு முல்லைகளை இட்டுத் தொடுத்த கதம்ப மாலைகளின் தொகுப்பாகத் திகழ்கிறது இந்நூல். சார்பு செய்து வாழுதல் பிணி, கோடாமையே சான்றோர்க்கு அணி என்ற தெய்வப்புலவர் கூற்றுக்கேற்ப நூலாசிரியர்களை மேம்படுத்தும் செம்மனத்தோடு சீர்தூக்கி அணிந்துரைகளை அள்ளி வழங்கியுள்ளார். நான் உணர்ந்தவரை, சிறந்த அணிந்துரை எழுதுவதற்கென்று இலக்கணம் வகுத்துள்ளார்.

அணிந்துரைகளில் இவர் கையாளும் முறையே ஒரு தனிப்பாங்கு. படைப்பாளர்களைத் தனது பனிமொழிகளால் பாராட்டி ஊக்கப்படுத்துவதற்கு இவர் நிகரற்றவர் என்பதற்கு இந்நூல் ஒரு தக்க சான்று. அணிந்துரைகளுக்கு முன்னோட்டமாக வழங்கப்பட்டுள்ள முன்னுரைகளே எண்ணற்ற அரிய செய்திகளைத் தருகின்றன. அவற்றிலேயே இவரது ஆளுமைமிக்க அணுகுமுறைகள் தெரிகின்றன. புலமைமிக்க புத்தகம் கிடைத்துவிட்டால் புத்தொளி தெறிக்கும் ஒரு புகழாரமே சூட்டி விடுவார். தன்னெதிரில் நூலாசிரியர் தோன்றிவிட்டால் ஒரு தமிழாரமே தந்து விடுவார்.

அணிந்துரைகளில் வெளிப்படும் செறிவான கருத்துகள் வாசகரை அறிவின்பம் பெற வைப்பவை. விழையும் விழுமிய பயன்களை நல்கி நெஞ்சத்தில் தைப்பவை. மொழிநலம் போற்றுவன, தமிழர் வரலாறுகளைச் சாற்றுவன, மூட எண்ணங்களைத் தூற்றுவன, திருக்குறள் உரைவளம் கூறுவன, காப்பிய எழில்வளம் குறிப்பன, இலக்கிய வளங்களை விலக்கிக் காட்டுவன, இலக்கணச் செழுமைகளை விரித்துச் சுட்டுவன எனப்பலத் திறனுரைகள். இடையிடையே இனிப்பவை, குறள் வரிகளால் சுட்டிக் காட்டப்படும் அறவுரைகள். சொல்வேந்தரின் அணிந்துரைகள் அத்தனையும் அமுதுரைகள்.

இந்த நூலில் உள்ள அணிந்துரைகளைப் படிக்கும்போது "இவருக்குத் தெரியாததுதான் என்ன?'' என்று வியப்பால் விழிகள் விரிகின்றன. சங்க இலக்கியங்கள், இலக்கணங்கள், முடிமன்னர் வரலாறுகள், மொழி ஆய்வுகள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், திருக்குறள், காப்பியங்கள், சமய நூல்கள், சிறுகதைகள், புதினங்கள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், உரைவீச்சுகள், நாடகங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், வழக்காற்றுக் கதைகள், நவீன இலக்கியங்கள், மருத்துவம் என இவர் அணிந்துரைகள் வழங்காத துறைகளே இல்லை.

ஒவ்வொன்றும் ஒரு நறுமண முல்லை. சொல்வேந்தரின் அறிவுப்பரப்புக்கு இல்லையொரு எல்லை. எத்தகைய நூலாயினும் அந்த நூலின் தன்மையை நுட்பமாக எடுத்துரைக்கும் திறம் இவர்க்குக் கைவந்த கலை. மனத்தை மயக்கும் இவரது மந்திரச் சொற்களுக்கு இல்லையொரு விலை.

நூலாசிரியர் சார்ந்த துறையையும் அணிந்துரைக்குள் வைத்துச் சொற்சிலம்பம் செய்யும் வித்தகம் பல இடங்களில் பளிச்சிடுகின்றன. கவிதை நூல்கள் எனில் அவற்றுள் விரவிய கலைநயச் சொற்கள், கற்பனைச் செழுமை, யாப்பமைதி, ஓசை நயங்கள், வடிவங்கள், படிமங்கள், தொடுப்பு என இவர் விளக்கும் பல்வேறு விழுமியங்கள் படிப்போர் நெஞ்சில் வெளிச்சமிடுகின்றன. மரபுக்கவிதைகள் எனில் அவற்றின் இலக்கண மாட்சியை எடுத்துக் காட்டுகிறார். புதுக்கவிதைகளில் உள்ள புத்தாக்கம், பொதுச்சிறப்புகள், சொற்செட்டுகள், கருத்து

நறுக்குகள் எனக் கண்டெடுத்துப் பாராட்டிப் புதுமை கூட்டுகிறார்.

செந்தமிழுணர்வை ஊக்கும் செப்பமிகு சொல்லாட்சி, கவிதைகளின் கட்டமைப்பு, ஒவ்வொரு நூலாசிரியரின் கருத்தியலிலும் ஆழம் சென்று தன்னுடைய அறிவாற்றல் மிக்க எண்ணங்களைப் பதிவு செய்யும் பாங்கில் அவரது கவிதைப் புலமையை காண முடிகிறது. நூல்களில் பொதிந்த புதுமைகள், புலமை வளங்கள், கருத்துச் செறிவுகள், கற்பனை நயங்கள் என அனைத்தையும் கல்லியெடுத்துச் சொல்லியடிக்கிறார்.

நல்ல நூல்கள் கைவரப்பெற்றதில் நெகிழ்ந்து நவில்தொறும் நவில்தொறும் இன்பம் பொங்கி முகமலர்கிறார். நசை மிகுத்து அணிந்துரைகளில் ஆனந்த முரசடிக்கிறது இவரது எழுதுகோல். அறிந்தவர் அறியாதவர் என்று பாகுபாடின்றி நூலுக்கேற்றபடிச் சமன்சீர் செய்து திறனுரைப்பதில் இவரொரு துலாக்கோல். பகட்டான நூல்களுக்கும் பட்டாடை அணிவித்துப் புகழாரம் சூட்டி இனியவை கூறலில் இவருக்கு நிகர் இவரே. நுட்பமான நூல்களில் உள்ளவற்றை மனமுவந்து பாராட்டுவார் எனினும் இலக்கிய வரையறைகளுக்கு இம்மியும் ஒவ்வாத கருத்தோட்டங்களையும் கண்ணியமாக மறுத்துக் கூறும் மயிலிறகு வருடல்களையும் காண முடிகிறது.

புத்தகத்தின் தன்மைக்கேற்ப அணிந்துரையைப் பெருமளவு விரிக்காமல் சுருக்கமாகச் சிறப்பாகத் தந்து விடுவதில் இவருடைய மதியூகத்தை உணர முடிகிறது. நூலாசிரியரின் எழுத்துப் பெருமைகளை மட்டுமே சுற்றி வந்து முடிப்பதையும் காண முடிகிறது. நுண்ணிய நூல்பல கற்று நூல்களைப் படித்து நூலெழுதினாலும் உண்மை அறிவே மிகும் என்பதை வாசிப்போர் உணரும் வகையில் சுட்டிக் காட்டவும் அவர் தவறவில்லை.

மெச்சத்தகுந்த நூல்களின் அணிந்துரைகளில் நூலாசிரியரை மேலோங்க வாழ்த்தவும் இவர் தயங்கவில்லை. தகுதி சான்ற நூலாசிரியர்களை இவர் தலைமேல் தாங்கிப் போற்றவும் தவிர்க்கவில்லை. ஒவ்வொரு கருத்தியலை அலசும்போதும் பல அறிவுச் செல்வங்களை அள்ளித் தெளிக்கிறார். அறிவு சார்ந்த நூல்களில் அகம்பூத்துக் களிக்கிறார். கைக்கு வந்த நூலின் சிறப்பால் கரை கடந்த மகிழ்வில் இவர் திளைக்கும்போது வெளிப்படுத்தும் கவித்துவமான வரிகள் படிப்போரையும் நூல் வாசிப்புக்குள் நுழைய உந்துவன. படைப்பாளரை மேலும் படைக்க ஊக்குவன. ஒவ்வொரு வகைப்பாட்டின் நூலுக்கேற்ப தனது எழுதுகோலை மாற்றிக் கொள்வது கலை. இவரிடம் பெறும் பாராட்டுக்கு இல்லையொரு விலை.

பல்வேறு வரலாற்று நூல்கள், செவ்வியல் இலக்கியங்கள், மொழி வளர்ச்சி தொடர்பான நூல்களுக்கு கூரிய ஆய்வுநோக்கு மிக்க கருத்தோட்டங்களைப் பதிவு செய்திருப்பது அவரது படிப்பாற்றலையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. நூலறிவு மிகுதியால் இவரை அறியாமலே தனது அறிவுக் குவைக்குள் இருக்கும் கருத்துகளை படரவிடுகிறார். பரந்துபட்ட பட்டறிவால் பல்சுவைக் கூற்றுகளால் பந்தலிடுகிறார். தூயநீர் போலும் துலக்கமான சொல்லமைப்புகள்; தேர்ந்த கைவினைஞரைப் போலும் துல்லியமான முன்வைப்புகள்.

மனத்துள் எண்ணினாலே மகிழும் உணர்வுதரும் மகிழம்பூப் போலும் வரிகள்; தாழம்பூப் போலும் தழைத்து மணக்கும் சொல்வார்ப்புகள். கடினமான இரும்பினைக் காய்ச்சித் தகடாகவும் அடிக்கலாம்; கம்பியாகவும் நீட்டலாம் என்ற அறிவியல் தேற்றத்திற்கேற்ப கடின இலக்கியங்களையும் இளக்கித் தருகிறார்.

தமிழுக்குரிய வரிவடிவ எழுத்துகள் வட்டெழுத்துகள் என்பதற்கு தனது விளக்கங்கள் வழி முடிபுகளை முன்வைத்திருப்பது சிறப்பு. தமிழ்மொழி வரலாற்றை உற்றுநோக்கி எழுத்து ஆராய்ச்சி செய்து பதிவு செய்துள்ள கட்டுரைக் குறிப்புகள் மொழி ஆய்வாளர்களுக்குப் பயன்தரக் கூடியவை.

புதியனவற்றை வரவேற்பதிலும் போற்றுவதிலும் அவர் எவ்வகையிலும் தயக்கம் காட்டியதில்லை என்பதற்கு ஓர் சான்று, எனது சிலப்பதிகார வார்ப்புரை நூலுக்கு அவர் தந்த அணிந்துரையில், “ இன்றைய வாசிப்புக்கேற்ப சிலம்புக்குத் தாங்கள் எளிய உரை கொணர்ந்திருப்பது கண்டு அகமகிழ்கிறேன் ” என்று குறிப்பிடுவதில் புதிய தலைமுறைக்கேற்ப தன்னை வடிவம் மாற்றிக் கொள்ளும் ஒப்பற்ற தன்மையைக் காண முடிகிறது.

சமய நூல்களுக்குத் தந்துள்ள அணிந்துரைகளிலும் இவரது ஆழமான சமய நோக்குகளை முன்வைக்கிறார். பல்வேறு ஆளுமைகளின் கருத்தோட்டங்களிலிருந்து மேற்கோள்களைத் தந்து அணிந்துரைகளுக்கு வலிமை சேர்க்கிறார். இறைவன் திருவடியைப் புகழவரும் சொல்வேந்தர், பதம் என்ற சொல்லின் வேர்ச்சொல், கிளைச்சொற்கள் என்று விரிந்து விளக்கிச் செல்வதில் நூலுக்கு வலு சேர்ந்து விடுகிறது.

ஒப்பில்லா உரைவேந்தரின் அரும்புதல்வனாக உரைநூல்களில் உள்ள அனைத்து உரை நலங்களையும் உவந்து முன்வைத்திருப்பதில் தான் கற்றவை யாவும் யாவருக்கும் பயன்தர வேண்டுமெனும் வேட்கையைக் காட்டுகிறார். புதிய

உரைநூல்களுக்கும் பண்டைய உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர், ந.மு.வேங்கடசாமி நாட்டார் போன்றோரின் விளக்கங்களையும் சுட்டி நூலுக்கு மேலும் சிறப்புக் கூட்டுகிறார்.

ஒவ்வொரு நூலிலும் உள்ள சிறப்பியல்புகளை இலக்கியச் சான்றுகளோடும் விளக்கங்களோடும் எடுத்துக்காட்டி நூலாசிரியரையும் மனமுவந்து பாராட்டுவதில் அவரது இனிய பண்பினைப் பார்க்க முடிகிறது. உதாரணமாக, சிலப்பதிகார உரைநூலுக்கு அணிந்துரை வழங்குகையில் உரைகளின் சிறப்பை விரித்துரைப்பதோடு காப்பியத்தின் பெருமை, பெயர்க்காரணம், காப்பிய நுட்பங்கள், கண்ணகி, கோவலன் உள்ளிட்ட கதைமாந்தர்களின் குணநலன்கள், அருமைமிகு செம்மொழியான தமிழ்மொழியின் ஆளுமை என அனைத்தைச் சுற்றியும் பயணித்து வழங்குவது இவரிடம் மட்டுமே காணக்கூடிய தனித்தன்மை எனலாம்.

நூல் ஒன்றன் பொருண்மையில் ஆய்வுரைக் குறிப்புகள் வழங்கும் அதே வேளையில் தான் பிற இலக்கியங்களில் பனுவல்களில் கற்றறிந்த பொருத்தமான குறிப்புகளைக் கொணர்ந்து பொருத்திக் காட்டுவதில் கைதேர்ந்தவராகத் தனது அறிவாற்றலுக்குப் பெருமை சேர்க்கிறார். அணிந்துரைகளைச் சொற்றொடர்கள் தொகுப்பாகக் கருத வைக்காமல் அவை தேடற்கரிய கருத்துச் செறிவுகள் அடங்கிய கருவூலமாக்கித் தந்து அணிந்துரைகளுக்கே அலங்காரம் செய்கிறார்.

பழந்தமிழ் இலக்கியங்களில் இவருக்கிருக்கும் பேராண்மை, தற்கால இலக்கியங்களிலும் இவர் கொண்டிருக்கும் மேலாண்மை, தமிழக வரலாறு மட்டுமன்றி உலக வரலாற்றில் கொண்டிருக்கும் ஆழமான அறிவாற்றல் அனைத்தும் வியக்க வைக்கின்றன. அயல்நாடுகளுக்குக் கலஞ்செலுத்தி வென்ற சேரமன்னர்களின் வரலாற்றைச் செம்மையோடு விளங்க வைப்பதிலாகட்டும் அரபு நாட்டு வணிகத் தொடர்புகளை ஆய்ந்து கூறுவதிலாகட்டும் சொவேந்தரின் வலுவான இலக்கியச் செறிவுகள் சிலிர்க்க வைக்கின்றன.

நூலின் தொன்மைக்கேற்ப தனது மொழிநடையிலும் மாற்றம் காண்பித்து எழுதுவது இவரது மற்றொரு சிறப்பு. பழந்தமிழ் நூல்களின் தன்மைக்கேற்ப செவ்வியல் நடையிலும் தற்காலத்துப் புதுநடை நூல்களுக்குத் தற்கால வழக்கிலும் எழுதுவது இவரது மதியூகத்துக்குச் சான்று. ஒவ்வொரு அணிந்துரையிலும் நூலின் உள்ளடக்கத்துக்கேற்ப கூரிய அறிவாற்றலோடு இவர் புகுத்தும் குறிப்புகள் மற்றும் கருத்துகள் இவருக்குத் தெரியாதவை என்பவை எதுவுமே இல்லை என்ற வியப்பை ஏற்படுத்துகிறது.

மு.வ., சி.பா., வாகீச கலாநிதி கி.வா.ஜ போன்ற அறிஞர்கள் மட்டுமன்றிச் சமகால இலக்கியவாணர்கள் மீதான பாராட்டுக் குறிப்புகளில் அவர்களின் இலக்கியப் பங்களிப்புகளைக் குறிப்பிட்டு அன்னாரது பெருமைகளை உயர்த்திக் காட்டிப் பதிவு செய்வதில் அவரது சான்றாண்மை ஒளிர்கிறது. பெருந்தன்மை மிளிர்கிறது.

ஔவை நடராசன் அவர்கள் ஆயிரம் பணிகளுக்கிடையில் அணிந்துரைகள் எழுதி எழுதிக் கை சிவந்தவர். கலைச்சொற்கள் தருவதில் தலை சிறந்தவர். காணும் இலக்கியங்களில் எல்லாம் களிப்போடு கால் பதித்தவர். படைப்பாளர் இளையோரே ஆயினும் பக்குவம் கண்டு மதித்தவர். அகவை மிகுந்தாலும் அடங்காப் பசியால் அளவில்லா இலக்கியங்களை அள்ளி விழுங்கியவர். நாடி வந்தவர்களின் அணிந்துரைகளுக்கு கிள்ளி வழங்குபவர்கள் இடையில் இவர் அருள் கொண்டு அள்ளி வழங்கியவர். இவருடையவை எளிய உரைநடை என்பதால் எவ்வளவு படித்தாலும் அகத்துள் செறிக்கிறது. இளமைப் பருவத்தில் தனது காதலில் அவர் கொண்டிருந்த களவு பற்றிக் கூறுகையில் நகைப்பு தெறிக்கிறது.

ஔவை நடராசன் அவர்கள் ஒன்னார் இல்லாத உயர் தமிழ் வேந்தர். தண்ணார் தமிழ் வளர்த்த தகைமையாளர். தெள்ளு தமிழ்த் தென்னகம் கண்ட தெள்ளிய இலக்கியத் திருமாமணி. இவரது இனிய செவ்வுரைக் காலம் வருமா இனி ? சொல்வேந்தரின் ஔவை நடராசன் அவர்களின் பன்முக ஆற்றலை பறைசாற்றும் பளிங்குப் பெட்டகம் இந்நூல்.


சொல்வேந்தர் ஔவை நடராசன் அவர்களின் புதல்வர் முனைவர் ஔவை அருள் அவர்கள், கருத்துக் கருவூலமாகவும் காலக் கண்ணாடியாகவும் திகழும் இத்தகையதொரு செழுமையான நூலை அழகுற உருவாக்கி அருந்தமிழ் உலகுக்கு அளித்துள்ளமைக்காகப் பாராட்டுக்குரியவர்.

அத்தனைப் படைப்புகளையும் அதி கவனத்தோடு திரட்டி, வடிவமைத்து நூலாக்கி அரும்பணியாகிய இப்பெரும்பணியைச் செய்திருக்கும் மேனாள் துணைவேந்தர் பத்மஸ்ரீ ஔவை நடராசன் அவர்களின் தனிச்செயலர் பொன்னேரி பிரதாப் அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகள்.

●

**கட்டுரையாளர்: கவிஞர், தலைவர், உலகச் செம்மொழித் தமிழ்ச் சங்கம், சங்க இலக்கிய உரையாசிரியர்**

## அறிமுகம்




# அண்ணல் அம்பே
# 100 தொ

### ஜனநாயகத்துக்கான போராட்

அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் மக்கள் பதிப்பு 100 தொகுதிகளில் 10 தொகுதிகள் இப்போது வெளியாகியுள்ளன. தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இந்தத் தொகுதிகளை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இம்மக்கள் பதிப்பின் அனைத்துத் தொகுதிகளும் இந்த ஆண்டு (2025) இறுதிக்குள் வெளியாகிவிடும்படி திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பதிப்பு தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் வெளியாகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இதற்கான நிதி ஒதுக்கீட்டை அறிவித்து அணிந்துரை ஒன்றையும் எழுதி வழிகாட்டியுள்ளார். மேலும், இத்தொகுதிகளின் தயாரிப்பை மேற்பார்வை செய்வதற்கான நெறியாள்கைக் குழுவினர் தொகுதிகளின் தமிழ் நடையையும் உள்ளடக்கத்தையும் சரிபார்த்தனர்; திருத்தங்களையும் மேம்பாடுகளையும் பரிந்துரைத்து வழிகாட்டினர்.

இந்த மக்கள் பதிப்பு ஏற்கெனவே வெளியான அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்களின் தொகுப்புகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது? இதைப் புரிந்து கொள்ள அண்ணல் அம்பேத்கரின் அறிவுத்துறை பங்களிப்பைப் பற்றியும் அதன் தன்மை பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்.

### அம்பேத்கரின் அறிவுப்பணி

அம்பேத்கரின் அறிவுப் பணி, 1916 ஆம் ஆண்டு மே மாதம் அவர் அமெரிக்காவின் நியூயார்க் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நடந்த மானிடவியல் கருத்தரங்கில் வாசித்து அளித்த *இந்தியாவில் சாதிகள்: அவற்றின் இயங்கியல், தோற்றம் வளர்ச்சி* என்ற ஆய்வுக் கட்டுரையில் இருந்து தொடங்குகிறது. அம்பேத்கர் தமது இளங்கலை படிப்பை மும்பையில் உள்ள எல்ஃபின்ஸ்டன் கல்லூரியில் முடித்துவிட்டு முதுகலைப் பட்டமும் முனைவர் பட்டமும் பெறுவதற்கு கொலம்பியா பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். முன்னதாக, *கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகமும் நிதித்துறையும்*, *பண்டைக்கால இந்திய வணிகம்* ஆகிய பொருளாதார ஆய்வுக் கட்டுரைகளை அவர் எழுதியிருந்தார்

அவரது ஆய்வுப் பணி, 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் அவர் இறந்ததற்கு முன்னிரவில் எழுதி முடித்த *புத்தரும் அவரது தம்மமும்* என்ற நூலோடு முடிவடைந்தது. இந்த 40 ஆண்டுகால அறிவுப் பணியில் அவர் பொருளாதாரம், சட்டம், இந்திய வரலாறு, பண்டைய இந்தியாவில் வர்க்கப் போராட்டம், இந்து மதத்தின் தத்துவம், சமகால சமூகவியல், அரசியல் என்று பல்துறைகளிலும் தமது ஆய்வுப் பங்களிப்பை வழங்கியிருந்தார்.


### அம்பேத்கரின் அரசியல் போராட்டங்கள்

அவரது பொது அரசியல் வாழ்வு 1918 இல் சீர்திருத்தங்களுக்கான சௌத்பரோ குழுவில் ஒடுக்கப்பட்டவர்களின் அரசியல் உரிமைகளைக் கேட்பதற்கான அறிக்கை வழங்குவதில் இருந்து தொடங்கியது.

1. அம்பேத்கர் 1920-களில் மகாராஷ்டிராவில் பல்வேறு இடங்களில் தலித் மக்களின் குடிமை உரிமைகளுக்கான போராட்டங்களில் பங்கேற்றார். பொதுக் குளத்தில் தண்ணீர் குடிக்கும் உரிமை, பொதுப் பள்ளிகளில் தலித் மாணவர்கள் கல்வி கற்கும் உரிமை, கோயில்களில் நுழையும் உரிமை என இந்த குடிமை உரிமைகள் இயக்கம், 1960-களில் அமெரிக்க ஐக்கிய அரசுகளில் கருப்பின மக்களின் குடிமை உரிமைகளுக்காக மார்ட்டின் லூதர் கிங் நடத்திய குடிமை உரிமைகள் இயக்கத்துக்கு நிகரானது.



மா. சிவ




# ...பத்கர் ஆக்கங்கள் ...ததிகளில்

## ...டத்தில் கருத்தியல் ஆயுதமாக

2. *1920-களின் கடைசியிலும் 1930-களிலும் எதிர்கால இந்தியாவின் ஜனநாயகத்தைக் கட்டமைக்கும் பணியில் சைமன் ஆணையத்தின் முன்பும் வட்டமேசை மாநாடுகளிலும் அறிக்கைகள் வழங்கினார், உரையாற்றினார், சாட்சியம் கொடுத்தார்.*
3. *காலனிய ஆட்சியின் போது பம்பாய் சட்ட மன்ற உறுப்பினராகவும் அரசப் பிரதிநிதி அவையில் தொழிலாளர் உறுப்பினராகவும் (அமைச்சர்) சுதந்திர இந்தியாவுக்கான அரசியல் சட்ட அவையில் வரைவுக்குழு தலைவராகவும் இந்திய நாடாளுமன்றத்தில் நேரு அமைச்சரவையில் சட்ட அமைச்சராகவும் பதவி விலகிய பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணி புரிந்தார்.*



...குமார்

### அம்பேத்கரின் தொடக்ககால வாழ்க்கை

*அம்பேத்கர் பிறந்தது மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த மகர் என்ற சாதியில். மகர் மக்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். தீண்டப்படாதோராக நடத்தப்படும் பிரிவினர். பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பெனியின் படையில் சேர்வதன் மூலம் தீண்டாமை என்ற சமூகச் சிறையில் இருந்து ஓரளவு விடுதலை பெற்றனர், மகர் மக்கள். இராணுவத்தில் சேர்ந்து கல்வி கற்கவும் போர் புரியவும் வாய்ப்புகளைப் பெற்றனர். அம்பேத்கரின் தந்தை 1893இல் பிரித்தானிய இராணுவத்தில் சுபேதார்-மேஜராக பணியாற்றியவர்.*

*கல்வியறிவு பெற்ற குடும்பச் சூழலில் வளர்ந்த அம்பேத்கர், மகாராஷ்டிராவில் பொதுப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளியில் பிற மாணவர்களிடம் இருந்து தனியே, தரையில் கோணிப்பையை விரித்து உட்காரும்படி வைக்கப்பட்டார். அவருக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்றால் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் பானையில் இருந்து சாதி இந்து மாணவர் யாராவது தண்ணீரை எடுத்து ஊற்றினால்தான் குடிக்க முடியும்.*

*அதன் பின்னர், மும்பை எல்பின்ஸ்டன் கல்லூரியில் தமது பட்டப்படிப்பை நிறைவுசெய்தார். கல்வி உதவித் தொகை பெற்று அமெரிக்க ஐக்கிய அரசுகளின் நியூயார்க் மாநகரிலும் (கொலம்பியாப் பல்கலைக் கழகம்) இலண்டன் மாநகரிலும் (லண்டன் பொருளாதாரப் பள்ளி) பொருளாதாரமும் சமூகவியலும் சட்டமும் படித்து இரண்டு முனைவர் பட்டங்களும், சட்டத்துறையில் பாரிஸ்டர் பட்டமும் (கிரேஸ் இன், லண்டன்) பெற்றார்.*

*மேற்படிப்பு முடித்து இந்தியா திரும்பிய பிறகு, மேற்படிப்புக்கு நிதி உதவி செய்த பரோடா மன்னரின் அரசில் ஊழியராக பணியாற்றச் சென்ற போது தங்குவதற்கு இடம் கூட கிடைக்காமல் அல்லலுற்றார். தங்கியிருந்த இடத்தில் இருந்து வன்முறை மிரட்டல்கள் மூலம் துரத்தப்பட்டார்.*

*இந்தப் பின்புலத்தில், இந்தியச் சமூகத்தின் ஜனநாயகத்துக்கு எதிரான கட்டமைப்புகளான சாதி, படிநிலை ஏற்றத்தாழ்வு, இவற்றின் விளைவான தீண்டாமை, அகமண முறை ஆகியவற்றை எதிர்த்து வீழ்த்தவும் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் அடிப்படையிலான ஜனநாயக சமூகத்தை நிறுவுவதற்காகவும் போராடியதாக அம்பேத்கரின் அரசியல் வாழ்க்கை அமைந்திருந்தது.*

### அம்பேத்கரின் ஆய்வுப் பணித் தொகுப்பு

- *அம்பேத்கரின் அரசியல் பொருளாதாரத் துறை ஆய்வேடுகள் 1. இந்தியாவில் சாதிகள்: அவற்றின் இயங்கியல், தோற்றம் வளர்ச்சி (1916) 2. இந்தியாவில் சிறுநிலவுடைமைகள் – அவற்றின் தீர்வுகள் (1918) 3. பேரரசு நிதியின் மாகாண பரவலாக்கத்தின் பரிணாமம் (1925) 4. இந்திய ரூபாய் பற்றிய சிக்கல்: அதன் தோற்றம் - தீர்வு (1923) 5. திரு ரஸ்ஸல் – சமூகத்தின் மீள்கட்டமைப்பு (1918)*
- *உரைகளின் நூல் வடிவம் 1. சாதியை அழித்தொழித்தல் (1936) 2. இரானடே, காந்தி,*

ஜின்னா (1943) 3. கூட்டாட்சி – சுதந்திரம் (1939) 4. காந்தி – தீண்டப்படாதோர் விடுதலை (1943)

- இந்திய சமூகம் பற்றிய வரலாற்று ஆய்வு நூல்கள் 1. பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை (1940) 2. சூத்திரர்கள் யார்? அவர்கள் எவ்வாறு இந்தோ ஆரிய சமூகத்தின் நான்காவது வருணம் ஆயினர்? (1946) 3. தீண்டப்படாதோர்: அவர்கள் யார்? அவர்கள் ஏன் தீண்டப்படாதோர் ஆயினர்? (1948)
- இந்திய அரசியல், சமூகம் 1. காந்தியும் காங்கிரசும் தீண்டப்படாதோருக்கு செய்தது என்ன? (1945) 2. மொழிவாரி மாநிலங்கள் பற்றி 3. புத்தர் – அவரது தம்மம் (1956)
- ஆணையங்கள் (சௌத்பரோ குழு, சைமன் ஆணையம், வட்டமேசை மாநாடுகள்) முன்பு அளித்த அறிக்கைகளும் பம்பாய் சட்டமன்ற, நாடாளுமன்ற (இந்து சட்டத் தொகுப்பு), அரசப் பிரதிநிதி அவை (தொழிலாளர் உறுப்பினர்), அரசியல் அமைப்பு அவை பதிவுகளும்
- அம்பேத்கர் நடத்திய மூக்நாயக், பகிஷ்கிரித் பாரத், சமதா, ஜனதா, பிரபுத்த பாரத் முதலான பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் அவரது பல்வேறு உரைகளின் பதிவுகளும் அவரைப் பற்றி பிற ஆங்கில, மராத்தி பத்திரிகைகளில் வெளியான செய்திகளும்
- கையெழுத்துப் படிகளாக 1. இந்து மதத்தின் தத்துவம் 2. பண்டைய இந்தியா: புரட்சி – எதிர்ப்புரட்சி 3. இந்தியா – பொதுவுடைமைக்கான முன்தேவை 4. புத்தரா கார்ல் மார்க்சா 5. தீண்டப்படாதோர்: இந்தியச் சேரிகளின் குழந்தைகள் 6. தீண்டப்படாதோர் – தீண்டாமை: அரசியல், சமூகம், மதம் தொடர்பான கட்டுரைகள்

**அம்பேத்கரும் இந்திய அறிவுத்துறையும்**

இந்திய சமூகத்தில் உழைக்கும் மக்களான தீண்டப்படாதோருக்கு எதிரான சமூகச் சுரண்டலும் பெரும்பான்மை இதர பிற்படுத்தப்பட்டோருக்கு கல்வி, சொத்துடைமை, சமூக உரிமைகள் மறுப்பும் அம்பேத்கரின் ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் முதன்மை தாக்குதல் இலக்காக இருந்தது. அவர் இந்து சமூகத்தின் நால்வருண படிநிலைக் கட்டமைப்பையும் படிநிலை ஏற்றத்தாழ்வு என்ற கருத்தாக்கத்தையும் இந்து மதத்தின் தத்துவத்தையும் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கினார். அதற்காக, இந்து வேதங்கள், சாஸ்திரங்கள் முதலான புனித நூல்களில் இருந்து ஏராளமான ஆதாரங்களைத் திரட்டினார். இந்து சமூக அமைப்பு அநீதியானது, முன்னேற்றத்துக்குத் தடையானது என்று நிறுவினர்.

இந்தியாவில் அறிவுத்துறையை தமது முற்றுரிமையாக ஆக்கிக் கொண்ட சலுகை பெற்ற உயர்நிலைப் பிரிவினர், தமது சமூக மேலாதிக்கத்துக்கு சவால் விடும் அம்பேத்கரின் பணிகளை பகைமையுடன் எதிர்கொண்டது இயல்பானதே. காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் (மேல்நிலை சாதி இந்துக்கள்) ஆதிக்கம் செலுத்திய இந்தியப் பத்திரிகை உலகமும் பதிப்புலகமும் அம்பேத்கரின் எழுத்துகளை புறக்கணித்தன, கடுமையாகத் தாக்கி எழுதின; தீண்டப்படாதோரின் குடிமை உரிமைகளுக்கான போராட்டம், அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான போராட்டம் இரண்டையும் தேசநலனுக்கு எதிரானவை என்று கொச்சைப்படுத்தின, அவதூறு செய்தன.

தம் வாழ்நாள் முழுவதும் ஊடக உலகமும் அறிவுலகமும் ஒத்துழைக்காத சூழலிலேயே அம்பேத்கர் தனது அரசியல் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். கோடிக்கணக்கான தீண்டப்படாத, சுரண்டப்படும் மக்களின் ஆதரவு அவருக்கு இருந்தது.

இது அவரது இறப்புக்குப் பின்னும் தொடர்ந்தது.

**அம்பேத்கரின் கையெழுத்துப் படிகள் வெளிச்சம் கண்ட வரலாறு**

அம்பேத்கர் வெளியிட்ட நூல்களும், அவரது அறிக்கைகளும், நாடாளுமன்ற சட்டமன்ற செயல்பாடுகளும் நீண்ட காலம் தொகுத்து வெளியிடப்படாமலே இருந்தன. இன்னும் குறிப்பாக, அண்ணல் அம்பேத்கர் கையெழுத்துப் படிகளாக விட்டுச் சென்ற நூல்கள் அவரது இறப்புக்குப் பின் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு இருட்டறையில் பெட்டிகளில் அடைபட்டிருந்தன.

அம்பேத்கரின் மறைவுக்குப் பின் அவரது கையெழுத்துப் படிகளும் பிற ஆவணங்களும் டெல்லி உயர்நீதிமன்றத்தின் காப்பாளரால் கைவசப்படுத்தப்பட்டன. அது பின்னர், மகாராஷ்டிரா அரசாங்கத்தின் தலைமை நிருவாகியின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டது. அப்போது முதல், டாக்டர் அம்பேத்கரின் வெளியிடப்படாத கையெழுத்துப் படிகள் அடங்கிய பெட்டிகள், தலைமை நிருவாகியின் பாதுகாப்பில் இருந்தன.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு, 1976ஆம் ஆண்டு நாக்பூரைச் சேர்ந்த திரு ஜே.பி பன்சோட் என்ற வழக்கறிஞர் "டாக்டர் அம்பேத்கரின் வெளியிடப்படாத எழுத்துகளை வெளியிட எனக்கு அனுமதி தாருங்கள், அல்லது அவற்றைப் பதிப்பிக்கும்படி அரசாங்கத்துக்கு ஆணையிடுங்கள்" என்று மும்பை உயர்நீதிமன்றத்தின் நாக்பூர் கிளையில் வழக்குத் தொடுத்தார்.

1978 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா அரசாங்கம் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் ஆதார ஆவணங்கள் பதிப்புக் குழுவை (Dr Babasaheb Ambedkar Source

Material Publication Committee) அமைத்தது. அதற்கு சிறப்புப் பணி அலுவலராக திரு வசந்த் மூன் நியமிக்கப்பட்டார். அம்பேத்கரின் கையெழுத்துப் படிகள் 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 18 ஆம் நாள் திரு வசந்த் மூன் வசம் ஒப்படைக்கப்பட்டன.

### அம்பேத்கர் பேச்சும் எழுத்தும் – ஆங்கிலத்தில் 17 தொகுதிகளில், தமிழில் 37 தொகுதிகளில்

Dr. Babasaheb Ambedkar Writings and Speeches என்ற தொகுப்பில் 1979 ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் வெளியான முதல் தொகுதியில் (சாதி பற்றி, மொழிவாரி மாநிலங்கள் பற்றி, வீரரும் வீர வழிபாடும், அரசியல் சட்ட சீர்திருத்தங்கள், பொருளாதார சிக்கல்கள் பற்றி என ஐந்து பகுதிகளில் 12 கட்டுரைகள்) தொடங்கி 2003 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் வெளியான 17வது தொகுதியின் மூன்று நூல்கள் என ஏறத்தாழ 25 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன.

தமிழில் அம்பேத்கரின் நூற்றாண்டை ஒட்டி அம்பேத்கர் பவுண்டேஷன் சார்பாக நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இந்த 17 தொகுதிகளையும் மொழிபெயர்த்து பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு என்ற பெயரில் 37 தொகுதிகளாக ஏப்ரல், 1993 தொடங்கி ஆகஸ்ட், 2005 வரை 12 ஆண்டுகளாக வெளியிட்டது.

மேலே சொன்ன ஆங்கிலத்தில் 17 தொகுதிகளின் அல்லது தமிழில் 37 தொகுதிகளின் பொருளடக்கப் பட்டியலைப் பார்த்தால், அம்பேத்கரின் எழுத்துகளும் பேச்சுகளும் தொகுக்கப்பட்டது அவை உருவாக்கப்பட்ட காலவரிசைப்படியோ அல்லது தலைப்புகளின் அடிப்படையிலோ இல்லை என்பது தெளிவாகிறது.

### இக்கால அரசியலுக்கு அம்பேத்கரின் ஆக்கங்கள்

அம்பேத்கரின் எழுத்துகளும் பேச்சுகளும் என்ற தொகுப்பை ஆங்கிலத்திலோ தமிழிலோ வாசிக்கும் வாசகர்களுக்கு, அம்பேத்கரின் எழுத்துகளில் இருந்தே அவரது அரசியல், கருத்தியல் பற்றிய முழுமையான பார்வை கிடைப்பது அரிது.

1980-களுக்குப் பிறகு அம்பேத்கரின் ஆக்கங்கள் ஆங்கிலத்தில் வெளியான பிறகு அம்பேத்கர் ஆய்வுகள் பெருகத் தொடங்கின. கல்விப் புலத்தில் இருந்த பல ஆய்வாளர்கள் அம்பேத்கரின் அரசியல், வரலாற்றியல், கருத்தியல் பற்றிய பகுப்பாய்வுகளையும் தொகுப்பாய்வுகளையும் மேற்கொள்ளத் தொடங்கினர். அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு குறித்த புதிய நூல்கள் வரத் தொடங்கின. இவற்றைத் தேடிப்படித்து அம்பேத்கர் பற்றி இந்த அறிஞர்களின் கண்ணோட்டத்தை அறிந்து கொள்ளலாம். இவற்றில் பல தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை என்பது தமிழ் வாசகர்களுக்குக் கூடுதல் தடையாக உள்ளது.

பொதுவாக, அம்பேத்கரின் சிலைகளே கம்பிக் கூட்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலை தொடர்கிறது; அம்பேத்கரை சட்ட மாமேதை என்று பகுதியளவு அடையாளத்துக்குள் சுருக்கும் முயற்சிகளும் தொடர்கின்றன. இந்நிலையில், சாதியை அழித்தொழிப்பது தொடங்கி இந்திய அரசியல் சட்டம் வரை, இந்திய ரூபாய் பற்றிய சிக்கல் தொடங்கி புத்தரும் அவரது தம்மமும் வரை அம்பேத்கரின் அரசியலையும் கருத்தியலையும் முழுமையாகப் பயில்வதற்கு ஏதுவான அவரது ஆக்கங்களின் தொகுப்பு ஒன்று தேவைப்படுகிறது. அந்த முயற்சிதான் தமிழ்நாடு அரசின் ஆணையின்படி தமிழ் வளர்ச்சித் துறை வெளியிடும் அம்பேத்கர் ஆக்கங்கள் மக்கள் பதிப்பு 100 தொகுதிகளில்.

### அம்பேத்கர் ஆக்கங்கள் – மக்கள் பதிப்பு

இந்தத் தொகுப்பில், அம்பேத்கரின் ஆக்கங்கள் 13 பெருந்தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை சாதியம், இந்து மதம், பௌத்தம், காந்தியம், பொருளாதாரம், குடிமைச் சமூகம் (மாநிலங்கள், சட்டம், அரசியல் உரையாடல்), காலனிய அரசியல், காலனிய அரசு, இந்திய அரசியல் அமைப்பு அவை, இந்து சட்டத் தொகுப்பு, இந்திய அரசு, வாழ்க்கை வரலாறு. ஒவ்வொரு பெருந்தலைப்பின் கீழும் அம்பேத்கரின் ஆக்கங்கள் காலவரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் படிக்கும் வாசகர், அம்பேத்கர் எதை (படிநிலை ஏற்றத்தாழ்வு, சாதி, தீண்டாமை, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வி மறுப்பு, சொத்துரிமை மறுப்பு) எதிர்த்துப் போராடினாரோ அதன் மீதான விமர்சனங்களை தொடர்ச்சியுடனும் தொகுப்புடனும் அறிந்து கொள்ளலாம். கூடவே, இந்த சமூகக் கட்டமைப்புக்கு மாற்றாக அரசியல் தளத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க நடத்திய போராட்டங்களையும் அவற்றின் கருத்தியல் அடித்தளங்களையும் அதற்காக உருவாக்கப்பட்ட ஜனநாயக நிறுவனங்களையும் பற்றி அறிந்து கொள்ளலாம்.

அண்ணல் அம்பேத்கர் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பற்றி எழுதியவை, அவர் நடத்திய பத்திரிகைகள், நிறுவிய கல்லூரிகள், அறக்கட்டளைகள், அரசியல் கட்சிகள் இவற்றைப் பற்றி அக்கால பத்திரிகைகளிலும் அறிக்கைகளிலும் வெளியான தகவல்கள் ஆங்கிலத் தொகுதிகள் 17-01, 02, 03 ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன (தமிழ் தொகுதிகள் 35, 36, 37). கூடவே, மராத்தியில் தொகுக்கப்பட்டு மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கூடுதல் மூன்று

தொகுதிகளை (38, 39, 40)யும் பொருத்தமான தலைப்புகளின் கீழ் இணைத்துள்ளோம்.

சமூக மாற்றத்துக்காக பாடுபட்ட ஆளுமைகளின் ஆக்கங்களை இந்த வகையில் தொகுக்கும் திட்டத்தை உருவாக்கியவர் நெறியாள்கைக் குழு உறுப்பினராகவும் பதிப்புக் குழுவின் முதன்மைப் பதிப்பாசிரியராகவும் பணியாற்றும் பேராசிரியர் வீ. அரசு அவர்கள். அவர் ஏற்கெனவே பொதுவுடைமை இயக்கத் தலைவர் தோழர் ஜீவாவின் ஆக்கங்களையும் சென்னை லௌகீக சங்கத்தின் ஆவணங்களையும் இவ்வாறு தொகுத்துள்ளார். மேலும், இப்போது கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள், காவியங்கள், சிறுகதைகள், நாடகங்கள், சிறார்பாடல்கள், ஆய்வுகள், கட்டுரைகள், தன்வரலாறு ஆகியவற்றையும் தொகுத்து வழங்கியுள்ளார்.

**இவற்றோடு கூட**

- ஒவ்வொரு பெருந்தலைப்பிலும் இடம் பெறும் ஆக்கங்கள் பற்றி தோழர் எழுதிய அறிமுகக் கட்டுரை ஒன்று அப்பெருந்தலைப்பின் முதல் தொகுதியில் இடம் பெறுகிறது. இவை, குறிப்பிட்ட தலைப்பைப் பற்றிய ஒரு தொகுப்பான பார்வையை வாசகருக்கு வழங்குகின்றன.
- அண்ணல் அம்பேத்கரின் வாழ்க்கையின் முதன்மையான செயல்களை எளிய முறையில் வாசகருக்குக் கடத்தும் வகையில் அவர் எழுதிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இந்தத் தொகுதிகளில் இடம்பெறுகின்றன.

  இந்தப் பணியில் பேராசிரியர் வீ. அரசு உள்ளிட்டு எட்டு பேர் கொண்ட பதிப்புக்குழு ஈடுபட்டது. மேலே சொன்ன பணிகள் அனைத்தையும் கூராய்வு செய்து மேம்படுத்துவது, அம்பேத்கரின் ஆக்கங்களின் தமிழ் மொழிபெயர்ப்பை சரிபார்த்து மேம்படுத்துவது ஆகியவற்றை பதிப்புக் குழு உறுப்பினர்கள் கூட்டாகத் திட்டமிட்டு செய்தனர்.
- ஆக்கங்களின் தமிழ் மொழிநடை இக்காலப் பொருத்தமுடையதாக ஆக்கப்பட்டுள்ளது.
- மணிப்பிரவாளச் சொற்களும் பிற மொழிச் சொற்களும் இன்றைக்குப் புழக்கத்தில் உள்ள சொற்களாக மாற்றப்பட்டுள்ளன.
- சிக்கலான வாக்கியங்களும் பத்திகளும் பிரித்து எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.
- தொகுதிகளில் இடம் பெறும் ஆளுமைகள், இடங்கள், கருத்துகள் பற்றிய குறிப்புகள் கலைச்சொல் அகராதியாக சேர்க்கப்பட்டுள்ளன.
- ஆய்வு மாணவர்களுக்குப் பயன்படும் விதமாக தொகுதியில் இடம் பெறும் சொற்களின் பக்க எண்களைப் பட்டியலிடும் சுட்டி ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுதிகளின் அட்டைப் படமாக ஓவியர் மருது அவர்கள் வரைந்த அண்ணல் அம்பேத்கரின் ஆளுமையைப் பிரதிபலிக்கும் கோட்டோவியம் இடம் பெறுகிறது. தொகுதிகளின் உள்ளடக்கத்துக்கும் அட்டைக்கும் சிறந்ததொரு வடிவமைப்பை தோழர் பா. ஜீவமணி உருவாக்கித் தந்துள்ளார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட அம்பேத்கரின் 100 தொகுதிகளையும் வாசிக்கும் ஒரு தமிழ் இளைஞர், அம்பேத்கரின் அரசியலையும் கருத்தியலையும் எளிதாக உள்வாங்கிக் கொண்டு அதனை விமர்சன அடிப்படையில் வளர்த்தெடுப்பது சாத்தியமாகும்.

**100 தொகுதிகள் 2025 இல்**

முதலில் வெளியாகியுள்ள 10 தொகுதிகளில் சாதியம் பற்றிய 7 தொகுதிகளும் இந்து மதம் பற்றிய 3 தொகுதிகளும் வெளியாகியுள்ளன.

அடுத்து சாதியம் என்ற பெருந்தலைப்பில் எஞ்சிய இரண்டு தொகுதிகளும் இந்து மதம் என்ற தலைப்பில் எஞ்சிய மூன்று தொகுதிகளும் பௌத்தம், காந்தியம், பொருளாதாரம், குடிமைச் சமூகம், காலனிய அரசியல் என்ற தலைப்புகளிலான தொகுதிகளும் வெளியாகின்றன. இறுதியாக, காலனிய அரசு, அரசியல் அமைப்பு அவை, இந்துச் சட்டத் தொகுப்பு, இந்திய அரசு, வாழ்க்கை வரலாறு ஆகிய 5 பெருந்தலைப்புகளில் தொகுதிகள் வெளிவரவுள்ளன.

இந்தியாவில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை மறுக்கும் இந்து மதத் தத்துவத்தின் அடிப்படையிலான சமூகக் கட்டமைப்பைத் தகர்க்க வேண்டும் என்பது அண்ணல் அம்பேத்கரின் முதல் செய்தி. அவரது இரண்டாவது செய்தி அவ்வாறு தகர்க்கப்படும் சமூகக் கட்டமைப்புக்கு இணையாக ஜனநாயக சமூகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது.

இந்த நோக்கத்துக்கான கருத்தியல் ஆயுதங்களை அம்பேத்கரின் ஆக்கங்கள் நமக்குத் தருகின்றன. இந்த மக்கள் தொகுப்பை வாங்கிப் படித்து சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதற்கான கருத்தியல் வல்லமையை தமிழ்நாட்டு இளைஞர்கள் கைவரப் பெறுவார்கள்; அம்பேத்கரின் கருத்தியலை இன்றைய அரசியல் சமூகச் சிக்கல்களுடன் இணைக்கும் புதிய ஆய்வுகளை முன்னெடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

●

**கட்டுரையாளர்: அம்பேத்கர் மக்கள் பதிப்புக் குழுவின் இணைப் பதிப்பாசிரியர்**

அஞ்சலி

# நந்தலாலா எனும் தனிப்பேராளுமை



ஒருவரை அவர் வகித்த பொறுப்புகளின் வழியே அல்லாமல் ஆற்றிய பணிகளைக் கொண்டு மதிப்பிடுவதே சரியாக இருக்கும். அவ்வகையில் தோழர் நந்தலாலா அவர்களை ஒரு தனிப்பேராளுமை என்றே சொல்லத் தோன்றுகிறது. குன்றாண்டார் கோவில் என்கிற சிற்றூரில் பிறந்து தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் அறியப்பட்ட ஒருவராக அவர் வளர்ந்தெழுந்ததன் பின்னே அவரது அளப்பரிய உழைப்பு உள்ளது.

வங்கி ஊழியராக தொழிற்சங்கத்திலும், கலை இலக்கிய ஈடுபாட்டினால் தமுஎகசவிலும் நந்தலாலா ஆற்றிய பணிகள் முன்னுதாரணமானவை. நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி என பல்வேறு மாவட்டங்களிலும் தமுஎகசவை ஒரு வெகுமக்கள் அமைப்பாக உருவாக்கி வளர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

பண்பாட்டுக்கூறுகளை உள்ளடக்கி அரசியல்செறிவுடன் உரையாற்றும் ஒரு பேச்சாளர் என்கிற சித்திரம் தான் அவரைப்பற்றி முதலில் எனக்கிருந்தது. அந்த சித்திரத்தை மேலும் வண்ணமயமாக்கும் விதமாக தமுஎகச கலை இரவுகளிலும் கருத்தரங்குகளிலும் புத்தக விழாக்களிலும் தொலைக்காட்சி விவாதங்களிலும் அவரது உரைகள் அமைந்தன. வெகுமக்களை ஈர்த்திழுத்து அருகில் வைத்துக்கொண்டு அவர்களிடம் அரசியல் பேசவேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. அடுத்தொரு சமயம், இசையில் அவருக்கிருந்த ஆழ்ந்தகன்ற அறிவையும் ஈடுபாட்டையும் உணரமுடிந்தது. கிராமியப் பாடகர்களுக்கான இசைப் பயிற்சி முகாம் ஒன்றை ஒசூரில் நடத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டபோது



ஆதவன் தீட்சண்யா

அந்த முகாமுக்கான பாடத்திட்டத்தை வகுப்பதிலும் அந்தப் பாடங்களுக்கான ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதிலும் நந்தலாலா பெரும் பங்காற்றினார். கொரானா பொதுமுடக்கக் காலத்தில் கலை இலக்கியம் பண்பாடு சார்ந்து இணையவழியில் நாங்கள் நடத்திய தொடர் வகுப்புகளின் ஒருபகுதியாக இசைத்தமிழ், தமிழிசை பற்றிய நிகழ்வொன்றில் அவர் ஆற்றிய உரை அவரது இசையறிவுக்குச் சான்றாகும்.

நந்தலாலா தமுஎகசவின் தலைவர்களில் ஒருவர். ஆனால், அவரிடம் ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டால் அதை நிறைவேற்றுவதற்கான முதல் ஊழியராக மாறிச் செயல்படக்கூடியவர். தமிழ்ச்சிறுகதை நூற்றாண்டு விழா, தேசிய கல்விக்கொள்கைக்கு எதிராக மூவாயிரவரைத் திரட்டி நடந்த கல்வி உரிமை மாநாடு, இந்தி ஆதிக்கத்திற்கு எதிரான மொழியுரிமை மாநாடு என மாநில நிகழ்வுகள் பலவும் எழுச்சியுடன் நடைபெற்றதில் அவரது பங்களிப்பு அளப்பரியது.

அமைப்பு பன்முகத்தன்மையுடையதாய் இருக்கவேண்டும், மாணவர்கள், இளைஞர்கள், பெண்களிடையே கலை இலக்கிய ஆர்வம் கொண்டுள்ளவர்களைக் கண்டறிந்து வளர்த்தெடுக்கவேண்டும் என்பதில் அவர் கவனம் கொண்டிருந்தார். தமுஎகச, வானம், களம், புத்தக விழாக்கள் போன்றவற்றின் வழியே இந்த இலக்குகளை அடையும் முயற்சியையும் மேற்கொண்டிருந்தார்.

வேறுபடும் புள்ளிகளை விவாதத்திற்குரியதாய் வைத்துக்கொண்டு இணைந்து பணியாற்றும் புள்ளிகளைக் கண்டறிந்து வலுப்படுத்துவதும் விரிவுபடுத்துவதும் அவசியம் என்கிற புரிதல் அவருக்கிருந்ததாலேயே அவரால் பெரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம் சார்ந்த பல்வேறு அமைப்புகளுடனும் உரையாட முடிந்திருக்கிறது. கர்நாடக இசைக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணா, மகஇக பாடகர் கோவன் போன்றோரை தமுஎகச மேடைக்கு முதன்முதலில் அவர் அழைத்து வந்ததற்கும், வள்ளலார் 200, வைக்கம் 100 போன்ற நிகழ்வை நடத்தியதற்கும் இதுவே காரணம்.

உள்ளூர் சமூகத்தில் பணியாற்றுவது, மக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெறுவது, ஜாதி, மதம் சார்ந்த வேலைகளுக்கு அவர்கள் ஒதுக்கும் நேரங்களை பகுத்தறிவு, அறிவியல் மனப்பாங்கு, சமூகநீதி, சமத்துவம் சார்ந்த பொதுவேலைகளுக்காக திருப்புவது என்பது ஒரு பண்பாட்டு ஊழியரின் வேலையாக இருக்கவேண்டும் என்பதில் நந்தலாலா உறுதியாக இருந்தார். அதன்பொருட்டு அவர் அடித்தள மக்கள் தொடங்கி அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் வரை தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அவர்களை தனது நிகழ்ச்சிநிரலுக்காக பணியாற்ற வைத்தார். அவர் திருச்சியின் பல்வேறு இலக்கிய அமைப்புகளுடனும் ஆளுமைகளுடனும் கொண்டிருந்த தொடர்பும்கூட கருத்தியல்ரீதியிலானது தான்.

தனது அத்தனைத் தொடர்புகளையும் செல்வாக்கையும் தமிழ், தமிழர், சமூகநீதி, சமத்துவம் சார்ந்த பணிகளுக்கும், தோழர்களுக்கு உதவுவதற்கும் பயன்படுத்தினார் என்பதனால் தான் அவரது மறைவை, ஒரு நல்லத்தண்ணி கிணறு தூர்ந்துவிட்டதற்கு ஒப்பாகக் கருதி தோழர்கள் துயரத்தில் ஆழ்ந்தனர். ஆனால், அவரைப் பற்றி அடுக்கடுக்காய் கிளம்பும் நினைவுகள் அவர் ஒரு நல்லத்தண்ணி ஊற்றாக நமக்குள் ஓடிக்கொண்டிருக்கிறார் என்றே தோன்றுகிறது.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**


**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

# தூங்கஞ் செட்டியூருக்கு ‘புலியூரால்’ சூட்டப்பட்டிருக்கும் மகுடம்




**வட்டாரத்துக் கோடி | புலியூர் முருகேசன் |**
**வெளியீடு: குறி பதிப்பகம், வேடசந்தூர் | விலை: ரூ. 275/-**

> “அமளி நிறைந்த உலகத்தில் இரு ஜாதி மக்கள் இவ்வளவு இணக்கத்தோடும் உறுதியோடும் வாழ முடியுமா? என்ற கேள்வி எழும். அதற்கு படைப்பாளனின் ஒரே பதில் ‘வாழ முடியும். வாழ வேண்டும்’ என்பதுதான்.”



**சி.எம்.முத்து**

என் மனைவி பானுமதி அவர்கள் இறந்த (03.01.2025) மறுவாரம் துக்கம் விசாரிக்க வந்த என் ப்ரிய ஸஹிருதயர் புலியூர் முருகேசன் அவர்கள் விசாரித்துவிட்டுச் செல்லும் முன் ‘வட்டாரத்துக் கோடி’ என அவர்கள் எழுதிய புதிய நாவலை என் கையில் கொடுத்துவிட்டு, வாசிக்கும்படி சொல்லிப் போனார். அட்டையைத் திருப்பக் கூட மனமில்லை. என் மனைவி இறந்த துக்கம் அப்படி என்னை எதிலும் இயங்க விடாதபடி கட்டிப் போட்டிருந்தது. நாவலைக் கையில் வைத்துக்கொண்டு பரிதாபமாகப் பார்த்தேன். அப்படிப் பார்க்கவும் ஒரு காரணமிருந்தது. ஏற்கெனவே அவருடைய ‘பாக்களத்தம்மா’வைப் படித்துவிட்டுக் கிறங்கிப் போயிருந்தது நினைவுக்கு வந்தது. நான் படித்த அநேக நாவல்களில் என்னை வசீகரித்த நாவல் ‘பாக்களத்தம்மா. சு. சண்முகசுந்தரத்தின் ‘நாகம்மா’வைப் படித்துவிட்டு எப்படிக் கிறங்கினேனோ, அப்படியொரு கிறக்கம் ‘பாக்களத்தம்மா’விலும். ‘பாக்களத்தமா’வை அப்படி எழுதியவர் ‘வட்டாரத்துக் கோடி’யை எப்படியெல்லாம் எழுதியிருப்பார் என்பதை என்னால் படிக்காமலேயே அனுமானித்துக் கொள்ள முடிந்தது. என்ன செய்வது, எனக்கு நேர்ந்துவிட்ட துக்கம் கண்களை நாவலில் பதிய விடாமல் பண்ணுகிறதே!

‘ஸரஸ்வதி பூஜையும் அதுவுமாய்க் கையில் கிடைத்தால் அது சாமான் மடித்த பேப்பராயிருந்தாலும் படித்துத் தீர்த்துவிட வேண்டுமென்று மனசு பரபரக்கிறது. இன்றைக்கென்று எதுவும்

அகப்பட மாட்டேன்கிறதே! இருந்த அவ்வளவு புஸ்தகங்களையும் பூஜையில் வைத்தாயிற்று. படித்த மனம் படிப்பதற்குப் பரபரக்கிறது'. தி. ஜானகிராமன் தன்னுடைய 'அம்மா வந்தாள்' நாவலின் முதல் அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே இப்படி, படிப்பதற்கு ஆதங்கப்படும் பாத்திரம் ஒன்றைச் சிருஷ்டித்திருப்பார். அந்தப் பாத்திரம் மாதிரிதான் என் சுபாவமும். படிப்பதில் வெறிகொண்டவன் நான். அது சாமான்கள் எழுதின ரோக்காவாக இருந்தாலும் படித்தால்தான் ஆயாசம் தீரும்.

துக்கம் என்பதும் ஆற்றாமையென்பதும் நமக்கு மட்டும்தானா? உலகத்திலுள்ள அத்தனை பேருக்குமிருக்கிறதே; என்று என்னையே நான் தேற்றிக்கொண்டு 'வட்டாரத்துக் கோடி' நாவலுக்கு உதயசங்கர் எழுதியிருக்கும் முன்னுரையை வாசித்ததுமே அளவற்ற மகிழ்ச்சியாயிருந்தது. தேவலாமே! நம் புலியூரார் தமிழுக்கு இந்நாவலின் வழியாக முக்கியப் பங்களிப்பைச் செய்திருக்கின்றாரே என மனதிலிருந்த துக்க ஸாகரங்களையெல்லாம் தூர அகற்றிவிட்டு நாவலை வாசிக்கத் தொடங்கினேன்.

நாவலின் பக்கங்களில் என் மனம் பாயப்பாய அந்தப் பாய்ச்சல் அதிவேகமெடுத்து விட்டது. சும்மா சொல்லக் கூடாது உதயசங்கரை! நாவலுக்குள் தன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்தித்தான் அப்படியொரு அற்புதமான முன்னுரையைக் கொடுத்திருக்கிறார் என்று தோன்றியது. இன்னும் கொஞ்சம் கூடுதலாகச் சொல்லப் போனால் முற்றிலுமாக நாவலில் இயைந்து போய்த்தான் அப்படியொரு முன்னுரையை அவரால் தர முடிந்திருக்கிறது என்று கூடச் சொல்வேன். உதயசங்கர் சொல்வதுபோல் இது சாதனையான நாவல் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. என் பாய்ச்சலைச் சொன்னேனல்லவா! அந்தப் பாய்ச்சலில் நான் கண்ட ஆனந்தங்களும், ஆச்சரியங்களும் இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. என் துக்க ஸாகரங்களெல்லாம் எந்தப் பக்கம் ஓட்டமெடுத்து ஓடிப்போயிற்றென்றே தெரியவில்லை. அவ்வளவுக்குக் கொள்ளை மகிழ்ச்சியாயிருந்தது. முற்றிலுமொரு, நான் காணாத அனுபவித்தறியாத சூழலையும் காட்சிகளையும் தரிசிக்கத் தரிசிக்க ஏற்பட்ட பரமானந்தம் என்று கூடச் சொல்லலாம்.

'வட்டாரத்துக் கோடி' என்பது நாவலின் தலைப்பு. இதில் நாம் 'கோடி' என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தோமானால் அது அநேகம் பொருள் தரக் காணலாம். 'நுனி, புத்தாடை, வளைவு, நூறு நூறாயிரம் அல்லது நூறு லட்சம், கடலுள் செல்லும் தரை முனை, எல்லை, சேனையின் பிற்பகுதி, மூலை எனப் பல அர்த்தங்களாகின்றன. உதாரணமாக, தெருவின் கடைசி எல்லையை 'தெருக்கோடி' என்போம். இச்சொல் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சொல். பொதுவாக நாம் புத்தாடைகளைக் 'கோடி' எனச் சொல்வது கிடையாது. அது வழக்கத்திலுமில்லை. அது எப்பொழுது கோடியாகிறதென்றால் இறந்தோர்க்கு அணிவிக்கும்போது மட்டுமே. அது இறந்தவர்க்குக் கடைசியாய்க் கிடைக்கப் பெறுகிற மிகப்பெரிய கௌரவமாகக் கொள்ளப்படுகிறது. இந்தப் புள்ளியைச் சாரமாக வைத்துக்கொண்டு மட்டுமே ஐநூறு ஆண்டுகள் வரலாற்றை ஆவணங்கள் அடிப்படையிலும், கருத்தாக்க ரீதியிலும் எவ்வித பகடிகளுமற்றுப் பிணைத்து 'வட்டாரத்துக் கோடி'யை உருவாக்கித் தந்திருக்கின்றார் புலியூர் முருகேசன்.

தமிழ்நாடெங்கும் வாழ்கின்ற பெரும்பகுதியான மக்களிடையே இதை ஒரு பண்பாட்டு விழுமியங்களை வைத்துக்கொண்டு அந்த மரபைக் காப்பாற்றுகின்ற விதத்திலும், இன்றளவுக்கு மட்டுமல்ல, என்றென்றும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற ஆவேச உணர்ச்சி மிகக்கொண்டு தாக்கங்களிலுண்டான பிரதியாகக் கருத அனேக இடங்களுண்டு. இறந்தோர்க்கு நடக்கும் சடங்குகளில் சாதிகளுக்கும் அப்பாற்பட்டு அதிமுக்கியத்துவம் வாய்ந்த சடங்காக இது நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கிறதென்பது மெய்மையல்லாது வேறில்லை. அதனாலேயே நாவல் நெடுகிலும் இவ்வைபவம் ஆசிரியரால் நிகழ்த்திக் காட்டப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இவ்விடத்தில் இரு ஜாதிகளின் உறவை இதன் வழியாய் வலுப்படுத்துகின்ற விதத்திலும், மேம்படுத்துகின்ற விதத்திலும் மனிதம் சமன் பெற வேண்டுமென்ற தவிப்போடும் உயரிய நோக்கத்தோடும் இதைக் கட்டமைத்திருக்கிற இடத்தில்தான் புலியூரார் நம்மை நெகிழ வைத்து விடுகின்றார். அப்பப்பா! இரு ஜாதி மக்களிடையே ஏற்பட்டிருக்கும் இணக்கமான இப்படியொரு ஒரு உறவு எங்கெங்கும் நிகழுமானால் வன்மங்கள் தொடரவும் பெருகவும் வாய்ப்பில்லாமல் போய்விடுமென்பதில் ஐயமேயில்லை.

மதுரை மாநகரில் அதி படாடோபமாக வாழ்ந்த திருவனம் செட்டி, நாயக்கர் ஆட்சியின் கொடுமைகளைச் சகித்துக்கொள்ள முடியாமல், மதுரை மாநகரைவிட்டுத் தன் குடும்பத்தார்களை அழைத்துக்கொண்டு விட்டேற்றியாய்ப் புறப்படுவதும், சாலிக்கரையில் அவருக்குப் பெரிய மல்லரின் உறவு கிட்டுவதும்தான் இந்த ஒப்பற்ற நாவலின் அஸ்திவாரமே. பெரிய மல்லர் சாதாரணப்பட்டவரா! திருவனம் செட்டி

படாடோபமாய் வாழ்ந்த மதுரை வாழ்வைப் போல் பதின்மடங்கு வாழ வகை செய்த மூலாதாரராயிற்றே! அவர்களுக்குள் உள்ள உறவை மட்டுமே இங்க வண்டி வண்டியாக எழுதலாம். அப்பேர்க்கொத்த ஆழமான நட்பு அது. அவர்களுக்குப் பின் அவர்கள் மகன்கள் பேரன்களென்று வழிவழியாய் அதே இணக்கத்தோடே வாழ்கின்றார்கள். திருவனம் செட்டியின் வகையறாவும், பெரிய மல்லரின் வகையறாவும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் பாசத்திற்கும் பிரியத்திற்கும் மதிப்புக்கும் ஈடேது இணையேது? 'நான் இந்த ஊரில் காலூன்றிக் கொள்ள கொஞ்சம் நிலபுலம் வாங்கிக் கொடுங்கள்' என்று திருவனம் செட்டி பெரியமல்லரிடம் சொல்லிவிட்டு, 'என்னிடம் கடைசியாக உள்ளது இந்த நகைகள் மட்டும்தான்' என்று நகைகளைப் பொதித்து வைத்துள்ள மூட்டையைக் கொடுப்பதும், பெரிய மல்லர் அதை வாங்கிக் கொள்ள மறுப்பதும் மனிதத்தின் உச்சமென்றால் அது மிகையாகாது.

'மனிதம்' இந்தக் காலங்கள் உள்ளவரை உயிர்ப்புடன்தானிருக்கும் என்பதற்குச் சான்றாக புலியூராரின் 'வட்டாரத்துக் கோடி'யைத்தான் நான் வலிந்து சொல்வேன். திருவனம் செட்டி சீர் செய்யும் அமர்க்களத்தை பெரிய மல்லரின் மகள் பெரியக்காவை, சின்னாண்டிபட்டி பட்டனுக்குத் திருமணம் செய்து வைக்கும் வைபவத்தை வாசித்தபோது, உடம்பிலுள்ள அத்தனை மயிர்க்கால்களும் சிலிர்த்து விட்டன. அப்பப்பா! எத்தனை நெகிழ்வு அந்நிகழ்வு! சிலிர்த்த மயிர்க்கால்கள் அடங்க வெகுநேரமாயிற்று. பயிர்கள் மரம் செடிகொடிகள் அவ்வளவும் விதைக்கப்பட்டு வளர்கின்றன. ஜீவாத்மாக்கள் அவ்வளவும் விந்துவால் உயிராகி வெளிவருகின்றன. 'மனிதம்' விதைக்கப்படுமா? அன்பு விதைக்கப்படுவதால் உண்டாவதா? இப்படியெல்லாம் நம்மிடையே கேள்வி எழுமானால் அவைகளும் விதைக்கப்படுவதுதான் என்று துணிந்து சொல்லலாம். புலியூராரால் நாவலின் ஒவ்வொரு பக்கத்திலும் பகுதியிலும் விதைக்கப்பட்டு விதைக்கப்பட்டுத்தான் பல நெகிழ்வான உணர்ச்சிகளை நமக்குத் தருகின்றன. அந்த அற்புதத்தை வாசிப்பவர் எவரும் உணர்வர்.

மஞ்சுவெளி தங்கசாமி நாடாரின் மகனுக்குத் திருவனம் செட்டியின் மகள் காத்தம்மா நிச்சயிக்கப்படுகிறாள். திருமணத்தை தன்னுடைய தோட்டத்தில் நடத்தி விடலாமென்று தங்கசாமி நாடார் கூறவும், திருவனம் செட்டி ஆமோதிக்கின்றார். திருப்பூட்டுக்கும் முதல்நாளே காத்தம்மாளுக்கு மாலையணிவித்து பெரிய மல்லர் சகிதமாக வண்டி கட்டிக்கொண்டு மஞ்சுவெளிக்கு புறப்படுகின்றனர். பேய் மழை கொட்டுகிறது. காட்டாற்று வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. மழை நிற்கும், காட்டாற்று வெள்ளம் வடியுமென்று இரவு முழுவதும் மழைக்கொடுமையை சகித்துக்கொண்டும், சொல்லொணா துன்பத்தை அனுபவித்துக்கொண்டும் காத்திருக்கின்றார்கள். மழைச்சனியனும் விடவில்லை; காட்டாற்று வெள்ளமும் வடியவில்லை. மாலையும் கழுத்துமாய் அழுத கண்ணீர் ஆறாய்ப் பெருக, காத்தம்மாளைத் தேற்ற வழியின்றிப் புலம்புகின்றனர். மஞ்சுவெளிக்குச் செல்ல சூழல் தடுக்கின்றது. திரும்பவும் சாலிக்கரைக்கே வண்டியைத் திருப்புகிறார்கள். திருவனம் செட்டிக்கோ, பெரிய மல்லருக்கோ காத்தம்மாளுக்கு அணிவித்த கழுத்து மாலையைக் கழற்ற கிஞ்சித்தும் மனம் இடம் தரவில்லை. அவளுக்கு மாலை அணிவித்தது அணிவித்ததுதான். வேறு ஒருவனைக் கொண்டுவந்து திருப்பூட்டு வைபவத்தை நிகழ்த்தி விட வேண்டியதுதான் என முடிவுக்கு வருகின்றனர்.

மழை ஓய்கிறது. வழியிலிருந்த முனியாண்டவர் கோயில் ஒத்தகமான சூழலைத் தருகிறது. திருவனம் செட்டி தன்னிடம் பண்ணையம் பார்த்துக்கொண்டிருந்த தூங்காச் செட்டியை மருமகனாக்கிக் கொள்ள முடிவெடுக்கின்றார். அவன் சம்மதத்தை அறியக்கூட நேரமில்லாமல் திருப்பூட்டை நிகழ்த்தி விடுகின்றனர். பெண்களின் குலவைச் சத்தம் வானைப் பிளக்கிறது. இந்தச் செய்தி தங்கசாமி நாடாருக்குத் தெரிய வரவும், அவர் சும்மாயிருப்பாரா? ஆளோ பெரிய சண்டியரெனப் பேர் பெற்றவர். திருவனம் செட்டியைத் தாக்க அடியாட்கள் படையோடு சாலிக்கரைக்கு வருகின்றார். இச்செய்தி பெரிய மல்லருக்குத் தெரிய வரவும், வெட்டரிவாளையும் வேல்கம்பையும் எடுத்துக் கொள்கின்றார். வெட்டரிவாள் பெரிய மல்லரிடத்தும் வேல்கம்பு அவர் மகன் சங்கரிடத்திலும் இருக்கிறது. தங்கசாமி நாடார் வண்டியிலிருந்து இறங்கி வந்தவர், திருவனம் செட்டியைக் கூப்பிட்டு "யோவ் திருவனம்! வாய்யா வெளிய. ஓம் மவளுக்குப் பரிசம் போட்டது நாங்க. புள்ளைய இப்ப வேற ஆளுக்குக் கலியாணம் பண்ணி வச்சிருக்கியே! வெக்கமாயில்லியா? ஓம் புள்ளயத் தூக்கிட்டுப் போயி எம் மவனுக்குக் கட்டி வைக்கப் போறேன் பாக்கறியா?" என்ற அந்தக் கணத்தில், சங்கர் வீசிய வேல்க்கம்பு தங்கசாமி நாடாரின் வலது தொடையில் பாய்கிறது. ரத்தம் குபுகுபுவென வருகிறது. திருவனம் செட்டி பதறுகின்றார். வேட்டியை எடுத்துக்கொண்டு போய் ரத்தம் வழியாமல் இறுக்கிக் கட்டுகிறார்.

தோட்டத்து வீட்டுக்குக் கொண்டு வந்து கட்டிலைப் போட்டுப் படுக்க வைக்கிறார். வைத்தியர் வரவழைக்கப்படுகிறார். அவர் வந்து பச்சிலை வைத்தியம் பார்த்துத் தங்கசாமி நாடாரை நடக்க வைக்கிறார். "எல்லா சேதியும் தெரிஞ்ச நீங்களே இப்பிடி அடிபிடிக்கு வரலாங்களா? காட்டாத்தத் தாண்ட முடியாம பொண்டு புள்ளைகளோட விடிய விடிய ஒக்காந்திருந்தோம். ம்... என்னன்னமோ நடந்து போச்சு. எல்லாத்துக்கும் சேத்து நா ஒங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன்". இங்கேதான் புலியூரார் மனிதத்தை விதைக்கின்றவர் என நான் சொல்கின்றேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இப்படிப்பட்ட நெகிழ்ச்சியான சம்பவங்கள் நாவல் நெடுகிலும் காணக் காண இப்படியொரு முடிவுக்கு நான் வரவேண்டியதாயிற்று.

ஆனைப்பட்டிக்கு கருங்கல் கவுண்டரைப் பார்க்க, சங்கப் பள்ளரின் வற்புறுத்தலின் பேரில் தூங்காச் செட்டி தயங்கித் தயங்கிக் கிளம்ப முற்படுகிறார். எதற்கு? அசலூரில் இப்படியொரு பெரிய காரியம் நடந்து விடுமாவென்று அச்சம் தொக்கி நிற்கிறதே! என் செய்வார்? அதனாலேயே இந்தத் தயக்கம். அசலூரில் இடம் பார்த்து நிலைகொள்வதற்கு சங்கப்பள்ளர் தீர்மானமாய் முடிவெடுத்து வண்டியைத் தயார்படுத்திவிட்டார். அவர் வண்டியை மட்டும்தானா தயார்படுத்தினார்? காடு திருத்தி நிலமாக்குவதற்கான ஆயுதங்களையும் தயார்படுத்தி முன்னேற்பாடாகவே வண்டிக்குள்ளும் வைத்துவிட்டார். நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. கருங்கல் கவுண்டரை பார்க்கவில்லை. அவரிடம் முன்னேற்பாடாக நிலம் பேசி எதுவும் திகைந்தபாடில்லை. இதற்குள்ளாகவே ஆயுதங்கள் எதற்கு? திகையாத இடத்தைச் செப்பனிட்டு விட முடியுமா? சங்கப்பள்ளர் தன் வாழ்வின் மீது வைத்திருக்கின்ற அசைக்க முடியாத உறுதியே இச்செயல் என்று நாம் புரிந்து கொள்கிறோம். வாழ்வோடு கலையின் ஓட்டமும் கைகோர்த்துக்கொண்டு நாமறியா உலகத்திற்குக் கூட்டி செல்கின்ற வினோதம் 'வட்டாரத்துக் கோடி' யில் பார்க்க முடிகிறது. அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட நடை ஒரு சித்திரம் போல் ஒளிர்ந்து இடர்ப்பட வழியேதும் வைக்காமல் கடைமடைவரை பாயும் விந்தையையும் அழகையும் என்னவென்று கூற?

இந்நாவலில் வருகின்ற ஒவ்வொரு பாத்திரங்களும் உயிருள்ளதாய் இன்றைக்கும் நம் நெஞ்சுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற வர்களாகவே நான் கருதுகிறேன். அவர்களின் இறப்பெல்லாமே ஓர் மாயை போல்தான் எனக்குத் தோன்றுகிறது. திருவனம் செட்டி, பெரிய மல்லர், தூங்காச்செட்டி, சங்கர்ப் பள்ளர், ஐயாவு, முத்துச்சாமி நாடார், மாரிமுத்து, ஆண்டிப் பள்ளர் இவர்களோடு பெண்பாத்திரங்களும் யாவரையும் மறந்து விடாதபடிக்கு மறக்கவே முடியாதபடிக்கு, அவ்வளவு ஆழமாகவும் அதிநுட்பமாகவும் செதுக்கியெடுத்துச் சிற்பமாக்கியிருக்கின்றார் நம் புலியூரார்.

பாத்திரங்கள் பேசும் உரையாடல்கள் ஒவ்வொன்றும் எங்கும் காணாதபடி காணமுடியாதபடி அவ்வளவு சொற்சிக்கனங்களோடும், கட்டுக்குலைந்து விடாமலும் யதார்த்தத்தில் எப்படி நிகழுமோ அப்படி எவ்விதத்திலும் ஒழுங்கமைதி சிதைந்து போய்விடாதபடிக்கு, தன்னையொரு பூதாகரமான பிம்பமாய், உணர்ச்சி மிகுதி கொண்டவராகக் காட்டிக் கொள்ளாமல் வெகு அடக்கத்துடனும், நிதானத்துடனும் உரையாடல்களை உருவாக்கியதற்காகவே புலியூராரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இலக்கிய விமர்சகர் மாண்பமை வெங்கட் சாமிநாதன் சொல்வார். நாவல்களிலோ சிறுகதைகளிலோ அமைக்கப்படுகின்ற பாத்திரங்கள் தன்னுடைய உரையாடல்களை பிரதானமாகக் கொண்டு, அதன் மூலமாக பிரசங்கம் பண்ணிவிடக் கூடாது. யதார்த்த வாழ்வில் ஒருவர் பேச மற்றவர் பேசவென்று எப்படி விட்டுவிட்டு அதன் தொடர்ச்சி அறுபடாமல் நிகழ்கின்றதோ, அப்படி நாம் படைக்கின்ற படைப்பிலும் நிகழ வேண்டும். ஏனெனில் நாம் படைக்கிறதென்பது படைப்பென்பதை எழுத்துக் கலைஞன் புரிந்துகொண்டு எழுத வேண்டும். நீண்ட வசனங்களெல்லாம் நிகழுமிடம் உபன்யாசக் கூடங்களோ சினிமாவிலோ நடக்கட்டும். படைப்பில் வேண்டாமென அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டுப் போயிருக்கிறார். புலியூரார் இவ்விஷயத்தை அறிந்தோ அறியாமலோ, அவருடைய கூற்றை மெய்ப்பிக்கின்ற விதத்தில் அவ்வளவு நேர்த்தியாக இந்நாவலுள் உரையாடல்களை அமைத்துத் தந்திருப்பது மனதுக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது.

இறுதியாக ஒன்றைச் சொல்லி விட்டு ஒய்கிறேன். அமளி நிறைந்த உலகத்தில் இரு ஜாதி மக்கள் இவ்வளவு இணக்கத்தோடும் உறுதியோடும் வாழ முடியுமா? என்ற கேள்வி எழும். அதற்கு படைப்பாளனின் ஒரே பதில் 'வாழ முடியும். வாழ வேண்டும்' என்பதுதான். அதனால்தானே அவன் படைப்புக் கலைஞனாக இச்சமூகத்தில் பரிணமிக்க முடிகின்றது! இந்த ஒப்பற்ற நாவலின் மூலம் புலியூர் முருகேசன் தமிழுக்கு புதியதொரு வரவையும் ஆவணத்தையும் கொடுத்திருப்பதோடு தான் பிறந்த மண்ணான தூங்கஞ் செட்டியூருக்கு மிகப்பெரிய பெருமையை மட்டுமல்ல, மகுடத்தையே பதித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார் எனத் துணிந்து சொல்வேன்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**




முனைவர் நா.சுலோசனா

# இயக்கமும் இயங்கியலும்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

நிலையாமைதான் இவ்வுலகம். இருந்தும் ஏனோ மனம் ஏற்க மறுக்கும் இழப்புகள் நிலையாமைக்கு அப்பாற்பட்டது. இயக்கமும் இயங்குதலுமாக இருந்தவர் படைப்பாளர் நாறும்பூநாதன். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் (இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில்) உள்ள கழுகுமலையில், ஆகஸ்ட் 27, 1960இல், இராமகிருஷ்ணன் - சண்முகத்தம்மாள் இணையருக்குப் பிறந்தவர். கோவில்பட்டி ஆரிய வைஸ்ய உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியையும் சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி மற்றும் கோவில்பட்டி ஜி.வெங்கடசாமி நாயுடு கல்லூரியில் கல்லூரிக் கல்வியையும் பெற்றவர்.



"வாசிப்பு ஒரு நீண்ட பயணம். ஒரு பரந்த வாசிப்பு மூலமாக மட்டுமே சமூகத்தைப் புரிந்து கொள்ள முடியும். இதுதான் நிறைய ஞானத்தைக் கொடுக்கும். வாசிப்பின் மூலமாக மட்டும்தான் ஒரு சமூகம் பண்பட்ட சமூகமாக மாறும்" என்பதை உணர்ந்தவர் தனது நான்காவது வகுப்பின்போதே வாசிப்புப் பழக்கத்தைத் தொடங்கியிருக்கிறார். அதன் விளைவாக இவர் மொட்டுக்கள் என்னும் கையெழுத்து பத்திரிகையையும் நண்பர்களுடன் இணைந்து தர்சனா என்ற நாடகக் குழுவையும் உருவாக்கியவர். எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுடன் சேர்ந்து ஸ்ருஷ்டி என்னும் நாடகக் குழுவில் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களைத் தமிழகம் முழுவதும் நடத்தி நாடக உலகுக்கும் தமது பங்கைச் செலுத்தியுள்ளார். பரணிவாசம் என்ற பெயரில் சமூக ஊடகங்களில் வலம் வந்தவர்.

"ஒரு குழந்தைக்கு டெல்லி செங்கோட்டை பற்றி தெரிகிறது, தாஜ்மஹால் தெரிகிறது, பாபிலோனில் தொங்கும் தோட்டம் தெரிகிறது, ஏன் சீனப் பெருஞ்சுவர்கூட தெரிகிறது ஆனால் உள்ளூரில் ஒரு கோட்டை இருப்பது தெரியவில்லை. அதன் வரலாறு தெரியவில்லை. நம் ஊர்

வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு நாம் சொல்லிக் கொடுக்கவில்லை என்ற உணர்வே அவற்றைப் பற்றி எழுதத் தூண்டியது'' என்பதன் வெளிப்பாடுதான் 'திருநெல்வேலி: நீர்-நிலம்-மனிதர்கள்' எனும் நூல். திருநெல்வேலியைச் சுற்றியுள்ள பல வரலாற்றுத் தகவல்களைத் தேடித்தேடி தமிழ்ச் சமூகத்திற்குக் கொடுத்திருக்கிறார். திருநெல்வேலி வரலாற்றை ஆவணப்படுத்தியதால் இந்நூலை முன்வைத்து இவருக்குத் தமிழ்நாடு அரசு 2022க்கான உ.வே.சா., விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

சாகித்ய அகாடமி விருதுபெற்ற மேலாண்மை பொன்னுச்சாமி, கந்தர்வன் ஆகியோரைத் தனது இலக்கிய முன்னோடிகளாக ஏற்றுக்கொள்ளும் நாறும்பூநாதன், கரிசல் இலக்கியத்தின் தந்தை கி.ராஜநாராயணன் தொடங்கி, ச.தமிழ்ச்செல்வன், வண்ணதாசன், கலாப்ரியா, கழனியூரன், நாஞ்சில் நாடன், சோ.தர்மன் உள்ளிட்ட புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நெருங்கிய நட்பு வட்டத்தில் நட்பைப் பேணியதோடு சிறந்த சமூகச் செயற்பாட்டாளராகவும் விளங்கியிருக்கிறார். எழுத்தாளர்கள் உதயசங்கர், சாரதி, அப்பணசாமி, கோணங்கி, ஓவியர் மாரீஸ் ஆகியோரின் ஒருசாலைப் படைப்பாளராக உற்ற தோழமையுடன் அன்பு ததும்ப ஜோல்னா பையுடன் வலம் வந்தவர். இலக்கியக் கூட்டங்களிலும் புத்தகக் காட்சிகளிலும் இவரை அறியாதவர் இல்லை எனுமளவுக்கு பேச்சால் நிறைந்தவர்.

ஒரு முறை மேலாண்மை பொன்னுசாமியைச் சந்திக்க நேர்ந்த பொழுது அவர், "தம்பி நான் அஞ்சாப்பு தான் படிச்சிருக்கேன், ஏதோ நான் சந்தித்த மனிதர்களைப் பற்றி எனது அனுபவங்களைக் கதைகளாக எழுதுகிறேன் ஒரு கட்டத்தில் நீயும் எழுதலாம்" என்று அவர் சொல்லியது தன் மனதில் ஆழமாகப் பதிந்ததன் விளைவு பல கதைகள், கட்டுரைகள், குழந்தைகளுக்கானக் கதைகள், தான் ஒரு கதை சொல்லியாகத் திகழ்வதற்குக் காரணமாக நாறும்பூநாதனுக்கு அமைந்தன. குழந்தைகளால் பூ தாத்தா என்று அன்போடு அழைக்கப்பட்டவர்.

'கனவில் உதிர்ந்த பூ', 'ஜமீலாவை எனக்கு அறிமுகப்படுத்தியவன்', 'இலை உதிர்வதைப்போல' எனும் சிறுகதைத் தொகுப்புகளையும் 'தட்டச்சு கால கனவுகள்' எனும் குறுநாவலையும்' ஒரு தொழிற்சங்கப் போராளியின் டைரிக் குறிப்புகள்', 'கடன் எத்தனை வகைப்படும்?', 'வங்கி ஊழியர் டைரி', 'கண் முன்னே விரியும் கடல்', 'யானை சொப்பனம்', 'ஒரு பாடல்... ஒரு கதை', 'திருநெல்வேலி: நீர்-நிலம்-மனிதர்கள்', 'வேணுவன மனிதர்கள்' எனும் கட்டுரை நூல்களையும் 'பால்வண்ணம்' எனும் வாழ்க்கை வரலாற்று நூலையும் 'கி.ரா.வின். கடைசி நேர்காணல்' எனும் நேர்காணல் தொகுப்பையும் எண்ணத்தின் அலைகளாக எழுத்தில் பாய்ந்தோடச் செய்தவர். திருநெல்வேலியைச் சுற்றி வாழ்ந்த சாதாரண மக்கள்முதல் புகழ் பெற்றவர்கள்வரை பலரைப் பற்றியும் வரலாற்று நிகழ்வுகளையும் மக்களின் வாழ்வியலையும் நெல்லை வட்டார மக்கள் மொழியில் மணம் மாறாமல் பதிவு செய்தவர். நாறும்பூநாதனின் பல படைப்புகள் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும், பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா தன்னாட்சிக் கல்லூரியிலும் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. தினமணி, இந்து தமிழ் திசை உள்ளிட்ட பல நாளிதழில் இலக்கியம், சமூகம் மற்றும் வரலாறு சார்ந்த பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

இயக்குநர் மாரி செல்வராஜின் 'பரியேறும் பெருமாள்' படத்தில் கதாநாயகனின் தந்தையாக நடித்த நடிகர் நெல்லை தங்கராஜ் அவர்கள் ஒரு கணியான் கூத்துக் கலைஞர். மிகவும் ஏழ்மையான நிலையில் குடும்பத்துடன் குடிசை வீட்டில் வாழ்ந்துவந்த அவரை, மாவட்ட ஆட்சியரிடம் அழைத்துச்சென்று அரசின் சார்பில் அவருக்கு ஒரு வீடு கட்டித்தர வேண்டுமென்று முன்முயற்சி எடுத்ததன் விளைவாக, நெல்லை தங்கராசுக்கு புதிய வீடு ஒன்றைத் தமிழக அரசு கட்டிக்கொடுத்தது.

கடந்த ஆண்டு, நாங்குநேரியில் 12ஆம் வகுப்பு மாணவர் சின்னதுரை, சக மாணவர்களால் சாதிய வன்மத்துடன் வீடு புகுந்து தாக்கப்பட்டார். சின்னதுரை தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து அவரை உடனிருந்து கவனித்துக் கொண்டவர்களில் நாறும்பூநாதன் முக்கியமானவர். மாணவர் சின்னதுரைக்கு உற்றுளி உதவி உறுதுணையாக இருந்து வந்தவர்.

நெல்லையில் ஏழாம் நூற்றாண்டில் பாண்டியர்களால் கட்டப்பட்ட கோட்டைக் கொத்தளம், மேடை போலீஸ் ஸ்டேஷன் என்று அழைக்கப்பட்டது. தொன்மையான அந்த இடத்தின் சிறப்பை மாவட்ட ஆட்சியரிடம் எடுத்துச்சொல்லி, அதை மீட்டுருவாக்கம் செய்வதற்குக் காரணமாக இருந்தவர் நாறும்பூநாதன். இன்று அந்த இடம் தமிழக அரசால் புதுப்பிக்கப்பட்டு, பழைய கோட்டையின் புதுப்பொலிவோடு காணப்படுகிறது.

தாமிரபரணி ஆற்றின் மீது 1840ஆம் ஆண்டு கட்டப்பட்டது சுலோச்சனா முதலியார் பாலம். சுலோச்சனா முதலியார் என்ற தனி மனிதர் தனது சொந்த செலவில் அந்தப் பாலத்தை கட்டியிருக்கிறார். காலப்போக்கில், சுலோச்சனா முதலியாரின் வாரிசுகள் அடையாளம்

காணப்படாமல் இருந்தனர். இந்த நிலையில், அவரது பத்தாவது தலைமுறையினர் சென்னைக்கு அருகே வசித்து வந்ததை அறிந்து, அவர்களைத் திருநெல்வேலிக்கு வரவழைத்து மாவட்ட ஆட்சியரிடம் அறிமுகப்படுத்தி, அவர்களுக்குரிய மரியாதை கிடைக்கச் செய்த பெருமை நாறும்பூநாதன் அவர்களையே சாரும்.

நாற்பது ஆண்டுகளாக நாறும்பூநாதன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் பல முக்கியப் பொறுப்புகளிலிருந்து பல அரிய பணிகளைச் செய்தவர். களப்பணியாளராக மாதந்தோறும் கூட்டங்கள், கருத்தரங்குகள் என்று தான் இயங்குவதோடு மாணவர் தலைமுறையையும் இயங்கச் செய்தவர். முற்போக்கு இலக்கிய மரபைக் காத்தவர்.

2021, மே17இல் கி.ரா., மறைந்தபொழுது நினைவஞ்சலி செலுத்தும்விதமாக 2021, மே25 முதல் 29 முடிய ஐந்து நாள் 'கி.ரா.,வின் படைப்புலகம்' என்று இணையவழியாக ஒருங்கிணைப்புச் செய்தேன். அதில் எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் அவர்கள் தொடங்கிவைத்துப் பேசினார். அந்த நிகழ்வில் நாறும்பூநாதன் அவர்கள் 'கி.ரா.வின் கதாபாத்திரங்கள்' குறித்துப் பேசினார். அநிநிகழ்வு கொரனா தீ நுண்மி காலத்தில் இணைய உலகத்தில் இணைந்தவர்களுக்கெல்லாம் வரப்பிரசாதமாக அமைந்தது. அவர் தேர்ந்த கதை சொல்லி என்பது அனைவரையும் ஈர்த்தது. அதற்குப் பிறகு, நான் இணையவழியில் 2021 ஜுன் 16 முதல் ஜூலை 2 முடிய 'கலைஞர் படைப்புலகம்' என்று பதினெட்டு நாள் ஒருங்கிணைப்புச் செய்த பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தொடக்கவுரையாற்றினார். அந்நிகழ்வில் நாறும்பூநாதன் அவர்கள் 'கலைஞரின் சிறுகதைகளும் கதைபாத்திரங்களும்' என்னும் தலைப்பில் பேசினார். இப்படியாக எங்கள் கரிசல் மண்ணின் உறவு தொடர்ந்தது. விருதுநகர் மாவட்டத்தில் முதன் முதலாக நிலப்பகுதியின் அடிப்படையில் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து கரிசல் இலக்கியத் திருவிழாவை 2023இல் முன்னெடுத்தவர். அதில் கரிசல் பகுதியின் இளம் படைப்பாளர்களை, பேச்சாளர்களை முன்னிறுத்தவேண்டும் என்ற பேரவாவுடன் எங்களுக்கெல்லாம் வாய்ப்பு நல்கி நாங்களும் இந்தக் கரிசக்காடுதான் என்பதை உணரச் செய்தவர்.

தமிழக அரசுடன் இணைந்து நெல்லை மாவட்டச் சிறுகதைகள், நெல்லை மாவட்டக் கவிதைகள், நெல்லை மாவட்டக் கட்டுரைகள் என்று முதன்முறையாகத் தொகுத்தது இவர்தான். நெல்லைப் புத்தகத் திருவிழா, பொருநை புத்தகத் திருவிழா, நெல்லை இலக்கியத் திருவிழா, தூத்துக்குடி புத்தகத் திருவிழா போன்றவற்றை ஒருங்கிணைத்ததோடு எதிர்காலத் தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கத்தையும் படைப்பாக்கத் திறனையும் ஊக்குவிக்கும் விதமாக பல பயிலரங்குகளில் படைப்பாக்கப் பயிற்சி தந்தவர். மற்ற மாவட்டங்களுக்கும் முன்மாதிரியாகச் செயல்பட வைத்தவர். எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் ஓடி ஓடி களத்தில் பணியாற்றியவர் இன்று ஓய்வெடுக்கச் சென்றுள்ளார். அவர் மூச்சை நிறுத்திக் கொண்டாலும் அவர் செய்த பணிகள் அவரை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும். இதுதான் காலத்தின் கட்டாயம்.

●

**உதவிப் பேராசிரியர், தமிழ்மொழி(ம)மொழியியல் புலம்,**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.**


## FORM - IV

Statement about ownership and other particulars about newspaper New Centuryin Ungal Noolagam to be published in the first issue every year after the last day March.

1. Place of Publication : Chennai

2. Periodicity of its Publication : Monthly

3. Printer's Name : A.Sivakumar
   Nationality : Indian
   Address : Pavai Printers (P) Ltd., 16(142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

4. Publisher's Name : Shanmugam Saravanan
   Nationality : Indian
   Address : New Century's Readers Sangam, 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

5. Editor's Name : T.Stalin Gunasekaran
   Nationality : Indian
   Address : 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

6. Names and addresses of individuals those who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

I, Shanmugam Saravanan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Shanmugam Saravanan)

Signature of Publisher

அறிமுகம்

# ‘கல்’ சிற்பி ‘சொல்’ சிற்பி ஆன கதை




**இந்திய இலக்கியச் சிற்பிகள் ச. பாலசுந்தரனார் / பா. மதிவாணன் / சாகித்திய அகாதெமி வெளியீடு.**

“ ஏழாம் வகுப்போடு படிப்பை விட்டவர். பட்டறைக்கு அருகில் கரந்தைக் கல்லூரி இருந்த தொடர்பில் மீண்டும் படிக்க விரும்பி தடைகளைத் தாண்டி, பணி செய்து கொண்டே ‘புலவர்’ ஆகிறார். ”

*தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ் தவிர்த்த பிற துறைகளில் தொழிற்பட்டவர்கள் ஆர்வத்தின் அடியாக தமிழில் பெரும் சாதனைகள் புரிந்தார்கள் என்பதை அறிவோம். ஆனால், குடும்ப நிலை காரணமாக பள்ளிப் படிப்பைப் பாதியிலே விட்டு ‘கல் சிற்பி’ ஆன ஒருவர் தன் விடாமுயற்சியால் முறைசாராமல் பயின்று ‘சொல் சிற்பி’ ஆனதும், அதிலும் இலக்கியப் படைப்போடு இலக்கண உருவாக்கத்தில் ஈடுபட்டதும் தமிழ்ச் சூழலில் அரிதான முன் மாதிரி. ஆம். அவர்தான் பாவலரேறு ச. பாலசுந்தரனார்.*

*இது பாவலரின் (1924 - 2007) நூற்றாண்டு நிறைவு. சாகித்திய அகாதெமி நூற்றாண்டு காணும் இலக்கிய வாணர்களைத் தொடர்ந்து நினைவுகூரல் செய்து வருவது பாராட்டுக்குரியது. இந்திய இலக்கியச்சிற்பிகள் வரிசையில் ச. பாலசுந்தரனார் பற்றி அவரின் திருமகன் பா. மதிவாணன் எழுதியுள்ளார். ஆளுமையாளர் குறித்த நூல் ஒன்று எப்படி அமைதல் வேண்டும் என்பதற்கு சான்று போல இந்நூல் அமைந்துள்ளது. சிறிதும் ‘தன்னிலை’ வெளிப்படாமல் மிகக் கவனமாக நூலினை எழுதி உள்ளார். நூலினை மொழிதல் முறைமையும் அழகுற அமைந்துள்ளது.*




**முனைவர் இரா.காமராசு**

குலத்தொழில் அல்லாது குடும்பம் ஏற்றுக் கொண்ட 'கல்லுப்பட்டறைக்காரர்' வீட்டில் பிறந்த பாலசுந்தரம், சூழல் காரணமாக சிறுவர் நிலையிலேயே அத்தொழில் பழகி அதில் விற்பன்னராகிறார். இளம் வயதில் சிற்பம், கட்டடம் சார்ந்து பல்வேறு அனுபவங்களும் சுவையாகச் சொல்லப்படுகின்றன. கூடவே துணிக்கடைப் பணியிலும் ஊர்களுக்கு தலையில் சுமந்து சென்று துணி விற்கும் பணியிலும் கூட ஈடுபடுகிறார்.

பட்டறையில் பல அனுபவங்கள். அரசு சார்ந்த ஓர் பணியில் சாலை உருளையை உடைப்பது, கட்டட உயரம் குறைப்பது போன்ற பெரிய வேலைகளை பாலசுந்தரம் மிக எளிதாகச் செய்து விடுகிறார். சிற்பத் தொழில் நுட்பமானது. மரபறிவு. இதில் இவரின் தேர்ச்சி வியக்கத்தக்கது. 'வேர்ப்பிள்ளையார்' ஒன்றை ஒருவர் நினைவாக அமைக்கிறார். அது இன்றளவும் விளங்கி வருகிறது. இதனை, "பாலசுந்தரத்தின் தந்தையாரிடம் வந்து "குளத்து மேட்டுத் தெரு வடவாற்றுப் படித்துறையில் ஒரு பிள்ளையார் கோயில் கட்டலாம் என்று முடிவு செய்துள்ளேன். வெள்ளம் முதலியவற்றால் பாதிக்கப்படாமல் பிள்ளையாரை வேர்ப்பிள்ளையாராகச் செய்து வைக்க வேண்டும்' என்றார். அதாவது ஐந்தடி நீளக் கருங்கல்லின் ஒரு நுனியில் ஒன்றரையடியளவில் விநாயகர் சிலையைச் செதுக்கி, மூன்றரையடி தரைக்குள் பதித்துச் சுற்றிக் கட்டிடம் அமைக்க வேண்டும். பாலசுந்தரம் அப்படி செய்து கொடுத்தார்."(ப. 20)

சிற்ப வேலையில் மட்டுமல்ல தன் அன்றாட வாழ்விலும் கூட அழகும், நேர்த்தியும் மிக்கவற்றை பாலசுந்தரம் மேற்கொண்டார் என்பதை பல இடங்களில் இந்நூல் பதிவு செய்கிறது. பட்டறை வேலையில் பசியை ஆற்றிக் கொள்ள வெற்றிலைப் பழக்கத்துக்கு ஆளாகிறார். வாழ்நாள் முழுவதும் அதனைப் பின்பற்றுகிறார். தஞ்சாவூரில் தாம்பூலம் தரிப்பது இயல்பானதுதான். அதுவும் இசைவாணர்களின் அடையாளம் அது. இவர் கலைஞர், கவிஞர்.

'மாத ஊதியம் உறுதியான காலத்தில் வெற்றிலையைக் கவுளி(நூறு)யாக வாங்குவார். புகையிலையை புகையிலைக் கம்பெனியில் தேவைக்கேற்ப நிறுத்தும், சீவல், சுண்ணாம்பை மொத்த விலைக்கடையிலும் வாங்குவது அவரது வாடிக்கை. வெற்றிலை, சீவல் முதலியவற்றுக்குத் தனித்தனி அறை கொண்ட பித்தளைப் பெட்டி வீட்டில் இருக்கும். கைப்பையில் சிறு அலுமினிய வெற்றிலைப் பெட்டி இருக்கும்.

ஒரு கவுளி வெற்றிலையையும் ஒன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து நறுவிசாகப் பத்திரப்படுத்துவதிலேயே கலை நயம் தொடங்கிவிடும். ஒரு கட்டத்தில் தாமே பச்சைக் கற்பூரம், கிராம்பு முதலியவற்றைக் கலுவத்திலிட்டு மசித்து மணப்புகையிலை தயாரித்துக் கொண்டார். உரித்து விட்டு, நரம்புகள் ஓடும் பக்கத்தில் சுண்ணாம்பைப் பட்டும் படாமலும் பரவலாகத் தடவிச் சீவல் சேர்த்துப் பொட்டலம் போல் மடித்து, கடைவாயிலிட்டு வாய்மூடி அரைக்கும் போதே புருவச் சிலிர்ப்பும் கண்ணின் மென்னகையும் முகத்தின் மலர்ச்சியும் தோன்றிப் பொலியும். பின்னர்ப் புகையிலை போடுவார். செயலில் பேச்சில் உற்சாகம் கூடும். அவர் வெற்றிலை போடுவதை ஒரு கலை நிகழ்ச்சி போல் பார்க்கலாம்."(பக். 15- 16)

அதே போல் இன்னபிற வேலைகளைச் செய்வதை,

"வாரந்தோறும் துணிகளைத் துவைத்துச் சுருக்கமில்லாமல் காய வைப்பார். மாலையில் கனன்றெரியும் கரியை நிரப்பி அவ்வப்போது வெப்பம் குன்றாமல் விசிறி, தரையில் குத்துக்காலிட்டு அமர்ந்து பெட்டி போட்டு(ironing) மடித்து அடுக்கி விடுவார். தொழில் முறைச் சலவையாளரை விடவும் நேர்த்தியாகச் செய்வார்." (ப.27)

"உடைமைகள் அதிகமற்ற ஓட்டு வீடாதலின் ஆண்டு தோறும் பொங்கலையொட்டிச் சுண்ணாம்புக் கற்களை வாங்கிச் சிமெண்ட் தொட்டியில் ஊறவைத்து தென்னை மட்டையைத்தட்டித் தூரிகையாக்கித் தாமே வெள்ளையடித்துவிடுவார்."(ப.28)

அறிவும், உழைப்பும் இருவேறு துருவங்கள் எனக் கருதும் சூழலில் இரண்டையும் இணைத்து பேதமற்று வாழ்ந்தவராக பாலசுந்தரனாரை இந்நிகழ்வுகள் சுட்டுகின்றன.

ஏழாம் வகுப்போடு படிப்பை விட்டவர். பட்டறைக்கு அருகில் கரந்தைக் கல்லூரி இருந்த தொடர்பில் மீண்டும் படிக்க விரும்பி தடைகளைத் தாண்டி, பணி செய்து கொண்டே 'புலவர்' ஆகிறார். இயல்பிலேயே கலையாற்றல், கவி புனையும் ஆர்வம் அவருக்கு இருந்தது. கரந்தையில் பயிலும் போது கவிஞர் தமிழ் ஒளி போன்றவர்கள்

சக மாணாக்கர்கள். நடிப்பு, பாடல், திரைப்பட ஆர்வமும் இவருக்கு அதிகம் . நாடகங்கள் எழுதி அரங்கேற்றமும் செய்கிறார். ஒருவழியாக கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணி ஏற்கிறார்.

பாவலரின் பணிகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம் 1. ஆசிரியம், 2. நாடகங்கள், 3. மரபுப்பாக்கள், 4. கவியரங்கம், 5. அமைப்புகள், 6. பதிப்புப் பணி, 7. அகராதிப்பணி, 8. இலக்கிய – இலக்கண ஆய்வுகள், 9. தொல்காப்பிய உரைகள், 10. தன்வரலாறு.

பாவலர் விரும்பிச்செய்த பணி ஆசிரியம். சுமார் 32 ஆண்டுகள் நல் ஆசிரியராக அவர் விளங்கினார். இலக்கண, இலக்கிய உலகில் பலரை உருவாக்கினார். 1950 தொடக்கம் மறையும் வரை அவர் எழுதிய நூல்கள் சுமார் ஐம்பது. ‘கரந்தைக் கோவை’ அவருக்கு முகவரி தந்தது. அவரின் படைப்புகள் எளிமை, இனிமை, அழகு நிரம்பியவை. இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகள் புதுத்தடம் பாய்ச்சியவை. அகராதித் துறையில் இவரின் முன்வைப்புகள் தமிழின் முன்னோடி முயற்சிகள். அதேபோல சுவடியிலிருந்து பதிப்பித்த பதிப்புகளும் பதிப்பியல் நெறிகளுடன் விளங்குவன. பாவலரின் வாழ்நாள் பெரும் பணி என்பது தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகை உரை – நீண்ட காலப்பணியும் கூட. இளம்பூரணம், நச்சினார்க்கினியம், வெள்ளைவாரணம் போல ‘பாலசுந்தரம்’ என அறிஞர்களால் போற்றத்தக்கது. இவை குறித்த நுட்பமான அறிமுகமாக இந்நூல் அமைந்துள்ளது.

பாவலரின் சிந்தையெல்லாம் தமிழ் மொழி, இலக்கணம், மரபு, இலக்கியம் என்பனவாகவே அமைந்தது. அவருக்கு தனிப்பட்ட அரசியல் சார்பு நிலைகள் இல்லை என்ற போதும் ‘தமிழ்’ எனும் கருத்தியல் இயல்பாக இருந்தது. தொல்காப்பியர் கழகம், தவத்திரு அடிகளாருடன் இணைந்து திருக்குறள் பேரவை ஆகிய அமைப்புகளில் இயங்கினார். நூற்றுக்கணக்கான தமிழ்முறைத் திருமணங்களை நடத்தி வைத்தார். இவரின் கவியரங்க மேடைகள் புகழ் பெற்றவை.

பாவலரின் ஆளுமைத் திறத்தையும், அறிவாற்றலையும், படைப்பாற்றலையும், பன்முகப் பணிகளையும் சுருக்கமாகவும் நுட்பமாகவும் இந்நூலில் பா. மதிவாணன் பதிவு செய்து உள்ளார். “நறுந் தாம்பூலத்தால் சிவந்த வாய்! செந்தமிழ் திளைக்கும் நா! நீறுமணக்கும் நெற்றி! இனிய அன்பு தவழும் நெஞ்சு! கவிதை கொழிக்கும் கொண்டல்! என்றெல்லாம் ஆயிரம் சொல்லிப் பாராட்டலாம். யாரை? கரந்தை தந்த கவிஞர் ச. பாலசுந்தரத்தைத்தான்! அவரை ‘கவிஞர்கோ’ என்று உளமிக்கப் பாராட்டி மகிழ்ந்தோம்” என்று பாவலரை, தவத்திரு குன்றக்குடி அடிகளார் ‘கவிஞர்கோ’ எனும் பட்டமளித்துப் பாராட்டினார்.

மூதறிஞர் பள்ளியகரம் நீ. கந்தசாமி பிள்ளை, “தமிழகத்தின் வளர்ந்து வரும் கவிஞரான, வித்துவான் ச. பாலசுந்தரம், அரிதான நுண்தேர்ச்சிப் புலமையாளர்; மொழியின் மரபும் வழக்கும் குறித்த தெளிவான கருத்துடைய இலக்கண வல்லுநர்; திறமான சிற்பி; ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் போற்றத்தக்க ஆசிரியர்; கலை இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் பரந்த ஆர்வத்துடன் கூடிய மறுமலர்ச்சிக் காலத்தின் தொடக்கக் கட்டத் தலைமுறையை அவர் எனக்கு நினைவூட்டுகிறார்” என்ற அறிமுகம் பாவலரின் பணிகளை நினைவு கூரப் போதுமானது.

●

**கட்டுரையாளர்: பேராசிரியர் – தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.**

**<u>உங்கள் நூலகம் இதழுக்கு கட்டுரைகள் அனுப்புவோர் கவனத்திற்கு...</u>**

- **கட்டுரைகள் 1300 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும்**
- **யுனிக்கோட் (Unicode) எழுத்துருவில் தட்டச்சு செய்து அனுப்பவேண்டும்.**
- **கட்டுரையாளரின் புகைப்படம் இணைத்து அனுப்பவேண்டும்.**
- **தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் இருக்க வேண்டும்.**
- **ஆசிரியர்குழுவின் முடிவின்படியே கட்டுரைகள் தெரிவுசெய்யப்படும்.**
- **தேர்ந்தெடுக்கப்படாத கட்டுரையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.**



> “ஓ.பி.ராமசாமி ரெட்டியார், காமராஜரிடம், நான் விட்டு விலகும், இந்த முதல்வர் நாற்காலியில், ஒரு யோக்கியன்தான் உட்கார வேண்டும் என்று கூறியதைக் கேட்ட காமராஜர், திகைத்துப் போகிறார். சரி நீங்களே ஒரு யோக்கியரைக் கூறுங்கள் என்கிறார், அதற்கு என்னைவிட ஒரு யோக்கியன் ராஜபாளையத்தில் உள்ள பூ.ச.குமாரசுவாமி ராஜா என்கிறார்.”

# சென்னை மாகாணத்தின் கடைசி முதல்வர் பூ.ச. குமாரசுவாமி ராஜா



முனைவர் கோ. ஜெயக்குமார்

உண்மை, நேர்மை, எளிமை இந்த மூன்று நடைமுறைகளுக்கும் சொந்தக்காரராக இருப்பது மிகவும் அரிதான ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த மூன்றையும், தனது வாழ்நாள் முழுவதும் கடைபிடித்த, சென்னை மாகாணத்தின் கடைசி முதல்வரைப் பற்றிதான் இந்தக் கட்டுரையில் பார்ப்போம். தனது சொத்துக்களை அனைத்தையும் இழந்த போது கூட, நேர்மையை இழக்காத, நேர்த்தியான மனிதராக வாழ்ந்து மறைந்திருக்கிறார் பூ.ச.குமாரசுவாமி ராஜா. இந்த நேர்மைக்காக இந்த காலகட்டத்தில் அவரைப்பற்றி பேசுவது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

த. பிரகாசத்திற்கு முன் காலகட்டத்தில் சென்னை மாகாண மேலவைத் தலைவர்களாக செயல்பட்டனர். அந்தப் பொறுப்புகளில் இராஜகோபாலாச்சாரி, கூர்மா வெங்கடரெட்டி, ராமகிருஷ்ண ராவ், பி.டி.இராஜன், ராமகிருஷ்ண ரங்காராவ், முனுசாமி நாயுடு, சுப்பராயன், பனகல் ராஜா, சுப்பராயன் ஆகியோர் செயல்பட்டுள்ளனர் (1920 முதல் 1937 வரை).




பெற்று 1934 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினரானார்.

சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக பூ.ச.குமாரசுவாமி ராஜா 1949ஆம் ஆண்டு ஜனவரி 26 தேதி முதல், 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி வரை முதலமைச்சராக பதவி வகித்தார்.

1950ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி முதல், 1952 ஏப்ரல் 10ஆம் தேதி வரை முதல்வராக மீண்டும் தொடர்ந்து செயல்பட்டார். இதனைத் தொடர்ந்து 1954 ஆம் ஆண்டு முதல் 1956 ஆம் ஆண்டு வரை, ஒரிசா ஆளுநராகப் பணியாற்றினார்.

பூசாபதி சஞ்சீவி ராஜாவின் மகன் குமாரசுவாமி ராஜா 08.07.1898 இல் பிறந்து, எட்டு நாட்களில் தனது தாயையும், மூன்று வயதில் தந்தையையும் இழந்தார். உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. தனது பாட்டியின் வீட்டில் வளர்ந்தார். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இவர், தனது 14 வது வயதில் தன்னைவிட ஆறு மாத மூத்த ஸ்ரீ ரங்கம்மாள் என்ற பெண்ணை திருமணம் செய்து வைக்கின்றனர். ஆனால், ஆறு ஆண்டுகளில் அவர் இறந்து விடுகிறார். அதன்பிறகு தனது மனைவியின் சகோதரியை திருமணம் செய்து வைக்கின்றனர், அந்தப் பெண்மணி இவரை விட இரண்டு வயது மூத்தவர்.

பூ.ச.குமாரசுவாமி ராஜா சார்ந்திருந்த சமூகம், 15 ஆம் நூற்றாண்டில், ஆந்திராவில் இருந்து இடம் பெயர்ந்து தமிழகம் வந்த ராஜூக்கள் என்ற சமூகத்தை சேர்ந்தவர். அதனால் தான் தனது பெயருக்குப் பின்னால் ராஜா என்ற அடைமொழி இந்த சமூகத்தினர் வைத்துக் கொள்வது வழக்கம். அடைமொழி போலவே உயர்ந்த பண்புகளிலும் ராஜாவாகவே வாழ்ந்தார். இவர் பள்ளிப் படிப்பை முடித்தவுடன், இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்து பணியாற்றினார். பின்னர் கிராம பஞ்சாயத்து மீது ஏற்பட்ட ஆர்வம் காரணமாக, பஞ்சாயத்து மற்றும் நகரசபை நிர்வாகங்களில் பொறுப்பேற்று பங்காற்றினார்.

அன்னி பெசண்ட், சத்தியமூர்த்தி ஆகியோர் மீது ஏற்பட்ட தாக்கம் காரணமாக, 1919 ஆம் ஆண்டு காந்தியை சந்திக்கிறார். இந்த சந்திப்பு, காந்தி மீதான ஈடுபாடு, எளிமை காரணமாக அவர் மீதான தாக்கம் அதிகரிக்கிறது. பாகுபாடு, சமத்துவமின்மை போன்ற நீதியற்ற சட்டங்களுக்கு எதிராக போராடுகிறார். இதனால் 1932 ஆம் ஆண்டு சிறைக்கு சென்றார். திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் அடங்கிய தொகுதியில் வெற்றி

இவரது ஆட்சிக் காலத்தில் ஆளுநராக, கிருஷ்ணகுமார் சிங் பவசிங் இருந்தார். இவருக்கு முன்னதாக ஓ.பி.ராமசாமி ரெட்டியார் 1947ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் தேதி முதல், 1949 ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி வரை முதல் முறையாக சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சராக செயல்பட்டார். இவருக்கு முன்னதாக, சென்னை மாகாணத்தின் பிரதமராக 1946 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி முதல், 1947 மார்ச் 23ஆம் தேதி வரை பிரகாசம் செயல்பட்டார். பதவி ஏற்ற ஓர் ஆண்டில், காமராஜருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, காங்கிரஸ் கட்சியின் தேர்தலில், ஓ.பி. ராமசாமி ரெட்டியார் வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து 1947 ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் தேதி, பிரகாசம் பிரதமர் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். ஆனால் மகாத்மா காந்தி, வல்லபாய் பட்டேல், அப்போதைய அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அபுல் கலாம் ஆசாத் ஆகியோரது விருப்பம், ராஜாஜியை பிரதமராக்க வேண்டும் என்பது. இந்த விருப்பத்தை காமராஜிடம் தெரிவித்துள்ளனர். ஆனால் காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பிரகாசத்தை தேர்வு செய்தனர். ராஜாஜி காங்கிரஸ் கட்சியின் புறக்கணிப்பதற்குக் காரணம், 1942 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்ட் புரட்சியை புறக்கணித்து வெளியேறி இருந்தார் ராஜாஜி, அதனால் அவரை ஏற்கவில்லை, அவருக்கு வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஓ.பி.ராமசாமி ரெட்டியார், காமராஜரிடம், நான் விட்டு விலகும், இந்த முதல்வர் நாற்காலியில், ஒரு யோக்கியன்தான் உட்கார வேண்டும் என்று கூறியதைக் கேட்ட காமராஜர், திகைத்துப்



போகிறார். சரி நீங்களே ஒரு யோக்கியரைக் கூறுங்கள் என்கிறார், அதற்கு என்னைவிட ஒரு யோக்கியன் ராஜபாளையத்தில் உள்ள பூ.ச.குமாரசுவாமி ராஜா என்கிறார். இதனைத் தொடர்ந்து அவர்களது ஆதரவோடு முதல்வரானார். அவரது ஆட்சிக் காலத்தில், பூரண மதுவிலக்கு அமல் படுத்தினார். நீதித்துறையும் நிர்வாகத்துறையும் ஒன்றாக இருந்ததைப் பிரித்து நீதித்துறையை சுதந்திரமாக செயல்படுத்தினார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஆலய பிரவேசம் சட்டபூர்வமானது, கதர் கைத்தறி ஆடைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

குறிப்பாக ஊழலை அடியோடு அழித்த பெருமை அவரையே சாரும். சென்னை செய்தி என்ற ஒரு இதழைத் தொடங்கி, அதில் யார் ஊழல் செய்கிறார்களோ, அவரது பெயர், புகைப்படம், போன்ற முழு விவரங்களை வெளியிட்டு, ஊழலின் ஒட்டுமொத்த வேர்களையும், அவர் அழித்தார். மிகப்பெரிய செல்வந்தரான அவர், தனது சொத்துக்கள் முழுவதையும் ராஜபாளையம் பொதுமக்களுக்கு எழுதிக் கொடுத்தார். தான் வாழ்ந்த வீட்டை காந்தி கலை மன்றம் என்ற நுண்கலை அமைப்பிற்கு நன்கொடையாக வழங்கினார். இந்த இல்லத்தில் அவர் படிக்க சிறுகச் சிறுக வாங்கி வைத்த நூல்களைக் கொண்டு உருவாக்கினார். பின்னர் ஒரு லட்சத்திற்கும் அதிகமான நூல்களைக் கொண்ட பெரிய நூலகத்தை அப்போதைய குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத்தைக் கொண்டு திறந்து வைத்து அறிவுக் கண்ணைத் திறந்து வைத்தார்.

இந்தக் காலகட்டத்தில் பாரதியாருக்கு நினைவு மண்டபம் கட்ட, கல்கி இரா.கிருஷ்ணமூர்த்தி நிதி திரட்ட முற்பட்ட போது, ஒரு நியாயமான மனிதரிடம் முதல் நிதியைப் பெறத் திட்டமிட்டு, ராஜபாளையம் பூ.ச. குமாரசுவாமியை நாடுகிறார், அப்போது தனது வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கிறார், அதில் 50 ரூபாய் மட்டுமே இருந்தது, அதை முதல் ஆளாக வழங்கினார். காரைக்குடி வள்ளல் அழகப்பர், திருச்சூரில் ஒரு நூற்பாலை திறப்பு விழாவிற்கு வரவேண்டும் என, குமாரசாமி ராஜாவிற்கு கடிதம் எழுதுகிறார். அதற்கு பதில் கடிதம் எழுதியவர், நான் தான் எந்தப் பொறுப்பிலும் இல்லையே, என்னை ஏன் திறப்பு விழாவிற்கு அழைக்கிறீர்கள் என்று கேட்க, அதற்கு வள்ளல் அழகப்பர், கறை படியாத கரங்களுக்கு சொந்தக்காரர் நீங்கள், தாங்கள் தான் வந்து திறந்து வைக்க வேண்டும் என்று அவர் மீண்டும் கடிதம் எழுதியிருக்கிறார்.


அப்படிப்பட்ட நேர்மையாளரை, 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தோல்வி அடையச்செய்தனர். 15.03.1957 ஆம் ஆண்டு, சென்னை மாகாணத்தின் கடைசி முதலமைச்சர் உயிரிழந்தார். அவரது நினைவைப் போற்றும் வகையில் அப்போதைய மத்திய அரசு, அவரது உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டது. ராஜபாளையம் பேருந்து நிலையத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டது, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அதனைச் சுற்றி உருவாக்கப்பட்ட நகருக்கு இவரது பெயர் வைக்கப்பட்டது. இவரது நினைவிடம் விருதுநகரில் உள்ளது. 05.09.1978இல் ராஜபாளையத்தில் அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன், குமாரசாமி ராஜாவின் முழு திருவுருவச் சிலையை திறந்து வைத்து, வருங்கால சமூகம் அறியும் வண்ணம், வரலாற்றில் நிலையான புகழை அவருக்குக் கிடைக்கச் செய்தார்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர், ஊடகவியலாளர்.**

தமிழ்வரலாற்றில், தனித்தமிழ் இயக்க நிலையில் மறைமலையடிகளை அடுத்த தலைவராகவும், அறிஞராகவும் விளங்குபவர் ஞா. தேவநேயப் பாவாணர் ஆவார். சொல்லாராய்ச்சித்துறையில் முதன்மையான அறிஞராகத் திகழும் அவர் அகராதியியலிலும் மொழியியலிலும் குறிப்பிடத்தக்க அறிஞராவார். தமிழியலில் ஆராய்ச்சி அறிஞராக முதன்மை முகங்கொண்டு ஒளிரும் பாவாணர் அடிப்படையில் தேர்ந்த பாவலராகவும் இசைப்பாவாணராகவும் விளங்கியவர். இக்காரணம் பற்றியே தேவநேசன் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் கவிவாணர் என்னும் புகழ்ப்பெயரைப் பின்னொட்டாகப் பெற்றார். தனித்தமிழ் நோக்கால் இயற்பெயரும் புகழ்ப்பெயரும் தேவநேயப் பாவாணர் எனக் கால ஓட்டத்தில் வடிவம் பெற்றன. தமிழ்மொழிக் காப்பு வரலாற்றில் தேவநேயப் பாவாணரின் சிந்தனைகள் செலுத்திய பெருந்தாக்கத்தால் அவர் மொழிஞாயிறு உள்ளிட்ட புகழ்ப்பெயர்களால் தமிழ்ச் சமூகத்தில் போற்றப்பெற்றார். சொல்லாராய்ச்சித்துறை முதலியவற்றில் பாவாணரின் பங்களிப்புகள் விதந்தோதப்பெறும் பெருநிலை கொண்டவை. தமிழ் யாப்பியலிலும் பாவாணர் தனித்துச் சுட்டத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழ் யாப்பியல்: பாவாணர் பங்களிப்புகள்



**சி. இளங்கோ**

## தமிழ்ப் பா வடிவங்கள்: பாவாணரின் தனித்த மதிப்பீடுகள்

*தமிழ்ப் பா வடிவங்கள் காலந்தோறும் மரபின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றுப் பல்கிப் பெருகியுள்ளன. ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி, மருட்பா என்னும் பாக்கள், விருத்தம், துறை, தாழிசை என்னும் பாவினங்கள், வண்ணம், சிந்து, உருப்படி முதலிய இனவினங்கள் எனத் தமிழ்ப் பா வடிவங்கள் பற்பலவாய்த் தோற்றம் பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட யாப்பு வடிவத்திலேயே அமைந்த இலக்கியங்கள், பல யாப்பு வடிவங்கள் விரவி அமையப் படைக்கப்பெற்ற இலக்கியங்கள் எனத் தமிழிலக்கியங்கள் அமைந்து விளங்குகின்றன. குறிப்பிட்ட யாப்பு வடிவத்தில், பா வடிவத்தில் தலைசிறந்த திறம் கொண்டவர்களாகச் சில புலவர்கள் தமிழ் வரலாற்றில் காணப்பெறுகின்றனர். இவற்றையெல்லாம் மனங்கொண்டு குறிப்பிட்ட யாப்பு வடிவத்தில் தலைசிறந்தவர் இவர் என மதிப்பிட்டுரைக்கும் போக்கு தமிழ் வரலாற்றில் காணப்படுகின்றது.*

*பழம்பாடல்களுள் ஒன்று சில யாப்பு வடிவங்களில் வல்லவர்களை விதந்துரைப்பதாக அமைந்துள்ளது. இப்பாடல் பரவலாகப் பலராலும் அறியப்பட்டதாகும்.*

**வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்**
**சயங்கொண்டான் விருத்த மென்னும்**
**ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா**
**அந்தாதிக் கொட்டக் கூத்தன்**
**கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்**
**வசைபாடக் காள மேகம்**
**பண்பாகப் பகர்சந்தம் படிக்காச**
**லாலொருவர் பகரொ ணாதே.**

*இப்பாடல் வெண்பா, விருத்தம் ஆகிய பா வடிவங்களிலும், பரணி, கோவை, உலா, அந்தாதி, கலம்பகம் ஆகிய பிரபந்த இலக்கியங்களிலும் தேர்ந்த திறத்தை வெளிப்படுத்திய புலவர்களை எடுத்துரைக்கின்றது. "வெண்பாவிற் புகழேந்தி", "விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்" என்பன இப்பாடலில் இடம்பெற்றுள்ள யாப்பியல் சார்ந்த மதிப்பீடுகளாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான தமிழிலக்கிய வரலாற்றை யாப்பு நோக்கில் கருத்தில்கொண்டு ஒவ்வொரு பா வடிவத்திலும் சிறந்த புலவர் பெருமக்களை மதிப்பிட்டுரைக்கும் முயற்சிகளின் தொடக்கமாக இப்பாடல் அமைந்துள்ளபோதிலும் இரண்டு பா வடிவங்களில் வல்லவர்களை மட்டுமே இப்பாடல் சுட்டியுள்ளது. இப்பாடல் முன்னெடுத்த சீரிய மரபை வளர்த்தெடுக்கும் நோக்கில், முழுமைப்படுத்தும் நோக்கில் முதன்முதலாகத் தேவநேயப் பாவாணர் பாடல் வடிவில் யாப்பு வடிவ வல்லாளர் குறித்த மதிப்பீட்டினை முதன்முதலில் புரிந்துள்ளமை தமிழிலக்கிய வரலாற்றிலும் தமிழ் யாப்பியல் வரலாற்றிலும் கவனத்தில்கொள்ள வேண்டிய பாவாணரின் பங்களிப்பாகும்.*

*தேவநேயப் பாவாணர் படைத்த இசைப்பாடல்களின் தொகுதியாக அமைந்தது 'இசைத்தமிழ்க் கலம்பகம்' என்னும் நூலாகும். இந்நூல் 1966இல் முதலில் வெளிவந்ததாகும். இதன்கண் இடம்பெற்ற இசைப்பாடல் ஒன்று "யார் யார் எவ்வெப்பா வல்லார்?" என்னும் தலைப்பில் அமைந்ததாகும். இப்பாடல் தமிழ் யாப்பு வடிவங்களில் சிறந்த திறத்தை வெளிப்படுத்திய புலவர் பெருமக்களை விரிவாக மதிப்பிட்டுக் காட்டுகின்றது.*

*தமிழின் சிறப்பைக் குறித்துப் பேசும் ஒரு பாடலில் பாவாணர் 'இந்த உலகத்தினிலே எந்த மொழி கற்றிடினும் முந்து தென்னிலத்து இருந்த எல்லைவழி-மோனை, எதுகை அமை தேனை நிகர் இனிமைப்பா' ('செந்தமிழ்ச் சிறப்பு', இசைத்தமிழ்க் கலம்பகம், ப. 14) கொண்டது தமிழ் என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். இப்பகுதியில் தமிழின் தொடைநலன்களின் தனிச்சிறப்பைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். மேலும், வேறு எந்த மொழியிலும் வெண்பாவோ, கலிப்பாவோ, வண்ணப்பாடல்களோ இல்லை என்பதையும் தமிழின் தனித்தன்மை இவை என்பதையும்*

**வெள்ளைகலிப் பாவுமுண்டோ வேறு மொழியே – ஒலி**
**வீறுதமிழ் வண்ணங்களும் கூறும் வழியே – ஒரு**
**வாறுமில்லை கடுமையுந்தான் பாடும் நிலையே – எதும்**
**கூடவில்லையே (செய்.)**

**('செந்தமிழ்ச் செய்யுட் சிறப்பு',**
**இசைத்தமிழ்க் கலம்பகம், ப. 15)**

*எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.*

*தமிழ்மொழி தனது பெயரிலும்கூட இனிமையைத் தாங்கி நிற்கக்கூடிய பேரின்பக் கடல் எனவும், தமிழின் பாடல்களில் எதுகை, மோனை தவறாமல் பயிலும் என்பதையும்*

**பேரிலுந்தமிழ் இனிமைதங்கும் பேரின்ப வாரி**
**சாரும் எதுகை மோனை வண்ணம்**
**சற்றுந்தவறாது நண்ணும் (பேரிலுந்)**
**('தமிழின்பம்', இசைத்தமிழ்க் கலம்பகம், ப. 19)**

*எனப் பாடியுள்ளார்.*

தொல்காப்பியச் செய்யுளியலில் இடம்பெறும் இருபது வகை வண்ணங்கள், எண்வகை வனப்புகள், ‘பாட்டுரை நூலே’ எனத் தொடங்கும் எழுநிலைச் செய்யுள்கள் ஆகியன இறந்துபட்ட அவலத்தை ஒரு பாடலில் பாவாணர் நாம் மனங்கொள்ளுமாறு படைத்துள்ளார்.

> இன்னறு பாக்களும் இருபது வண்ணமும்,
> எண்பெரு வனப்பொடு எழுநிலைச் செய்யுள்களும்
> (எத்திறம் இறந்தனவோ அத்திறம் அவன் அறிவான்)
> (‘இறந்துபட்ட தமிழ் நூல்கள்’, இசைத்தமிழ்க் கலம்பகம், ப. 44)

எனப் பாடியுள்ளமை தொல்காப்பியச் செய்யுளியல் காட்டும் பல யாப்பியற்கூறுகளுக்கு இலக்கியமாய் அமையும் படைப்புகள் அழிந்துபட்டமையை எடுத்துரைத்துள்ளது.

இவ்வாறு இலக்கணச் செய்திகளுள் யாப்பியல் செய்திகளைப் பாவாணர் மிகுதியாகப் பாடல்களில் சுட்டிப் பாடியுள்ளமை தமிழ் யாப்பியலின் ஏற்றத்தை விதந்துரைக்கும் நிலையில் காட்சிதருகின்றது.

**பாவாணர் பாடல்களின் யாப்பியல்**

தனித்தொகுதிகளாகும் வகையில் பாவாணர் இசைப்பாடல்களை மிகுதியாகப் பாடியுள்ளார். எனினும் வாழ்த்துப்பாக்கள், இரங்கற்பாக்கள் முதலிய நிலைகளில் பல்வகை யாப்பில் பல பா வடிவங்களையும் அவர் ஆண்டுள்ளார். பாவாணர் பாடிய பாடல்கள் சிதறிக் கிடந்தமையை ஒருசேரத் திரட்டியளித்த இரா. இளங்குமரனார் பாவாணர் ஆண்ட யாப்பு வடிவங்களை நிரல்படுத்தியுள்ளார். அவை வருமாறு: ஆசிரியப்பா, நூற்பா, குறள் வெண்பா, நேரிசை வெண்பா, அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீர்ச் சந்த விருத்தம், எண்சீர் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, கட்டளைக் கலித்துறை, கும்மிப்பா, இசைப்பா. இவ்வாறு பா, பாவின, இனவின வடிவங்கள் பலவற்றையும் ஆற்றல் மீதூர ஆண்ட தேர்ந்த பாவலராகவும் பாவாணர் திகழ்கின்றார். யாப்பு வடிவங்களைத் திறம்பட ஆண்டு ஆட்சிநிலையில் தமிழ் யாப்பியலுக்குப் பங்களித்தவராகவும் பாவாணர் விளங்குகின்றார்.

பாவாணரின் இசைப்பாடல்களில் பல தனிச்சிறப்புகள் அமைந்து விளங்குகின்றன. தேவாரப் பாடல், திருவாசகப் பாடல் முதலிய பழந்தமிழ்ப் பாடல்கள், திருப்புகழ், குற்றாலக் குறவஞ்சி, வள்ளலார் பாடல்கள், தியாகராசர் கீர்த்தனைகள், இசுலாமிய, கிறித்தவச் சமயங்களின் புகழ்பெற்ற பாடல் மெட்டுகள், திரைப்படப் பாடல் மெட்டுகள், மக்கள் பாடல் மெட்டுகள் முதலியவற்றில் பாவாணர் இசைப்பாடல்களை இயற்றியுள்ளார். பாரதியார் பாடல்களான, “பொழுது புலர்ந்தது”, “வந்தே மாதரம்”, “பாருக்குள்ளே நல்ல நாடு”, “ஓடி விளையாடு பாப்பா”, “தீராத விளையாட்டுப் பிள்ளை”, பாரதிதாசனின், “துன்பம் நேர்கையில் யாழெடுத்து”, “தலைவாரிப் பூச்சூட்டி உன்னை”, “இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்” முதலிய மெட்டுகளிலும் பாவாணரின் இசைப்பாடல்கள் அமைந்துள்ளன. பல்வேறு பண், தாளம் குறிப்பிடப்பட்டு அவ்வவ்வமைப்பில் பாடல்கள் இயன்றுள்ளன. பாவாணர் இசைப்பாடல்களில் யாப்பு நிலைத் தனித்தன்மையாகச் சரணப் பகுதிகளில் வழக்கமாகப் பெரிதும் இடம்பெறும் கண்ணி, சிந்து அமைப்புகளோடு கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம், வஞ்சித்துறை முதலிய வடிவங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பாவாணரின் யாப்பாய்வு**

சொல்லாராய்ச்சிக் களத்தில் முக்குளித்து அரிய நித்திலங்களைத் தமிழுக்கு வாரி வழங்கிய பாவாணர், அருகிய நிலையிலேயே யாப்பியல் ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். “பாவினம்” என்னும் தலைப்பில் விரிவான ஓர் ஆய்வுக் கட்டுரையைப் பாவாணர் படைத்திருக்கின்றார். தொல்காப்பியத்தில் இடம்பெறாத பா வடிவங்கள் பாவினம் ஆகும். சிலப்பதிகாரக் காலந்தொட்டுப் பெருஞ்செல்வாக்குப் பெற்ற வடிவங்களாகவும் இவை விளங்குகின்றன. பாவின வடிவங்களுள் முதன்மையானதாக விருத்தம் அமைகின்றது. விருத்தம் என்னும் யாப்பு வடிவம் தமிழில் இருப்பதனைப் போலவே வடமொழியிலும் உள்ளது. விருத்தம் என்னும் பெயர் வடமொழிப் பெயராக விளங்குகின்றது. விருந்து என்னும் சொல்லடியாக விருத்தம் என்னும் சொல் தமிழே என்பாரும் உளர். இவற்றை எல்லாம் மனங்கொண்டு பாவினம் குறித்து விரிவான ஆய்வைப் பாவாணர் நிகழ்த்தியுள்ளார்.

பாவினங்கள் வடமொழி யாப்பு வழிப்பட்டன என வழங்கும் கருத்து எத்துணை உண்மையென ஆராய்வதை நோக்கமாகக்கொண்டு இவ்வாய்வைப் புரிவதாகப் பாவாணர் குறிப்பிட்டு ஆய்வை நிகழ்த்தியுள்ளார். “துறை, தாழிசை, விருத்தமென்னும் மூவகைப் பாவினங்களுள் விருத்தமொன்றே வடமொழிப் பெயரால் வழங்குவதாகும். அதூஉம் பெயரான்மட்டும் வடமொழியேயன்றி யாப்பானன்று” (தமிழ்ப் பொழில், ப. 121) எனத் தெளிவுபடுத்தியுள்ளார். பாவினத் தோற்றத்திற்கான காரணத்தை, “ஒரு

மொழியானது காலஞ் செல்லச்செல்ல, அவ்வக் காலத்து மக்கள் இயல்பிற்கும் அறிவிற்கு மேற்றவாறு இலக்கியத்தினும் இலக்கணத்தினும் திரிதல் இயல்பே. அங்ஙனம் தமிழ்யாப்பும் சங்ககாலத்தில் பாவாயிருந்து பிற்காலத்தில் பாவினமாகத் திரிந்தது" (மேலது, ப. 122) எனத் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும், பாவினங்கள் அனைத்தும் கலிப்பாவினின்றே தோன்றியதாகக் கருத்துரைத்து அதற்கான காரணங்களை விளக்கியுள்ளார். விளக்கங்களின் நிறைவில் "ஆகவே துறை, தாழிசை, விருத்தமென்னும் மூவகைப் பாவினமும் கலிப்பாவானமை பெறப்பட்டது" என முடிபுரைக்கின்றார். பாவினம் மூன்றும் தமிழ் யாப்பே என்பதனையும், விருத்தம் என்னும் சொல் வழக்குக் குறித்தும், பாவினத் தோற்றம், விருத்தத்தின் பேராட்சி குறித்தும் பாவாணரின் பின்வரும் கூற்று பாவின ஆய்வு வரலாற்றில் முதன்மைநிலையில் கருதத்தக்கதாக அமைகின்றது.

> "இதுகாறுங் கூறியவாற்றால், பாவின மூன்றுந் தமிழ்யாப்பே யென்றும், அவை கொச்சகக்கலியின் திரிபென்றும், பின்னூலார் அவற்றைப் பன்னிரு பாவினமாகப் பகுத்துக்காட்டினரென்றும் சாலை, பண்ணை முதலிய தமிழ்ச் சொற்கள் மறைந்து ரோட்டு (இங்கிலீஷ்), ஜமீன்தார் (இந்துஸ்தானி) முதலிய அயற்சொற்கள் வழங்கினார்போல, மண்டிலமென்னும் தென்சொல் மறைந்து விருத்தமென்னும் வடசொல் வழங்கிற்றென்றும், இலக்கணம் நிரம்பிய பாவியற்றும் அருமை நோக்கிச் சங்க காலத்திற்குப் பின்னோர் எளிய யாப்பான இனங்களை யியற்றினரென்றும் அவற்றுட் சிறப்புப்பற்றி மண்டில யாப்புப் பெருவழக்காயிற்றென்றும் தெள்ளிதின் அறிந்துகொள்க." (மேலது, ப. 131)

மேலும், இவ்வாய்வுரையுள் தமிழ் யாப்பினையும் ஆங்கிலமொழி யாப்பினையும் இணைத்தெண்ணி "ஆங்கில யாப்புப் பலவகைப் பாக்கூறுமேனும் தமிழ்போல அத்துணைப் பரந்துபட்டதன்று" (தமிழ்ப் பொழில், ப. 121) எனக் கூறுதலும் மனங்கொள்ளத்தக்கதாக அமைகின்றது. தமிழ் யாப்பின் பா வடிவங்கள், பாக்கள், பாவினங்கள், இனவினங்கள் என முப்பெரும் பகுப்பில் அமைகின்றன. இவற்றுள் விவாதங்களுக்கு இடமான பாவினம் குறித்த ஆராய்ச்சிக் களத்தில் முன்னோடி நிலையில் பாவாணரின் இவ்வாய்வு அமைந்து தெளிவையும் புதிய ஒளியையும் வழங்குகின்றது. மேலும் எண்ணத்தக்க கூறுகளையும் கொண்டுள்ளது.

மேலும், தமது 'தமிழும் திராவிடமும் சமமா?' என்னும் கட்டுரையுள் ஆரியச் சார்பற்ற அருந்தமிழ் நூல்களை நிரல்படுத்துகையில் தொல்காப்பியச் செய்யுளியலில் இடம்பெற்ற யாப்பியல் வடிவங்களை மனங்கொண்டு, "அறுவகைப்பாவும் அவற்றின் வேறுபாடுகளும், "பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே, அங்கதம் முதுசொல்" என்னும் எழுநிலை யாப்பும், வாழ்த்துவகையும் பண்ணத்தியும் இருபது வண்ணமும், எண்வகை வனப்பும் நூற்றுக்கணக்கான அகப்பொருள் புறப்பொருட் டுறைகளும் ஆகியவற்றிற்குரிய பண்டை யிலக்கியமும், ஆரியச்சார்பற்ற அருந்தமிழ் நூல்களே" ('தமிழியற் கட்டுரைகள்', பாவாணர் தமிழ்க் களஞ்சியம்-43, ப. 24) எனக் குறிப்பிட்டுள்ளமை உள்ளிட்ட பல கூற்றுகள் செய்யுளியலைக் களமாகக்கொண்டு பாவாணரால் மொழியப்பட்டுள்ளன என்பதும் எண்ணத்தக்கது.

## நிறைவு

தனித்தமிழ் இயக்கம், சொல்லாராய்ச்சித்துறை ஆகியவற்றில் முதன்மையாகக் கருதப்படும் பாவாணர் யாப்பியலில் குறிப்பிடத்தக்க நிலையில் யாப்பு வடிவ வல்லார் குறித்த மதிப்பீடு, தமிழ் யாப்பின் கூறுகளைப் பாடல்கள் வாயிலாய்ப் போற்றல், தேர்ந்த திறத்துடன் யாப்பு வடிவங்களை ஆளுதல், பாவின ஆய்வு எனப் புரிந்துள்ள பங்களிப்புகள் பாவாணரின் பிறிதொரு பரிமாணத்தை நமக்கு உணர்த்துகின்றன. அவை யாப்பியல் துறையினரின் கவனத்திற்குரியனவாகவும் அமைகின்றன.

## துணைநூற்பட்டியல்


1. இசைத்தமிழ்க் கலம்பகம், ஞா. தேவநேயப்பாவாணர், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு: 2000.
2. திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு: பராபவ-ஆவணி.
3. பாவாணர் தமிழ்க்களஞ்சியம்-10, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, மறுபதிப்பு: 2009.
4. பாவாணர் தமிழ்க்களஞ்சியம்-36, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, மறுபதிப்பு: 2009.
5. பாவாணர் தமிழ்க்களஞ்சியம்-43, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, மறுபதிப்பு: 2009.
6. யாப்பு நூல், த.ச. தமிழன், தமிழன் பதிப்பகம், திருவாரூர், இரண்டாம் பதிப்பு: 1995.


## இதழ்



1. தமிழ்ப் பொழில், சீமுக - ஆடி.


●


**கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.**

கட்டுரை

"என்னோடு பணிபுரியும் ராமச்சந்திரன் என்பவரை வருகின்ற ஞாயிறன்று நான் பதிவுத் திருமணம் செய்து கொள்ள நிச்சயித்து விட்டேன். நான் விதவை என்பது அவருக்குத் தெரிந்தது தான். ஆறுமாத காலமாய் நான் எனது உணர்ச்சியோடு போராடித் தான் இம்முடிவுக்கு வந்தேன்.



# ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வாதாரம்

ஆர்.பிரமிளா
&
முனைவர் கோ.சுரேஷ்

தொடக்கக் காலத்தில் ஜெயக்காந்தனின் எழுத்துக்கள் தத்துவ நோக்கத்தை ஆராயும் விதத்தில் அமைந்தது.

'சரஸ்வதி' எனும் இதழில் வெளியான அவருடைய கதைகள் பாலுணர்ச்சி குறித்துப் பேசுவதாக வெளிவந்தது. அதற்குத் தக்கச் சான்றுகளாக 'கண்ணம்மா, போர்வை, சாளரம், தாம்பத்தியம், தர்க்கம்' போன்ற கதைகளைச் சொல்லலாம். இவைகள் பேசும் பொருளாக அமைந்தது என்றாலும் மக்கள் விரும்பத்தக்க வகையில் அமையவில்லை எனலாம். அதற்கடுத்து வந்த காலக்கட்டத்தில் அவர் தம் எழுத்துக்களை மக்கள் விரும்பும் வகையில் அமைத்துக் கொண்டார். ஜெயகாந்தன் அவர்கள் ஆரம்பக் காலத்தில் சிறுகதைப் படைப்பதிலேயே மிகுந்த ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்திருக்கின்றார். 1958-ஆம் ஆண்டு 'ஒரு பிடி சோறு' என்ற அவருடைய முதல் சிறுகதைத் தொகுதி வெளியானது.

விந்தனின் தமிழ்ப் பண்ணைப் பதிப்பகம் அதனை வெளியிட்டது. எழுத்தாளர் தி.ஜானகிராமன் அவர்கள் அத்தொகுப்பிற்கு முன்னுரை வழங்கியதும், கண்ணதாசன் அவர்கள் புகழாரம் சூட்டியதும் அந்நூலிற்கு மேலும் பெருமை சேர்த்தது எனலாம். அதன்பிறகு தொடர் சிறுகதைகளை வெளியிட்டுச்

‘சிறுகதை மன்னன்' என்றும் பாராட்டும் அளவிற்கு சிறுகதைப் படைப்புகளில் தன் திறமையை வெளிக்கொணர்ந்தவர். தமிழ்நாட்டில் இன்று வரை தோன்றியுள்ள மிகச்சிறந்த எழுத்தாளர்களுள் ஜெயகாந்தனும் ஒருவர் என்று கு.அழகிரிசாமி குறிப்பிட்டுள்ளார். ஆனால் காலம் செல்லச் செல்ல ஜெயகாந்தன் சிறுகதை எழுதுவதைக் குறைத்துக் கொண்டு நாவல் மற்றும் குறுநாவல்கள் படைப்பதில் ஆர்வம் காட்டலானார். இருப்பினும் அவரது சிறுகதைகள் இன்றும் அவர் புகழ்பாடிக் கொண்டிருக்கின்றன.

ஜெயகாந்தன் 17 சிறுகதைத் தொகுதிகளையும், 25-க்கும் மேற்பட்ட குறுநாவல்களையும், 17 நாவல்களையும், 25 கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

### ஜெயகாந்தன் பெற்ற பரிசுகளும், விருதுகளும்:

1964 இல் ஜெயக்காந்தனின் ‘உன்னைப் போல் ஒருவன்' திரைப்படம் இந்திய ஜனாதிபதி விருதைப் பெற்றது. 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவல் 1972 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருதைப் பெற்றது. 1978 இல் அந்நாவல் திரைப்படமாக வெளிவந்த போது சிறந்த திரைக்கதைக்கான தமிழக அரசின் விருதினைப் பெற்றது. அதே ஆண்டு அவரது 'இமயத்துக்கு அப்பால்' என்ற நாவல் சோவியத்நாடு நேரு விருதினைப் பெற்றது. 1979-ஆம் ஆண்;டு 'கருணை உள்ளம்' என்ற திரைப்படம் சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த கதைக்கான தமிழ்நாடு அரசு விருதினைப் பெற்றது. 1986 இல் 'ஜெய ஜெய சங்கர்' எனும் நாவல் தமிழ்நாடு அரசின் சிறந்த நாவலுக்கான விருதையும், சுந்தரகாண்டம் எனும் நாவல் தமிழ் பல்கலைக்கழகத்தின் இராஜராஜ சோழன் விருதையும் பெற்றார்.

2005-ஆம் ஆண்டில் இந்திய இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருதான ஞானபீட விருது இவருக்குக் கிடைக்கப்பெற்றது. தமிழ்நாட்டில் அகிலனுக்குப் பிறகு இவ்விருதைப் பெறும் சிறப்புக்குரியவராகத் திகழ்பவர் எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள். இவ்வாறு தமிழக அளவிலும் இந்திய அளவிலும் ஆசிய அளவிலும் பல பல விருதுகளைப் பெற்றுள்ளமைப் போற்றுதலுக்குரியதாகும். 1980, 1983, 1984 ஆம் ஆண்டுகளில் சோவியத் ரஷ்யா அழைப்பின் பேரில் ரஷ்யப் பயணம் மேற்கொண்ட சிறப்பும் இவருக்கு உண்டு.

### பத்திரிகைத் தொடர்பு:

ஜெயகாந்தனும் முதன் முதலில் சிறுகதை ஆசிரியராக இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த போது தமிழ்ப் பத்திரிகைகள் தான் அவரை வரவேற்றது. சுதந்திரப் போராட்டக் காலக் கட்டத்திலும் அதற்குப் பின்னரும் தொடர்ந்து பல இலக்கியப் பத்திரிகைகள் தோன்றி தனது இலக்கியத் தொண்டை செவ்வனே புரிந்து வருகின்றன. அவ்வகையில் ‘மணிக்கொடி' எனும் பத்திரிகை இதழுலகில் தனக்கான முத்திரையைப் பதித்தது குறிப்பிடத்தக்கதாகும். ‘சரஸ்வதி' எனும் பத்திரிகையும் ஜெயகாந்தனுக்கு இலக்கியப் பணிபுரிய முதன்முதலாக வித்திட்ட களம் ஆகும். சௌபாக்கியம், தாமரை, சாந்தி, கல்வி, ஆனந்த விகடன், தினமணிக்கதிர் போன்ற பல பத்திரிகைகளிலும் தனது தொடர் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.


### பெண்களின் நிலை:

நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களே விளிம்புநிலை மக்கள் ஆவர். அவர்களின் வாழ்க்கை என்பது அடுத்த வேளை உணவிற்கே அல்லல்படும் சூழலமைந்ததாகும். ஒண்டு குடிசையில் வாழ்வு, ஒரு வேளை கஞ்சிக்காக நாள் முழுவதும் உழைக்கும் அவலம் இத்தகைய வாழ்க்கை வாழும் மக்களிடமும் கூட்டுக்குடும்பமாக சேர்ந்து வாழும் பண்பு உள்ளது. கணவன், மனைவி, குழந்தைகள், தாத்தா, பாட்டி என அதிக உறுப்பினர்களுடன் வாழும் குடும்ப வாழ்வு போராட்டக்களமாய் அமைந்திருப்பதை ஜெயகாந்தனின் சிறுகதைகளுள் சில விளக்குகின்றன.

### விளிம்புநிலை

மக்களின் குடும்பவாழ்க்கையைச் சித்தரிக்கும் சிறுகதையாக 'ஒரு பிடி சோறு' எனும் சிறுகதை அமைகின்றது. ராசாத்தியும் அவள் மகன் மண்ணாங்கட்டி ஆகிய இருவர் மட்டுமே அவரது குடும்ப உறுப்பினர்கள் ஆவர். கூலி வேலை செய்யும் ராசாத்தி வேலை இல்லாத நாட்களில் விலைமகளாக இருக்கிறாள். குடிசையில் நடக்கும் இவர்களது வாழ்க்கை ஒரு வேளை உணவுக்கே துன்பப்படும் அளவில் உள்ளது. விறகு சுமப்பது சுமைகளை லாரியிலிருந்து ஏற்றுமதி, இறக்குமதி செய்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள். இவையும் கிடைக்காதபோது சாப்பாட்டுக்காக விபச்சாரம். இவ்வாறு வாழ்க்கை நடத்தும் குடிசை வாசிகளான இம்மக்களிடமும் உதவும் மனநிலை, மனிதநேய உணர்வு, கருணை போன்றவை இருப்பதைச் சித்தரித்துக் காட்டுகிறது.

விலைமகளுக்கு எப்பொழுதுமே ஓய்வு இல்லை. பசியோடும் அதனால் களைத்த உடலோடும், விபச்சாரத்திலும் ஈடுபடவேண்டிய அவலம்.




ஜெயகாந்தன் தனது சிறுகதையில் செல்வச் செழிப்புள்ள பணக்காரக் குடும்பங்களையும், அவற்றில் உறுப்பினராக இருக்கும் பெண்களையும் பாத்திரங்களாகப் படைத்துள்ளார். இப்பெண்கள் நாகரிக மாற்றங்களின் வளர்ச்சியையும் பண்பாட்டில் பொருளாதாரத்தினால் ஏற்படும் சிதைவுகளையும் உணர்த்துபவர்களாகக் காட்சியளிக்கின்றனர்.

சீதாராமன், மதுரம் தம்பதிகள் இரண்டு பெண் குழந்தைகள் என ஓர் அன்பான குடும்பமாக கதை தொடங்குகிறது. கணவன் மீது மதுரத்திற்கு அவ்வளவு அன்பு. சீதாராமனுக்கு ஓர் முறை அலுவலகத்தில் போடப்பட்ட நாடகக்குழுவில் கதாநாயகனாக இருந்தார். அதனாலும், தனக்கு இளமையும் அழகும் இருப்பதாலும், எப்போதும் ஆணழகன் என்ற செருக்குடன் இருப்பவர். வீட்டில் அனைத்துப் பணிகளையுமே மதுரமே செய்தாள். கணவனின் அழகும் மற்றவர் அவனைப் பற்றி புகழும் கருத்துக்களும் அவளுக்கு மிக இனிமையானது.

சீதாராமனோ தன்னுடன் கதாநாயகியாய் நாடகத்தில் நடித்த கமலாவிடம் தவறாகப் பழகுகின்றான். அவள் கர்ப்பம் அடைகிறாள். சீதாராமனின் மனதில் வீட்டு நிர்வாகத்தைப் பார்த்துக்கொள்ள இரண்டு மடங்கு ஊதியம் பெற எண்ணி கமலாவை திருமணம் செய்ய மதுரத்திடம் பேசி அவளின் அனுமதியைப் பெறத் திட்டமிடுகிறான். கமலா மூலம் உண்மையை அறிந்த மதுரம் கணவனை வெறுத்து விலகுகிறாள். தன் பெற்றோர் தனக்கு கொடுத்த வீடு ஒன்றே போதுமானது என்ற முடிவில் இத்தனை நாளும் கணவன் காட்டிய அன்பு எல்லாம் பொய் என்பதை அறிந்து மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிறாள்.

இச்சிறுகதையில் இடம்பெற்றுள்ள மதுரம் என்ற பெண் பண்பாட்டுடன் வாழ்பவள். கணவனை உயிராக நினைப்பவள். ஆனால் அவன் தனக்குத் துரோகம் செய்ததை அறிந்ததும் இனி அவன் தேவையில்லை எனத் தெளிவாக முடிவெடுப்பதும், தனித்து வாழ முற்படும் தன்னம்பிக்கையோடு இருப்பதும் மதுரத்தின் மன உறுதியை, தன்னம்பிக்கையைக் காட்டுகின்றது. இச்சிறுகதையில் மதுரத்தின் தெளிந்த அறிவால் சிந்தனையையும் அறிய முடிகின்றது. 'மதுரம்' என்ற பெண் பாத்திரம் அடிப்படைக் கல்வியை உடைய நடுத்தரப் பெண்ணாகவும், மன உறுதியுடன் தெளிவாக முடிவெடுப்பவளாகவும் படைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவளுக்கு வாழ்வாதாரம் தேட வேண்டியுள்ள அவசியம். எந்நிலையிலும் பாதிப்பு அடைபவர் பெண்களே. ஆகையால் பெண் என்பவள் திருமணத்திற்கு முன் எவரையும் எதிர்பார்க்காமல் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். தனது தனித்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். திறமை என்பது கைத்தொழில், கல்வி, சுயதொழில் போன்றவற்றில் தன்னுடைய திறமையை முழுவதும் பயன்படுத்த வேண்டும்.

ஜெயகாந்தனின் 'யுகசந்தி' எனும் கதையில் ஆசிரியையாகத் தொழில் செய்யும் “கீதா” என்ற பெண் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. கீதா இளம் விதவை, மறுமணம் செய்து வைக்காமல் வைதீக குடும்பத்தின் வழக்கப்படி மொட்டை அடித்து, வெள்ளைப் புடவை கட்ட வேண்டிய கீதாவை அவளது பாட்டி ஆசிரியை பயிற்சி வகுப்பில் படிக்க வைக்கிறாள். படித்து ஆசிரியை ஆனபின் தன்னம்பிக்கை உடையவளாக மாறுகின்றாள். கௌரிப்பாட்டியின் உதவியால் தந்தையின் அனுமதியுடன் ஆசிரியையாகப் பணியாற்றும் கீதா தன்னுடன் பணியாற்றும் ஹிந்திபண்டிட் ராமச்சந்திரனை மறுமணம் செய்து கொள்கிறாள்.

### தொழில் தரும் நம்பிக்கை:

விதவையான கீதாவிற்கு ஆசிரியர் தொழிலும், கல்வியும் தன்னம்பிக்கையைத் தருகிறது. காலங்காலமாகச் சமுதாயத்தில் விதவைப் பெண்களுக்கென்று விதிக்கப்பட்டிருந்த கட்டுக்களை உடைத்து வெளியேறுகிறாள்.

“என்னோடு பணிபுரியும் ராமச்சந்திரன் என்பவரை வருகின்ற ஞாயிறன்று நான் பதிவுத்

*திருமணம் செய்து கொள்ள நிச்சயித்து விட்டேன். நான் விதவை என்பது அவருக்குத் தெரிந்தது தான். ஆறுமாத காலமாய் நான் எனது உணர்ச்சியோடு போராடித் தான் இம்முடிவுக்கு வந்தேன். உணர்வுப்பூர்வமான வைதவ்ய விரதத்திற்கு ஆட்பட முடியாமல் வேஷங்கட்டித் திரிந்து பிறகு அவப்பேருக்கு ஆளாகிக் குடும்பத்தையும், அவமானப்படுத்தாமல் இருப்பதே சிறந்த ஒழுக்கம் என்று உணர்ந்திருக்கிறேன். இந்த முப்பது வயதில் இந்த அளவு சோதனைகளையே தாங்காமல் இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பின் இதே முடிவுக்கு வர நேரிடுமோ என்ற அச்சமும் பிறந்ததே. அதான் இப்போதே சரி என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். என் காரியம் என்னைப் பொறுத்த வரைக்கும் சரியானதே!"*

*- (ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி2) - யுக சந்தி, ப.எண்: 114)*

*என்ற உரையாடல் வழி கீதாவின் தெளிவான சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளன. இந்து சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து வரும் பிராமணக் குடும்பத்திலிருந்து வந்த விதவைப் பெண் வாழ்க்கை பற்றிய தெளிவினைப் பெற்று பெற்றோர் மறுப்பார்கள் என்ற போதிலும் தனது எதிர்கால வாழ்க்கையை இப்படித்தான் அமைத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிப்பதை இச்சிறுகதை நிகழ்வு உணர்த்துகின்றது. இப்பெண்ணின் துணிவான முடிவிற்கு அவள் பெற்ற கல்வியும் யாரையும் நம்பி வாழாமல் தனது ஊதியத்தில் வாழ முடியும் என்ற நம்பிக்கையைத் தந்த ஆசிரியைத் தொழிலும் காரணமாக இருப்பதை அறிய முடிகின்றது. இளம் விதவைகளாக இருக்கும் பெண்கள் வீட்டில் முடங்கிக் கிடந்து சீரழியும் நிலையை மாற்றக்கருதும் கீதாவின் ஆற்றல் தெளிவுபடுத்துகிறது.*

**மக்கள் தொடர்புச் சாதனங்கள்**

*பெண்களின் வாழ்வாதாரம் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும் அமைகிறது என்பதை 'இருளைத்தேடி' எனும் சிறுகதை காட்டுகிறது. மக்கள் தொடர்புச் சாதனம் நுகர்வு மோகத்தை அதிகரித்து இளம் பெண்களின் மனதைக் கெடுப்பதையும் பத்திரிகை நடத்துபவர்கள் பெண்ணை வியாபாரக் கருவியாக்கிப் பணம் சம்பாதிப்பதையும், அதன் மூலம் அவருடைய வாழ்வாதாரம் அமைகிறது என்பதைக் காட்டுகிறது. இன்றைய நவீன உலகத்தில் விளம்பரப்படங்கள், ஓவியம், சிற்பம் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில்களில் மாடலிங்காக தொழில் செய்து வாழ்க்கை வாழும் பெண்களும் காணப்படுகின்றனர்.*

*இதில் வருவாய் இருப்பதால் தன்மானத்தை கூடப் பெரிதாய் கருதாமல் இத்தொழிலை மேற்கொள்ளும் பெண்ணாக 'ருக்கு' எனும் பாத்திரம் வலம் வருகிறது. வறுமை காரணமாக தன்மானத்தை ஒரு உயர் மதிப்பாகக் கருதாமல், விலைப் பொருளாகப் பாவித்து தொழில் செய்து வாழும் பெண்களுள் மாடலிங் பெண்களும் உள்ளனர். இருப்பினும் பெருமைக்காகவும், புகழுக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும், அழகுக் குறித்து மற்றவர் பாராட்ட வேண்டும் என்ற தற்புகழ்ச்சிக்காகவும், மாடலிங் செய்து வாழும் பெண்களும் உள்ளனர்.*

**முடிவுரை**

*விளிம்புநிலை பெண்களுக்கு வாழ்வாதாரமே ஆண்களை நம்பி இருப்பதாகும். அந்த ஆண் நம்பிக்கை துரோகம் செய்யும் பொழுது பெண்கள் அவ் ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் தவிக்கின்றனர். அதிலிருந்து மீண்டு பெண்கள் வாழ, கல்வியோ, சொத்துக்களோ, வேலையோ போன் ஆதாயம் தேவைப்படுகிறது. இல்லையெனில் ஏதேனும் ஒரு தொழில் செய்து பிழைக்க வேண்டிய சூழ்நிலை அமைகிறது. குறிப்பாக விபச்சாரம், மக்கள் தொடர்பு சாதனம் மூலம் மானத்தை விற்றும் வாழ வேண்டியுள்ளது.*

**துணைநூற்பட்டியல்**


1. *ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி1) - ஒரு பிடி சோறு - கவிதா, பப்ளிகேஷன் - சென்னை - 017 - ஏழாம் பதிப்பு ஆகஸ்ட் 2019*
2. *ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி2), ஹீரோவுக்கு ஒரு, ஹீரோயின் - கவிதா பப்ளிகேஷன் - சென்னை - 017 - பதிப்பு*
3. *ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி2) - இருளைத் தேடி - கவிதா பப்ளிகேஷன் - சென்னை - 017 - பதிப்பு*
4. *ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி 2), யுக சந்தி, கவிதா பப்ளிகேஷன் - சென்னை - 017 - ஏழாம் பதிப்பு ஆகஸ்ட் 2019*


●


**ஆர்.பிரமிளா**

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வி.எல்.பி ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவைப்புதூர், கோயம்புத்தூர்.

**முனைவர் கோ.சுரேஷ்**

நெறியாளர் & இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்
தலைவர் வி.எல்.பி ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, கோவைப்புதூர், கோயம்புத்தூர்.

கட்டுரை









# எஸ். அர்ஷியாவின் படைப்புலகம்

ரா.ரமேஷ்
சே.பாலகிருஷ்ணன்

மதுரை இஸ்மாயில்புரத்தில் பிறந்த எஸ்;.அர்ஷியா, உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். இவரது இயற்பெயர் சையத் உசேன் பாஷா. இவரது காலம் 14.4.1959 - 7.4.2018 ஆகும். இவரது தந்தை சையத் தாவூத், தாயர் ஆபில்பீ ஆவர். மூன்று ஆண்களும் நான்கு பெண்களும் இவரது உடன்பிறந்தோர் ஆவர். அர்ஷியாவின் துணைவியார் பெயர் அமீர்பேகம் ஆகும். இவர் தனது மகளின் பெயரான - அர்ஷியா என்பதையே எழுத்துலகில் தமது புனைபெயராகக் கொண்டு எழுதியவர்.

அர்ஷியாவின்; முதல் படைப்பு ~அது இலக்கியம் தானா? என்ற சிறுகதையாகும். இச்சிறுகதை ஆனந்த விகடனில் வெளியாகியுள்ளது. மதுரை தியாகராசர் கல்லூரியில் முதுகலை படித்து முடித்தபின் தராசு வார இதழில் செய்தியாளராகப் பணியாற்றினார். பின்னர் 'புதிய காற்று' என்னும் இலக்கிய இதழின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றியுள்ளார். மேலும், கணையாழி, செம்மலர், தாமரை போன்ற இடதுசாரி கருத்துக்களைக் கொண்ட இதழ்களில் இவருடைய சிறுகதைகள் பல வெளிவந்துள்ளன. சுற்றுப்புறத்தைப் பார்ப்பதிலிருந்தும், அதிலிருந்து கேட்கும் குரல்களிலிருந்தும், தகுதியை மேம்படுத்தி வளர்ப்பதே படைப்பாளனாக்கியது. மேலும், யாரும் ஆர்வத்தைத் தூண்டி எழுத வைக்க முடியாது. நம்மைப் பாதித்த விடயம் மனதிற்குள் தங்க மறுத்து, 'வெளியே சொல்' என்று உந்தி அதை வடிவுபடுத்தும்போது தான் ஒரு கவிஞனோ, ஒரு எழுத்தாளனோ பிறக்கிறான். அவனுடைய அனுபவங்களே கதைகளின் கருக்கள். எல்லாக் கதைகளிலும் அனுபவம்

கதை மாந்தர்களின் வடிவில் இருக்கிறது[3] என்று அர்ஷியா கூறுகிறார்.

ஏழரைப் பங்காளி வகையறா (2016) நாவல் மூலம் தமிழ் வாசகப் பரப்பில் கவனம் பெற்ற இவர், அப்பாஸ்பாய் தோப்பு (2011), பொய்கைக் கரைப்பட்டி (2016), கரும்பலகை (2014), அதிகாரம் (2016), சொட்டாங்கல் (2016), நவம்பர் 8, 2016 (2016) ஆகிய ஏழு புதினங்களையும் கபரஸ்தான் கதவு (2011), மரணத்தில் மிதக்கும் சொற்கள் (2014) முதலான இரு சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். மேலும், ஒரு புனைவாளராக மட்டுமின்றி வரலாற்றின்மீது அக்கறை கொண்டவராகவும் வரலாற்று நூல்கள் எழுதுபவராகவும் வரலாற்று நூல்களை மொழிபெயர்ப்பவராகவும் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார். குறிப்பாக, இவருடைய மொழிபெயர்ப்புகளான மதுரை நாயக்கர் வரலாறு (ஆர். சத்தியநாதய்யர் எழுதிய ஹிஸ்ட்ரி ஆப் மதுரை நாயக்) நிழலற்ற பெருவளி, திப்பு சுல்தான், பாலஸ்தீன், பாலைவனப்பூ, கோமகட்டுமாரு ஆகியவை குறிப்பிடத்தக்கன.

தொடக்கத்தில் சிறுகதைகள் எழுதி வந்தாலும் பின்னர் தனித்துவம் மிக்க நாவல்களை எழுதியவர் அர்ஷியா இந்த நாவல்களின் வாயிலாக வெளிப்படும் இஸ்லாமியர்களின் வாழ்வியலையும் அவர்தம் வரலாற்று பங்களிப்பையும் புனைவாக்கியது இவருடைய பெரும் பங்களிப்பாக அமைந்துள்ளது எனலாம். சமகாலத்தில் சிறுபான்மைச் சமூகங்களின் மீது நடத்தப்படும் தாக்குதல்களில் இருந்து அம்மக்களை காக்க வேண்டிய சமூகச்சூழலில் வெறுப்புக்குப் பதிலாக இணக்கமான உரையாடலுக்கானவையாக அமைந்திருப்பவை அர்ஷியாவின் படைப்புகள் ஆகும். 'ஏழரைப் பங்காளி வகையறா' என்னும் நாவல், அதுவரை தமிழ்ச் சமூகத்தில் பெரிதும் பேசப்படாத எண்ணிக்கைச் சிறுபான்மையினராகவும், தனித்த வாழ்வியல் மற்றும் பண்பாடுகளைக் கொண்டு விளங்கும் உருது முஸ்லீம் மக்களின் அன்றாட வாழ்வியலையும் சடங்கு முறைகளையும், வரலாற்றுப் பாங்கான நாவலாக விவரித்துக் காட்டுகிறது.

மதுரை இஸ்மாயில்புரத்தில் வாழும் உருது மொழி பேசுகிற இஸ்லாமியரில் ஒரு குறிப்பிட்ட வகையறாக்களின் வரலாற்றை இந்நாவல். நேரடியாக இறந்த காலத்திலிருந்து தொடங்கி சமகாலத்திற்கு வருகிறது. ஏழரைப் பங்காளி வகையறாக்களின் மூலத்தந்தை இஸ்மாயில். அவரிலிருந்து கதை தொடங்குகிறது. இஸ்மாயில் எப்படி மதுரைக்கு வந்தார் என்று தெரியாது. ஹைதர் அலி ஆட்சி செய்த காலத்தில் குதிரை வீரராக வந்து தங்கியிருக்கலாம்: வந்த இடத்தில் ஒன்றிவிட்டார். உள்ளூர்க்காரர்கள் இவருடைய மொழி பற்றியோ, மதம் பற்றியோ பொருட்படுத்தாமல் வசதி செய்து கொடுத்திருந்தனர். ஊரில் பெரிய கௌரவத்தோடும், சொத்துக்களோடும் வாழும் இவருக்கு ஊர்க்காரர்கள சைவப் பிள்ளைமார்ப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கின்றனர். இதன்மூலம் இவருக்கான குடும்பம் உருவாகி, தலைமுறை வரிசை ஒன்று உற்பத்தியாகிப் பெருகுகிறது. இவருக்கு ஏழு ஆண்பிள்ளைகள். ஒரு பெண்பிள்ளை என எட்டுப் பிள்ளைகள் பிறக்கின்றனர். சொத்தை இரண்டாகப் பிரித்து சரிபாதியை மகளுக்கும் மீதமிருக்கும் பாதியை ஏழு பங்குமாக்கி அதனை ஏழு ஆண்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறார். அரைப்பங்கு மீதியை ஏழாகப் பிரித்துக் கொடுத்த காரணத்தினால் 'ஏழரைப் பங்காளி வகையறாவாக' சையத் இஸ்மாயிலின் பரம்பரை பெயர்க்காரணம் பெறுகிறது.

அப்பாஸ்பாய் தோப்பு எனும் நாவல் வழியே மதுரை வைகை ஆற்றங்கரையோரத்தில் வசிக்கும் பலவகையான மனிதர்கள் அவர்கள் குணநலன்கள், விளிம்பு நிலை மக்களின் துயரங்கள் பதிவு பெறுகின்றன. பலவகையான மரங்கள் வாழும் அல்லது மரங்கள் அடர்ந்த பகுதியை நாம் தோப்பு என்கிறோம். இவ்வாறான தோப்பைப் போலவே ஒபுளாபடித்துறை செல்லும் சாலையில் வைகையின் தென்கரையில் அப்பாஸ்பாய் தோப்பு அமைந்திருக்கிறது. அப்பாஸ்பாய் தோப்பு முழுக்க வெவ்வேறு குணங்களைக் கொண்ட பல்வேறு மனிதர்கள், வாழ்கிறார்கள். இஸ்மாயில்புரத்துக்குப் பின்னால் அப்பாஸ்பாய் தோப்பு போல பல தோப்புகள் இருக்கின்றன. ஏழரைப் பங்காளி வகையறாவில் ஏழையானவர்களில் சிலரும் அவர்களைச் சார்ந்த பிற சமூகத்தவருமாக இத்தோப்பில் இருக்கின்றனர். வெள்ளப்பெருக்கால் கரையோரங்கள் சேதப்படாமலிருக்க சாலைகள் போட்ட போது, அப்பாஸ்பாய் தோப்பும் அதில் பாதி காலியாகிறது. அந்தச் சாலை வருவதற்கு முன் அங்கு வாழ்ந்த மக்களின் கதையை வரைந்து போகிறது இந்நாவல். அதாவது, அப்பாஸ்பாய் தோப்புக்குள் வாழும் இருநூறுக்கும் மேலான குடும்பங்களின் கதை இது.

அதிலும் தோப்பு மாந்தர்களாகச் சித்திரிக்கப்பெறும் உசேன், நெக்லஸ்காரம்மா, ரோசாப்பூ பாய், அழுக்கு மூட்டை ராமையா, பூசா என்ற பூவராகவன், ஒடுக்கி ஆகியோர்; நம்மைக் கவர்ந்து விடக்கூடியவர்கள். திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள சிக்கந்தர் சுல்தான் அவுலியா தர்ஹாவின் மேல் இஸ்லாமியர்களுக்கு உள்ள அதீத நம்பிக்கை. எந்தப் பிரச்சனை என்றாலும், வியாழன் இரவு தர்ஹாவில் தங்கியிருந்தால் வேண்டியது நடக்கும் என்ற எண்ணம்;. மலை மீதிருந்து தெரியும் மதுரைக் காட்சிகள், மலையேறும் பாதை, வழியில் பயமுறுத்தும் குரங்குகள், இரவு மலையில் தங்குபவர்களின் அனுபவங்கள் என ஒவ்வொன்றும் விரிவாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் அர்ஷியா[4].

மேலும், இஸ்லாமியர்களுக்கும், நாயக்கர்களுக்குமான உறவு முறைகள், தினமணி திரையரங்கம் மற்றும் அங்கு திரையிடப்படும் எம்.ஜி.ஆர் திரைப்படமும் அதன் ரசிகர்களும், கலக்குமுட்டி, கஞ்சா, என அக்கால போதைப் பொருட்கள், தெப்பக்குளத்தில் நடக்கும் படகுப் பயணம், இஸ்லாமியக் குடும்பங்களின் வாழ்க்கை முறைகள், ஆற்றில் துணி துவைக்கும் பெண் எதிர்கொள்ளும் சிரமம், விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்று பலவிடயங்களை இந்நாவலினூடாகப் பதிவு செய்திருக்கிறார் அர்ஷியா.

இவரது 'பொய்கைக்கரைப்பட்டி' நாவல் பன்னாட்டுத் தொழில் பெருக்கத்தினால் விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக விற்கப்படும் அவலத்தையும் இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் சுருங்கிச் செல்வதையும் இந்நாவல் விவரிக்கிறது. அதாவது விவசாய நிலங்கள் பெருமுதலாளிகள் வசம் போய்ச் சேர்வதையும் அதனால் குடும்பங்களுக்குள்ளாகவும் ஊருக்குள்ளாகவும் எழும் மோதல்கள் காலத்தின் சூழலில் தள்ளப்பட்டு அவதியுறும் மக்களின் நிலை முழுவதுமாகப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. அர்ஷியா இந்நாவல் மூலம் தன் சமூகச் சார்பையும், படைப்பு மூலத்தையும் வெளிப்படுத்துகிறார். சராசரி வாழ்க்கையில் இருக்கும் கஜேந்திரகுமார் சொற்ப முதலீட்டில், எத்தனங்கள் மிக்க, சூட்சுமங்கள் நிறைந்த ரியல் எஸ்டேட் தொழில் ஈடுபட்டு, அத்தொழில் மூலம் கொள்ளை லாபம் கண்டு, மிகப்பெரிய நிலையில் வளர்ச்சியடைந்து, மனைவி, துணைவி, மக்கள், வசதிகள் என உல்லாச வாழ்வுக்கு தயாராகிறார். வசதிகள் பெருகியதும் எடுபிடிகள், தொழில் விரிவாக்கம் செய்ய தரகர்கள், பாதுகாப்புக்கு அரசியல்வாதிகள், அதிகாரிகள் என சுற்றம் பெருகுகிறது.

முதலில் கஜேந்திரகுமார் நிலம் வாங்கவும், விற்கவும் உள்ளூர் மக்களோடு தொடர்புள்ளவர்களைத் தரகர்களாக்க முயலும்போது சமுத்திரக்கனி எனும் மனிதன் சிக்குகிறார். கிராமத்து டீக்கடையில் வெட்டிப் பேச்சுப் பேசி காலம் கடத்தும் இவர் தொடக்கத்தில் 'நிலம் வாங்கித் தந்தால் கமிஷன் கிடைக்கும்' என கஜேந்திரகுமார் கூற, புரோக்கர் வேலையா? என சீறி ஒதுங்குகிறார். பின்னர் 'மீடியேட்டர்னு சொல்லுங்க கம்பீரமாக கௌரவமாக' இருக்கலாம் என பசப்பு வார்த்தைகள் கூற அவரது பேச்சு சாதுர்யத்தால் சமுத்திரக்கனி மீடியேட்டராகி நிலங்களை வாங்கித் தருவதில் தன் வாழ்நிலையையும் உயர்த்திக் கொள்கிறார்.

பெற்ற மகனே படிப்பறிவற்ற பெற்றோரை ரேஷன் கார்டு வாங்கித் தருவதாய் அழைத்து வந்து நிலத்தை வஞ்சகமாக எழுதி வாங்கி கஜேந்திரகுமாரிடம் பணம் பெற்றுக் கொள்கிறான். பலரும் நிலத்தை விற்று விட்டு குடும்பம் குடும்பமாக திருப்பூருக்குப் பிழைக்கப் போகிறார்கள்.

மேலும் ஒரு விவசாயி நிலத்தை விற்கமாட்டேன் என கடைசிவரை போராடுகிறார். எதற்கும் பணியாத அவரது வயலுக்கு வரும் வாய்க்காலின் குறுக்கே கட்டிடம் கட்டி தண்ணீர் வராமல் தடுக்கிறார்கள். மனம் தளராது ஆழ்துளைக் கிணறு அமைத்து விவசாயத்தைத் தொடர்கிறார். உடனே அவரது வயலருகே பெரியதொரு போர் அமைத்து அவரது போரில் தண்ணீர் வராமல் தடுக்கிறார்கள். கட்டிடங்கள் உயர உயர அவரது வாழைத்தோட்டம் கருகியது. வேறு வழியின்றி அவ்விவசாயியும் நிலத்தை விற்கிறார்.

மதுரையின் புறநகர் பகுதியே நாவலின் களமாக அமைகிறது. அழகர்மலை அடிவாரத்தின் இயற்கை வனப்பும் சூழலும் அழகுற 'பொய்கைக் கரைப்பட்டி' விளங்குகிறது. விதவிதமான மரங்கள், ரகரகமானப் பறவைகள், நீர் நிலைகள், ரீங்கார ஒலிகள் என இயற்கையின் மடியில் தாலாட்டப்பெறும் கிராமம் மெல்ல மெல்ல நிலவணிகக் கொள்ளையர்களால் சிதைக்கப்படுவதை நாவலாக வரைந்திருக்கிறார் அர்ஷியா.

'கரும்பலகை' நாவல் ஆசிரியர்களின் பணியிடமாற்றம் குறித்தும் அவர்களின் அலைக்கழிப்பு, அதிகார வர்க்கத்தின் லாப நோக்கு போன்றவற்றைப் பேசுகிறது. எல்லைவரைவுகள் எதுவுமில்லையென்றாலும் எளியவர்களின் குரலை வரலாறு பதிவு செய்து கொள்வதில்லை. எழுபது தொடங்கிய காலந்தொட்டே இதுதான் நிலை. அதிகாரத்தில் இருப்பவர்கள் யாரும், வாழும் காலத்தில் பிரச்சினைகளைப் புரிந்துகொள்பவர்களாக இருப்பதில்லை. இதுவும் அதிகாரம் உருப்பெற்ற காலத்திலிருந்தே தொடர்வதுதான். நெறி தவறுவதை மீறலெனக் கொள்ளாமல் ஒழுக்க இயல்பாய் ஏற்றுக்கொண்டுவிட்ட கருத்தியலுக்கு எதிராய், வாழ்வியல் போராட்டம் நடத்தும் ஒரு பெண்ணின் கதை. ஒரு பெண் ஆசிரியையின்; பள்ளி வாழ்க்கையையும் பணி மாறுதலையும் மையமாகக் கொண்டு அதனூடான மற்ற பிரச்சனைகளையும் குறித்துப் பேசியிருக்கிறார் அர்ஷியா.

'நவம்பர் 8, 2016' - இதில் இந்திய தேசம் பண மதிப்பிழப்பினால் சந்தித்த பெரும் அவலம், பல குடும்பங்களின் இன்னல்கள், தடைபட்ட திருமணங்கள் அதனால் ஏற்பட்ட மரணங்கள், வங்கி வாசலில் சாமான்யர்கள் பட்ட துயரங்கள் எனச் சொல்லிச் செல்கிறது இந்நாவல்.

'சொட்டாங்கல்' நாவல் மேலோட்டமான வாசிப்புக்கு அரசியல் களம் சார்ந்த படைப்பு என்ற தோற்றத்தை உருவாக்கினாலும், உண்மையில் இது மனிதர்களுக்கு தங்கள் மண் மீது இருக்கும் தீராப் பிரியம் பற்றிய கதைதான். சூழ்நிலை காரணமாக மதுரை மண்ணை விட்டுப் பிரிய நேர்ந்தவர்களின் மீள்வருகையைப் பேசுவது ஒரு புறம் என்றால், உள்ளூரில் அடையாளமற்றுச் சுற்றிக் கொண்டிருப்பவர்கள் தங்களை நிலைநிறுத்தவும் தங்கள் அதிகாரத்தை வலுப்பெறச் செய்யவும் அதற்காக நிலங்களைக் கையகப்படுத்துவதையும் இந்நாவல் அடையாளப்படுத்துகிறது.

எஸ்.அர்ஷியாவின் 'கபரஸ்தான் கதவு' மற்றும் 'மரணத்தில் மிதக்கும் சொற்கள்' எனும் இரு சிறுகதை தொகுப்புகளில்; மரணம் மற்றும் இறுதிச் சடங்கு செய்யும் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார். மானுடத் துரோகம், சாவு குறித்த நம்பிக்கை, உறவுகளால் ஒதுக்கப்படுதல், சமூகத் துரோகம், ஹஜ் பயணம் குறித்த நம்பிக்கை, சகோதர பாசம், மதம் மாறி திருமணம் செய்து கொள்ளும் மகளைக் குறித்த தந்தையின் பாசப் போராட்டம், ஒரு திருடனின் மனிதாபிமானம், ஆண் பெண் தாம்பத்ய உறவின் சிக்கல்கள், உணவுக்குப் போராடும் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை முறை, காலமெல்லாம் உறவுகளுக்காக வாழ்ந்து இறந்து போனவர் அனைவருக்கும் நல்லவராகக் காணப்படும் போது சொந்த மனைவிக்கு மட்டும் அந்நியமாய்ப் போன அவலம் என புலம்பும் மனைவியின் துயரம் உட்பட அனைத்து விடயங்கள் குறித்தும் மிக நுட்பமாக இத்தொகுப்புகளில் பேசியிருக்கிறார் எஸ்.அர்ஷியா.

**முடிவாக:**

இஸ்லாமிய சமூகமானது பிற சமூகங்களிலிருந்து பழக்கவழக்கங்கள், பண்பாட்டு நடவடிக்கைகள், வழிபாடுகள், சடங்குகள், ஆடை ஆபரணங்கள் என்று தனித்து விளங்குகிறது. எனவே, அச்சமூகமானது ஒருவாறு மூடுண்ட தன்மையிலேயே இருக்கின்றது. எழுத்தாளன் என்பவன் மூடுண்டு கிடப்பதைத் திறந்து காட்டுகிறான். அந்த வகையில் எஸ். அர்ஷியா இஸ்லாமியர்களும் மிகவும் எண்ணிக்கைச் சிறுபான்மையினராக உள்ள உருது முஸ்லீம்களின் வரலாற்றினையும், அவர்களது இடப்பெயர்வு மற்றும் குடியேற்றத்தினை புனைவின் வழியாக வெளிக்காட்டுகிறார். அதுபோலவே உருவ வழிபாட்டிற்கு எதிராக இஸ்லாமிய சமயம் இருந்தபோதும் அவர்களிடையே உள்ள இறந்தோர் வழிபாடானது தர்கா வழிபாடாக உள்ளது. கோரிப்பாளையம் தர்கா வழிபாடு பற்றியும், தர்காவைச் சுற்றி நகர் உருவாக்கம் பற்றியும் சிறப்பாக பதிவு செய்துள்ளார். மேலும் தனித்துவமான இஸ்லாமியர்களின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ள அர்ஷியா அதேவேளையில் பொது சமூகம் பற்றி மிகநுட்பமாகப் பதிவு செய்துள்ளது தனித்து குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, ஆசிரியர் சமூகம் குறித்தும், விவசாய நிலங்களை வீட்டடி மனைகளாக்கி வெகுஜோராக விற்பனை செய்து வரும் ரியல் எஸ்டேட் முதலாளிகளின் அசுர வளர்ச்சியினையும், ஒரே நாளில் அச்சடித்த ரூபாய் நோட்டுகள் யாவும் செல்லாது என்று சொல்லி மக்களை பெரும் அவதிக்குள்ளாக்கிய அரசின் நிர்வாகத்தின் போதாமையையும், இறப்பு, அடக்க முறை தொடர்பான சடங்குகள், நம்பிக்கைகள், பரிகாரங்கள் பற்றியும், மதுரை உசிலம்பட்டி பகுதியில் இன்றுவரை பெரிய அளவில் நடந்துவரக்கூடிய மொய் விருந்து விழா குறித்தும், இந்நிகழ்வு அச்சமூகங்களிடையே ஏற்படுத்தி

வருகின்ற தாக்கம் மற்றும் பாதிப்புகளையும் பதிவு செய்துள்ளார்.[5] மேலும், இன்னும் ஒருபடி மேலாக சமூகத்தில் நடைமுறையில் இருந்து அருகிவிட்ட அல்லது முற்றிலும் மறைந்து போன 'வரப்புத் தாண்டுதல்' என்ற வழக்கம் பற்றி மிக நுட்பமான அவதானிப்புடன் எழுதியுள்ளார். அதற்கு இரு காரணிகள் முக்கியப் பங்கு வகித்துள்ளன. ஒன்று அவரது அரசியல் பார்வை, மற்றது பத்திரிக்கைத் தொழில். எஸ். அர்ஷியா இடதுசாரி தத்துவத்தைத் தனது அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொண்டவர். தமிழ்நாடு எழுத்தாளர்கள் சங்கத்தில் அங்கம் வகித்த இவர், அவ்வமைப்பு ஏற்படுத்திக் கொடுத்த மேடைகளின் மூலம் தனது கருத்தியல்களைக் கூர்தீட்டிக் கொண்டவர். எந்த விடயத்தையும் சொல்வதற்கும் எழுதுவதற்கும் உரிய மொழி வளமும், சுவாரஸ்யமான நடையும் கொண்டவர். மதுரை நிலத்திற்குரிய காட்சிப் பின்புலங்களைக் கொண்டவையாக, இஸ்லாமிய இன மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களை உள்ளது உள்ளபடி சித்திரிக்கும் இவருடைய படைப்புகளை இஸ்லாமிய இலக்கியத்தின் தனித்துவமான பங்களிப்பு என்றே கூறலாம்.

**சான்றெண் நூல்கள்:**


1. நாவலாசிரியர் அர்ஷியாவின்; பேட்டி
2. மேலது.,
3. இ.பேச்சிமுத்து, மு.செல்வக்குமார், பா.சத்யாதேவி (தொ. ஆ.), 2017, மதுரை-இலக்கியங்களில், ஆவணங்களில் வாழ்வியலில் ~அப்பாஸ்பாயின் தோப்பின் நிழல்கள் நீளமானவை|, மதுரை: மணிவாசகர் பதிப்பகம்.
4. ஆ.பூமிச்செல்வம் (தொ.ஆ.), 2015, மதுரைச் சிறுகதைகள் 2015, தஞ்சாவூர்: அன்னம் வெளியீடு.


●


**ரா.ரமேஷ்**
**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்**
**அமெரிக்கன் கல்லூரி, மதுரை**

**சே.பாலகிருஷ்ணன்**
**உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்**
**அமெரிக்கன் கல்லூரி, மதுரை**



## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!





**ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

7848 5827 2390 7986
5825 8817 1727 1919
5826 8818 2976

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

தனி இதழ் ₹ **45.00** / ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**. / ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.




# *PRESS START:* GAMIFIED SOLUTIONS FOR ELEVATING EDUCATOR PROFESSIONAL DEVELOPMENT

**- Akshaya M**

**Introduction**

Gamification, a concept widely recognized in education and training, involves the integration of game-like elements such as points, rewards, challenges, and leaderboards into non-game contexts. Its primary purpose is to enhance user engagement, motivation, and learning by leveraging the intrinsic human desire for achievement, competition, and recognition. When applied to Continuous Professional Development (CPD), gamification offers a dynamic approach to addressing long-standing challenges, such as low participation and disengagement among educators. CPD programs, designed to enhance professional skills and keep educators updated with evolving practices, often fail to maintain sustained interest due to their conventional, lecture-driven formats. By embedding gamified strategies, CPD programs can become more interactive, enjoyable, and impactful.

The traditional structure of CPD often involves passive learning modes, such as lectures or standardized modules, which may lack contextual relevance or fail to cater to the diverse needs of adult learners. Educators, juggling demanding schedules, may perceive such programs as monotonous or burdensome, leading to low attendance and minimal knowledge retention. Furthermore, many CPD programs struggle to create a sense of community and collaboration among participants, which is vital for promoting meaningful professional growth. The disconnect between the design of CPD programs and the motivational needs of adult learners highlights a critical issue: How to make professional development engaging, relevant, and effective?

Gamification provides a solution to this engagement crisis by transforming the learning experience into a participatory and rewarding journey. For instance, incorporating elements like progress tracking, badges for accomplishments, and collaborative challenges can create a sense of achievement and encourage continuous participation. Educators are no longer passive recipients of information but become active players in their professional growth, motivated by clear goals, immediate feedback, and opportunities to showcase their expertise. Gamification aligns particularly well with adult learning principles, emphasizing self-direction, practical application, and problem-solving.

The purpose of this paper is to present a simplified theoretical explanation of how gamification enhances CPD by increasing engagement, motivation, and collaboration among educators. Drawing from established learning and motivational theories, such as Self-Determination Theory (SDT), Experiential Learning Theory, and Social Learning Theory. This paper outlines how gamified strategies can meet the psychological and professional needs of educators. It also examines the mechanisms through which game elements create a more immersive and meaningful CPD experience.

By addressing the root causes of disengagement and leveraging the motivational power of gamification, CPD programs can shift from being an obligation to an opportunity for growth and connection. This theoretical exploration not only highlights the benefits of gamification but also provides a framework for designing CPD programs that inspire sustained participation and foster lifelong learning. Through a gamified approach, CPD can evolve into a transformative experience that equips educators with the skills, confidence, and enthusiasm to thrive in their roles.

This paper seeks to contribute to the growing discourse on gamification in education, offering insights into its application in CPD and encouraging further exploration of its potential to revolutionize professional development.

**Gamification in CPD**

In the context of Continuous Professional Development (CPD), gamification's potential lies in its capacity to address adult learners' unique needs, promoting an environment that is both engaging and practical. This section explores how gamification aligns with three key theories: Self-Determination Theory (SDT), Experiential Learning Theory, and Social Learning Theory. Together, these frameworks provide a robust justification for the use of gamification in CPD.

**Self-Determination Theory (SDT)**

Self-Determination Theory, developed by Deci and Ryan, emphasizes the role of intrinsic motivation in fostering sustained learning and engagement. According to SDT, individuals are most motivated when three core psychological needs are met: autonomy, competence, and relatedness. Gamification directly addresses these needs, making it a powerful tool for enhancing engagement in CPD.

**a. Autonomy**

Autonomy, the ability to make choices and take ownership of actions, is often lacking in traditional CPD programs due to rigid structures and predetermined content, leading to disengagement among educators. Gamification addresses this by introducing flexibility and choice, enabling participants to tailor their learning experience. For example, educators can select challenges or tasks aligned with their professional goals, explore multiple "paths" or "levels" to progress at their own pace, and engage in scenario-based challenges that allow them to choose their approach. By fostering a sense of control and independence, gamification enhances educators' investment in their CPD journey, encouraging active participation.

**b. Competence**

Competence, the drive to master tasks and achieve a sense of accomplishment, is often undermined in traditional CPD programs due to a lack of immediate and tangible feedback, leaving participants uncertain about their progress. Gamification addresses this by incorporating features like points, badges, and progress bars that provide real-time feedback and recognition of achievements. Educators can earn badges for completing modules, solving challenges, or mastering specific skills, while leaderboards and scoreboards highlight individual and team progress, fostering a sense of achievement. Incremental rewards, such as unlocking new content or earning certificates, further motivate participants to persist in their CPD activities and strive for excellence, creating a positive reinforcement loop.

**c. Relatedness**

Relatedness, the need for meaningful connections with others, is often neglected in traditional CPD programs that provide limited opportunities for collaboration or interaction. Gamification addresses this by incorporating social features that foster community and teamwork, such as team quests or collaborative challenges where educators work together to solve problems, peer recognition through upvotes, comments, or shared leaderboards, and virtual communities or forums for exchanging ideas, sharing achievements, and offering support. By facilitating social interaction, gamified CPD programs enable educators to build networks, share knowledge, and feel part of a supportive learning community.

In sum, gamification satisfies the three core needs identified by SDT—autonomy, competence, and relatedness—making it an effective strategy for enhancing intrinsic motivation and engagement in CPD.

**Experiential Learning Theory**

Experiential Learning Theory, developed by David Kolb, emphasizes the importance of learning through experience. According to Kolb, effective learning is a cyclical process involving four stages: concrete experience, reflective observation, abstract conceptualization, and active experimentation. Gamification naturally aligns with this model by providing hands-on, immersive experiences that promote deep learning.

**a. Concrete Experience**

Gamification enables educators to engage in simulated, real-world tasks that reflect their professional challenges, making learning practical and meaningful. For instance, a gamified CPD module on classroom management might present interactive scenarios where educators address disruptive student behavior, while role-playing games could allow them to experiment with various teaching strategies in a risk-free environment. These immersive activities provide concrete experiences directly relevant to their roles, ensuring that professional development is both engaging and applicable.

**b. Reflective Observation**

Reflection, a crucial aspect of experiential learning, allows educators to analyze their experiences and identify areas for improvement, and gamification facilitates this process effectively. It incorporates instant feedback mechanisms to highlight successes and mistakes, opportunities to replay scenarios or revisit tasks to refine approaches, and peer or mentor feedback within collaborative games to foster deeper insights. By encouraging reflective observation, gamified CPD ensures that participants learn from their experiences and transform lessons into actionable strategies for professional growth.

**c. Abstract Conceptualization**

Abstract conceptualization, which involves synthesizing knowledge and forming new ideas, is seamlessly integrated into gamified CPD programs by connecting practical activities with theoretical concepts. For example, after completing a game-based challenge, educators can engage in debriefing sessions to analyze their performance and discuss relevant pedagogical theories, while "knowledge checkpoints" within gamified modules test their understanding of key principles before advancing. This blending of theory and practice ensures that educators not only develop new skills but also grasp the underlying rationale for their application, deepening their professional understanding.

**d. Active Experimentation: Testing New Strategies**

The final stage of Kolb's learning cycle involves applying newly acquired knowledge in real-world contexts, and gamification supports this by encouraging educators to experiment with different approaches and learn from the outcomes. For instance, after completing a gamified module on differentiated instruction, educators can implement their learning in their classrooms and share their experiences through the platform. Features like progress tracking and rewards further incentivize ongoing experimentation and skill refinement. By aligning with Kolb's experiential learning cycle, gamified CPD programs ensure that professional development is practical, reflective, and transformative.

**Social Learning Theory**

Social Learning Theory, proposed by Albert Bandura, emphasizes the role of observation, imitation, and social interaction in learning. According to Bandura, individuals learn not only through direct experience but also by observing and interacting with others. Gamification leverages these principles to create collaborative, community-driven CPD experiences.

**a. Observation and Modeling**

In traditional CPD settings, opportunities to observe best practices or model behaviors are limited. Gamified CPD programs overcome this limitation by incorporating features such as Video-based scenarios where participants can observe effective teaching practices.

Role-playing games that allow educators to model and practice new strategies.

Virtual mentors or avatars that demonstrate best practices within the game environment.

These features provide educators with concrete examples to emulate, enhancing their understanding and confidence.

**b. Social Interaction and Collaboration**

Social Learning Theory emphasizes the role of interaction in fostering knowledge sharing and mutual support, and gamified CPD programs leverage this by integrating collaborative elements. Team-based challenges encourage participants to work together and pool their expertise, while social leaderboards promote friendly competition and interaction. Features like discussion forums and chat options provide

spaces for exchanging ideas and seeking advice. These collaborative components cultivate a sense of community, making the learning experience more engaging, enjoyable, and impactful.

**c. Peer Recognition and Motivation**

Recognition from peers is a powerful motivator for reinforcing positive behaviors, and gamification incorporates this through features like points or badges awarded for helping others or contributing to discussions, as well as voting systems that enable participants to acknowledge valuable contributions. These mechanisms inspire educators to actively engage in the CPD process, knowing their efforts are valued and appreciated.

By aligning with Social Learning Theory, gamification ensures that CPD programs are interactive, collaborative, and community-driven, fostering a supportive environment where educators can learn and grow together.

Thus, the integration of gamification into CPD is strongly supported by Self-Determination Theory, Experiential Learning Theory, and Social Learning Theory. By addressing core psychological needs, promoting hands-on experiences, and fostering social interaction, gamification transforms CPD into a dynamic, engaging, and effective process. These theories provide a robust foundation for designing gamified CPD programs that not only enhance motivation and engagement but also ensure meaningful professional growth for educators.

Challenges and Considerations

While gamification offers numerous benefits in CPD, it is essential to acknowledge potential drawbacks and challenges that may arise in its implementation.

**Overemphasis on Competition**

Gamification often incorporates competitive elements like leaderboards and point systems, which can drive engagement. However, for some participants, excessive competition may cause stress or anxiety, particularly for those who are not naturally inclined to compete or feel overwhelmed by the pressure to perform. If not carefully balanced, competition can undermine the collaborative and supportive environment that CPD aims to promote, discouraging participation from individuals who may feel left behind or demotivated. It is crucial to design gamified CPD programs with a focus on personal progress and intrinsic motivation, rather than solely on external rewards or rankings.

**Perception of Gamification as Gimmicky or Irrelevant**

Some educators may find gamification gimmicky or irrelevant to their professional development. For those unfamiliar with or resistant to game-based learning methods, the use of game-like elements might seem superficial or unsuitable for serious professional growth. Over-reliance on gamification may lead to skepticism about its educational value. To address this, gamification should be integrated thoughtfully into CPD programs, ensuring that it aligns with meaningful learning objectives and provides real-world applications that resonate with educators' needs and goals.

By recognizing and addressing these potential challenges, gamification can be implemented in a way that enhances CPD without detracting from its effectiveness.

**Conclusion**

Gamification, rooted in psychological and learning theories like Self-Determination Theory, Experiential Learning, and Social Learning Theory, offers a promising solution to enhance engagement and motivation in CPD. By incorporating elements like autonomy, competence, and collaboration, gamification can transform traditional CPD programs into more interactive, enjoyable, and effective learning experiences. However, to fully understand its impact, further research and experimentation are needed to explore how gamified methods can be effectively applied in real CPD settings. Future studies should assess the long-term outcomes and potential challenges of gamification to refine its implementation in professional development programs.

**References**


1. Deci, E.L., & Ryan, R.M. (1985). Self-Determination Theory: Psychological Inquiry and Educational Applications.
2. Kolb, D.A. (1984). Experiential Learning: Experience as the Source of Learning and Development.
3. Bandura, A. (1977). Social Learning Theory.
4. Kapp, K.M. (2012). The Gamification of Learning and Instruction: Game-Based Methods and Strategies for Training and Education.
5. Deterding, S., Dixon, D., Khaled, R., & Nacke, L. (2011). From Game Design Elements to Gamefulness: Defining Gamification.


●



Research Scholar, Research Department of English

Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

### முன் வெளியீட்டுத் திட்டம்

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்




**தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு**

**2400 பக்கங்கள்**

விலை ~~ரூ.3000/-~~

முன் வெளியீட்டுத் திட்டத்தில்

**ரூ.1500/-** மட்டுமே!

(தபால் செலவு உட்பட)

1/8 டெம்மி அளவு தரமான தாள்
கெட்டி அட்டை வடிவமைப்புடன்

முன்வெளியீட்டுத் திட்டத்தில் பணம் செலுத்திப் பதிவு செய்துகொள்ளலாம்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in




Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7TH of every month Posted at Egmore RMS, Patrika Channel, chennai - 08
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

தமிழ் வளர்ச்சித் துறை • நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

# அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்




தமிழ்நாடு அரசின்

**மக்கள் பதிப்பு**

**100**

தொகுதிகள்

முதற்கட்டமாக

**10**

தொகுதிகள்

தற்போது விற்பனையில்

3300 பக்கங்கள்

**ரூ 1000/–**

10 தொகுதிகளும் சேர்த்து

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in